
# குடிநீர், பாசன நீர் பஞ்சம்! பஞ்சம்! நீர்ப்பஞ்சம் நீங்க நிரந்தரத் தீர்வு என்ன? தமிழ்நாட்டுத் தலைவர்களே! மாணவ மணிகளே! தீரச் சிந்தியுங்கள்! உடனே செயல்படுங்கள்!



காற்றும் நீரும் வெப்பமும் இயற்கை தரும் பெருங்கொடைகள்.

காற்றை மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்ற அளவு, செயற்கையாக உண்டாக்க முடியாது.

அதேபோல் நீரையும் பயன்பாட்டுக்கு வேண்டிய அளவில், செயற்கையாக உண்டாக்க முடியாது.

நிலத்தில் விழும் ஒவ்வொரு துளி நீரும் மண்ணில் உறிஞ்சிப் போவது இல்லை; நிலத்தடியில் இறங்கிப் போவதும் இல்லை.

நிலத்தில் விழும் மழைத்துளி நீர் முதலில் பள்ளத்தை நோக்கிப் பாய்ந்து ஓடுகிறது. அப்படி ஓடும் நீரை அவ்வப்போது ஊர்மக்கள் தேக்கி வைத்துக் கொள்ள வேண்டும். அதை மக்களே முன்வந்து செய்ய வேண்டும். அப்படித் தேக்கி வைக்கப்படுவது தான் ஊருணி; ஊர்க்குளம். குடிநீருக்கும், குளிக்கவும் அதை நாம் பயன்படுத்துகிறோம், அது ஊர்ப் பொதுப் பயன்பாட்டுக்கு.

**அந்த எளிய பணியைத் தமிழ்மக்கள் செய்யவில்லை; இந்தியப் பொது மக்கள் எல்லோரும் செய்யவில்லை.**

2017 பிப்பிரவரி முதலே தமிழகம் குடிநீரின்றித் தத்தளிக்கிறது.

1967 முதல் 2017 வரை இரண்டு திராவிடக் கட்சிகளும் மக்களை மக்களாகக் கருதி ஆளவில்லை.

ஊர்க்குளங்களைக் கூடக் காப்பாற்றத் துப்பில்லாத - மனமில்லாத - பொறுப்பில்லாத இந்த இரண்டு திராவிடக் கட்சிகளின் ஊழல் மன்னர்களும் - காவிரி காய்ந்தால் - கருநாடகத்தைக் குறிவைத்து, அதைச் சுற்றி நின்று இலாவணி பாடிக் கொண்டிருக்கிறார்கள். தமிழக மக்களும் அரசு செய்ய வேண்டியதைக் கோருவதில் - சிக்கலை அல்லது பிரச்சனையை மட்டும் சார்ந்து நிற்காமல், கட்சி வழிசார்ந்து - பிரிந்து, பிரிந்து நிற்கிறார்கள்.

கருநாடக மொழி மக்கள் காவிரிச் சிக்கலில் கட்சிகளின் வழி பிரிந்து நிற்பது இல்லை; காவிரி நீர்ப்பங்கீடு சிக்கலோடு அவர்கள் ஒன்றித்து விடுகிறார்கள்; தத்தம் கட்சியை இதில் ஒதுக்கி வைத்து விடுகிறார்கள்.

கருநாடகக் கட்சிகளின் தலைவர்களும் காவிரிச் சிக்கலில் கட்சி வழியில் தனித்தனியே நின்று பேசுவது இல்லை; ஒன்றிணைந்து உள்ளூரில் செயல்படுகிறார்கள்; பிரதமரையும் மற்ற அமைச்சர்களையும் ஒன்றிணைந்து சென்று பார்க்கிறார்கள்.

ஆனால் தமிழகத் தலைவர்கள் அப்படி இல்லையே! அது முறைதானா?


சுவடி : 40
ஏடு : 11
மே 2017
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**‘சிந்தனையாளன்’**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

எடுத்துக்காட்டாக, காவிரிச் சிக்கலில், 1974 முதல், தமிழர்களுக்கு, இந்திய அரசு அநீதி செய்கிறது.

**1977 முதல் 1987 வரை உள்ள காலத்தில் முதல மைச்சர் எம்.ஜி.ஆரும், எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதியும், 57 தமிழக நாடாளு மன்ற உறுப்பினர்களையும் உடனழைத்துக் கொண்டு போய் அவ்வப்போதைய பிரதமர்களைப் பார்த்து, காவிரி பற்றி அழுத்தம் தந்தார்களா? ஏன் அப்படிச் செய்யவில்லை?**

**1989 முதல் 2011 வரை மாறி, மாறி முதலமைச்ச ராக வந்த மூத்த தலைவர் கலைஞரும், செய லலிதாவும் ஒன்றிணைந்து, 57 தமிழக நாடாளு மன்ற உறுப்பினர்களுடன் தில்லிக்குப் போய்ப் பிரத மரைப் பார்த்தார்களா? அப்படி அவர்கள் பார்க் காதது - கடமை தவறுதல் அல்லவா?**

**இந்த இரண்டு ஊழல் கட்சிகளுக்கும் மாற்றாக இங்கு எந்தக் கட்சியும் தலைதூக்க முடியாமல் இருந்திட-தமிழக மக்களும், கட்சிகளின் தலைவர் களும், மாணவர்களும், இளைஞர்களும் தத்தம் கட்சி வழியில் பிரிந்து நின்று, சிக்கல் வழியில் ஒன்று சேராமல்-தமிழ்மக்கள் தலையில் மண்ணை வாரிப் போட்டதுதான் மிச்சம்!**

நீர்ப் பஞ்சம் ஏன்? எதனால்?

தமிழ்நாட்டில் உள்ள சிறிய, பெரிய 41,000 ஏரிகளில் - ஒரு பத்தாயிரம் ஏரிகளையாவது, கடந்த 50 ஆண்டு களில் ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்றி, வாய்க்கால்களை விளம்பி, முழுக் கொள்ளளவுக்கும் தூர்வாரிச் செப்பனிடாதது ஏன்? ஏன்? நீர்ப்பிடிப்புக்கு வழிகோலாதது ஏன்? ஏன்? அதுவே உண்மையான காரணம்.

**நீர்வளம் குறைவாக உள்ள தமிழ்நாட்டில் - இந்த ஆண்டில் கோடை வெப்பம் தாங்காமல் சுருண்டு விழுந்து 2017இல் சில தமிழர்களாவது சாவார்கள்.**

**குடிநீரும், போதிய உணவும் இன்றித் தமிழ் மக் களும்; தீனியும் நீரும் இன்றி ஆடு மாடுகளும் 2017இல் நூற்றுக்கணக்கிலும், ஆயிரக்கணக்கிலும் சாகப் போகிறார்கள். இது உறுதி.**


**அய்யகோ! தமிழ்ப் பெரியோர்களே!**
**சிக்கல் வழி நில்லுங்கள்!**
**பிரச்சனை வழியில் சிந்தியுங்கள்! நில்லுங்கள்!**
**கட்சி வழியில் சிக்கல்களை அணுகாதீர்கள்!**
**ஊழல் கட்சிகளை ஓட ஓட விரட்டுங்கள்!**
**இனியொரு விடுதலைப் போருக்கு ஆயத்தம் ஆகுங்கள்!**

**18.4.2017** **- வே. ஆனைமுத்து**

## பெரம்பலூரில் பெரியார் அம்பேத்கர் புத்தக மையம் திறப்பு விழா

பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் 9.4.2017, ஞாயிறு காலை 9.30 மணியளவில் ''பெரியார் - அம்பேத்கர் புத்தக மைய''த்தை, பெரியார் - அம்பேத்கர் கொள்கையாளர் தோழியர் திருச்சி திருமதி. க. சிவபாக்கி யம் கணேசன் அம்மையார் திறந்துவைத்தார். அக்ரி. ந. ஆறுமுகம் அவர்களின் முன்முயற்சியால் நூலகம் திறக்கப்படுவதை அறிந்த முன்னாள் மத்திய அமைச்சரும் தி.மு.க.வின் கொள்கைப் பரப்புச் செயலாளருமான ஆ. இராசா அவர்கள் நூலகத்தைப் பார்வையிட்டு அக்ரி. ந. ஆறுமுகம் அவர்களைப் பாராட்டிச் சென்றார். பெரம்பலூர் மாவட்டத் திராவிடர் கழகத் தலைவர் சி. தங்கராஜ் தலைமையில், தோழர் ஆதிசிவம் முன்னிலையில், மருத்துவர் குணகோமதி ஆறுமுகம் புத்தகத்தின் முதல் விற்பனையைத் தொடங்கி வைத்தார். ஜெயக்கொடி கருணாகரன், குணவதி ஸ்டாலின், செல்வி தமிழ் இனியன், அஞ்சலி, கருத்தம்மா ஆகிய தோழியர்கள் புத்தகத்தைப் பெற்றுக்கொண்டனர். வரகூர் நாராயணசாமி, வடக்கலூர் ந. இராமலிங்கம், பேராசிரியர் தங்கபிரகாசம், பேராசிரியர் க. சிவநேசன், தோழர் தயாளன், சி. ஸ்டாலின், ஆசிரியர் கவிஞர் அகவி, இரா. தமிழ்ச்சுடர், ந. கருணாகரன், பூவை. இராசா, கலையரசி, என். செல்லதுரை, மகாலிங்கம், செல்வமணி, குரு. இரமேஷ்குமார், க. விடுதலைத்தமிழன் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர். வழக்குரைஞர் இரா. ஸ்டாலின், ஆ.கு. தமிழ் இனியன் அனைவரையும் வரவேற்றனர். நிறைவாக ஆ.கு. சித்தார்த்தன் நன்றி கூறினார். பெரியார், அம்பேத்கர் இயக்கத்தவர்களும், புத்தக ஆர்வலர்களும் விழாவில் திரளாகக் கலந்துகொண்டனர்.

## தாதம்பட்டி பெரியார் பெருந்தொண்டர்; ப.குழந்தைசாமி மறைந்தார்



சேலம் தாதம்பட்டிக்கு அருகில் உள்ள காமராசர் நகரில் வாழ்ந்த பெரியார் பெருந்தொண்டர் ப.குழந்தைசாமி 11-4-2017 அன்று மறைவுற்றார். அவர் சில மாதங்களாக உடல் நலமின்றி இருந்தார். தாதம்பட்டி கு. வெங்க டேசன் இறுதி நிகழ்ச்சியில் பங் கேற்றார். 24-4-2017 அன்று பிற்பகல் 4 மணி அளவில் மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே.ஆனைமுத்து, மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் சி.பெரியசாமி, சேலம் மாவட்டச் செய லாளர் செ.ஆனையப்பன் ஆகியோர் அவர் இல்லத் துக்குச் சென்று துயரத்தில் பங்கேற்றனர்.

# தமிழுரைத் தளைப்படுத்தவரும் இந்தி ஆதிக்கத்தைத் தகர்த்தெறிவோம்

- க. முகிலன்

**ஆர்.எஸ்.எஸ்.**இன் தலைவராக முப்பது ஆண்டுகள் இருந்தவரும் அதன் தத்துவத் தந்தையாகக் கருதப்படுபவருமான எம்.எஸ்.கோல்வால்கர், "இசுலாமியர்கள் எந்த உரிமையும் கோராமல் இரண்டாந்தரக் குடிமக்களாக இருப்பதற்கு ஒப்புக் கொண்டால் இந்தியாவில் வாழ்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்" என்று சொன்னார். வாழ்வின் பெரும்பகுதியை ஆர்.எஸ்.எஸ்.இல் பிரச்சாரகராகச் செலவிட்ட பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியில் மூன்று ஆண்டுகளுக்குள் இசுலாமியர்கள் கிட்டத்தட்ட இரண்டாந்தர குடிமக்கள் நிலைக்குத் தள்ளப்பட்டு அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர். அதனால்தான் உத்தரப் பிரதேசத்தில் இருபது விழுக்காட்டினராக உள்ள முசுலீம்களில் சட்டப் பேரவைத் தேர்தலில் 403 இடங்களில் ஒரு இடத்தில் கூட முசுலீமை வேட்பாளராக பா.ச.க. நிறுத்தவில்லை.

இப்போது இந்திமொழி பேசாத-இந்தியாவின் பெரும்பான்மையினராக உள்ள பிறமொழி பேசும் மக்களை, "நீங்கள் இந்திமொழியை ஏற்கவேண்டும், இந்தியைக் கற்க வேண்டும்; இந்தி மொழியில்தான் பேசவும் எழுதவும் வேண்டும்; இல்லாவிட்டால் நீங்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படுவீர்கள்" என்று நரேந்திர மோடி தலைமையிலான நடுவண் அரசு அறிவித்துள்ளது.

இந்தி ஆட்சி மொழிக்கான நாடாளுமன்ற நிலைக்குழு 2011ஆம் ஆண்டு அதன் அறிக்கையை மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது நடுவண் அரசிடம் அளித்தது. இந்தியைத் தீவிரமாகத் திணிக்கும் இந்தப் பரிந்துரைகளால் கடும் எதிர்ப்பு ஏற்படும் என்று எண்ணிய மன்மோகன் ஆட்சி அந்த அறிக்கையைக் கிடப்பில் போட்டது. "அஞ்சாநெஞ்சன்" நரேந்தரமோடி அந்த அறிக்கையை ஒரு புதையல் போல் கண்டெடுத்து, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று, அதன்படிச் செயல்பட வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு ஆணையிட்டுள்ளார். நாடாளுமன்ற நிலைக்குழுவில் இருந்த 30 பேர்களில் 28 பேர் இந்தி மொழி பேசும் மாநிலத்தவர்கள். அவர்கள் பரிந்துரைத்த 117இல் 110 பரிந்துரைகளுக்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கினார்.

இது குறித்து நடுவண் அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் உள்ள விவரங்கள் : பள்ளிக் கல்வித் திட்டத்தில் இந்தி கட்டாயப் பாடமாகச் சேர்க்கப்பட வேண்டும். முதல் கட்டமாக சி.பி.எஸ்.இ. மற்றும் கேந்திர வித்தியாலயா பள்ளிகளில் 10ஆம் வகுப்பு வரை இந்தி கட்டாயப் பாடமாக வைக்கப்படும்.

குடியரசுத் தலைவர், நடுவண் அமைச்சர்கள் உள்ளிட்ட தலைவர்கள், குறிப்பாக யாருக்கெல்லாம் இந்தி தெரியுமோ, அவர்கள் இனி நாடாளுமன்றத்திலும் பொது விழாக்களிலும் இந்தியில் தான் பேசவேண்டும்.

இந்தி மொழி பேசாத மாநிலங்களில் அமைந்துள்ள பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்களில் தேர்வுகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளில் இந்தியில் பதிலளிப்பதற்கான வாய்ப்பைக் கட்டாயம் ஏற்படுத்த வேண்டும்.




விமானங்களில் வழங்கப்படும் செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்கள் 50 விழுக்காடு இந்திமொழியில் இருக்க வேண்டும். விமானப் பயணச் சீட்டுகள், தொடர் வண்டியின் பயணச் சீட்டுகளில் இந்தி கட்டாயம் இடம் பெற வேண்டும்.

அரசு தரும் விளம்பரங்களில் இந்திக்கே முதன்மையான இடம் அளிக்கவேண்டும்.

நடுவண் அரசின் தேர்வுகளை எழுதுவதற்கு இந்தியைக் கற்றிருக்க வேண்டும் என்கிற பரிந்துரைக்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்க மறுத்துவிட்டார். ஆயினும் இனி நடுவண் அரசின் தேர்வுகளை எழுத கட்டாயம் இந்தியைக் கற்றிருக்க வேண்டும் என்கிற நடைமுறை இருக்கும் என்பது உறுதி. ஆட்சிமொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாத அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்புச் சட்டத்தில் 17ஆம் பாகத்தில் விதி 343 முதல் 351 வரை இந்தி ஆட்சிமொழி அல்லது அலுவல் மொழி என்பது பற்றி மட்டுமே கூறப்பட்டுள்ளன. 1965 முதல் இந்தி மட்டுமே ஆட்சி மொழியாக இருக்கும் என்கிற அரசமைப்புச் சட்ட ஏற்பாட்டைத் தமிழர்கள் கடுமையாக எதிர்த்ததால் பிரதமராக இருந்த நேரு இந்தி பேசாத மக்கள் விரும்புகின்றவரையில் ஆங்கிலமும் இணை ஆட்சி மொழியாக நீடிக்கும் என்று வாக்குறுதி அளித்தார்.

இந்த அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு எதிராக நரேந்திர மோடியின் ஆட்சி இந்தி பேசாத மாநிலங்களில் எல்லாத் துறைகளிலும், நிலைகளிலும் இந்தி இருக்கவேண்டும் என்று அறிவித்திருப்பது, இந்தி பேசாத மாநிலங்களின் தேசிய மொழிகளை, பண்பாட்டை, நாட்டின் பன்மைத்துவத்தை அழிப்பதாகும். இந்தி பேசாத மக்கள் தங்கள் கனவுகளைக் கூட இந்தியில் காணவேண்டும் என்பது போன்ற இந்த இந்தித் திணிப்பை முறியடிப்போம். இல்லையேல் "இந்தி"ச் சிறையின் பூட்டை உடைத்து நமக்கான தனிச்சுதந்தரத் தமிழ் நாட்டை அமைப்போம்.

# மக்கள் நாயகம் என்றால் என்ன?
# மாநிலங்களில் நடப்பவை -
# சாதிவாத - குடும்ப ஆட்சிகளா?
# தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஆட்சிகளா?

மக்கள் நாயக அரசு என்பது என்ன என்கிற வினாவுக்கு, நேரடியாக விடை சொன்னவர் இங்கிலாந்தில் வாழ்ந்த ஜெர்மி பெந்தாம் (Geremy Bentham) என்கிற அரசியல் மேதை ஆவார்.

**"ஓர் ஆட்சி நல்லதா, கெட்டதா என்பதற்கு இலக்கணம்-மிக அதிகபட்சமான மக்களுக்கு மிக அதிக பட்ச மகிழ்ச்சியைத் தர ஏற்ற ஆட்சியை அமைத்து நடத்துவதே ஆகும்" என்பதே அவர் தந்த விடை. (It is the greatest happiness of the greatest number that is the measure of right or wrong).**

இந்தக் கோட்பாட்டை அவர் 1776ஆம் ஆண்டில் வெளியிட்டார். இந்தக் கோட்பாட்டின் மூலக்கரு 1768இல் ஜோசப் பிரீஸ்டிலி என்பவர் தந்ததாகும்.

அத்துடன் ஆணுக்கும் பெண்ணுக்கும் முழு அளவில் சம உரிமை தரப்பட வேண்டும் (Complete equality between sexes) என்பதையும் மக்கள் நாயகத்தின் இரண்டாவது இலக்கணமாக அவர் சொன்னார்.

இந்தியாவில் இந்துக்கள் 80% பேர் இருக்கிறார்கள். இஸ்லாம், கிறித்துவர், பவுத்தர், சமணர், பார்சி மதத்தினர் 20% பேர் இருக்கிறார்கள்.

**இந்திய அளவில் உழைக்கும் மக்களாக இருக்கிற கீழ்ச்சாதி மற்றும் கீழ்த்தட்டு மக்களுக்கு அதிகபட்ச நன்மை செய்யும் ஆட்சி-விடுதலை பெற்ற இந்தியாவில், எப்போதாவது நடந்ததா என்று நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போம்.**

சாதிய வாழ்க்கை முறையையே 1800 ஆண்டுகளாக மேற்கொண்டிருக்கிற மக்களை ஆளும் ஆட்சியில், எல்லா வர்ண சாதி, எல்லா உள்சாதி வகுப்பு மக்களும் தங்கள் தங்கள் பங்கை எல்லாப் பொது அமைப்புகளிலும் பெற்றிருக்க வேண்டும் எனத் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. 1919 முதல் வரிந்து கட்டிக்கொண்டு பாடுபட்டார்.

அதாவது, ஊராட்சி, நகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம்; மற்றும் கட்சி அமைப்புகள், மாநில அரசுப் பணிகள், மத்திய அரசுப் பணிகள் எனப்படும் எல்லா வற்றிலும்-வெகுமக்களாக உள்ளவர்கள் உரிய அளவில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்க வேண்டும் என்பதே, 1919-1973ஆம் ஆண்டுகளில் பெரியார் கொண்டிருந்த மக்கள் நாயகக் கொள்கை ஆகும்.

மாமேதை அம்பேத்கர், சமதர்மவாதி ராம் மனோகர் லோகியா ஆகியோரின் அரசு பற்றிய - மக்கள் நாயகம் பற்றிய கோட்பாடுகளும் அத்தன்மை உள்ளவைகளே. இதை இறுதியில் பார்ப்போம்.

இந்திய அளவிலும் மாநிலங்கள் அளவிலும் எந்தெந்த மட்டத்தில் உள்ள பொது அமைப்பிலாவது இந்த மக்கள் நாயகக் கோட்பாடு இருந்ததா? இருக்கிறதா? என்பதை ஆர அமர நாம் எண்ணிப் பார்ப்போம்.

சுதந்தர இந்தியாவுக்கான நாடாளுமன்றம் - சுதந்தரம் வருவதற்கு எட்டு மாதங்களுக்கு முன்னரே, 9.12.1946இல் தொடங்கப்பட்டது.

ஆனால் சுதந்தரம் என்பது 15.8.1947இல்தான் வந்தது. எல்லா மக்களுக்கும் வாக்குரிமை தந்த தேர்தல் 1952இல்தான் வந்தது.

அதற்கு முன் வெள்ளையர் காலத்தில், 1946இல் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியச் சட்டமன்றம் என்பதே - (Central Legislative Assembly) என்பதே நாடாளுமன்றமாக - அரசமைப்புச் சட்ட அவையாக (Constituent Assembly) மாற்றப்பட்டு, அந்த அவையால், இந்திய அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது.

அந்த அவையைத் தேர்ந்தெடுத்த இந்திய வாக்காளர்கள் விழுக்காடு எத்தனை?

இந்திய சட்டமன்றத்துக்கு 1946 தேர்தலில் வாக்குப் போட உரிமை பெற்றிருந்தவர்கள் 4% பேர்களே! மாகாணச் சட்டமன்றங்களுக்கு வாக்குப் போட உரிமை பெற்றிருந்தவர்கள் 12% பேர்களே!

**இது பச்சை மோசடி அல்லவா?**

**இதை மோசடி என்று அன்றே கண்டனம் செய்த ஒரே மனிதர் பெரியார் ஈ.வெ.ரா. தான்.**

அன்று, மெத்தப்படித்தவர்கள் நிறைய பேர் இருந்தார்கள்.

அவர்கள் எல்லோரும் இந்த ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டார்கள்.

சரி!

15.8.1947இல் விடுதலை வந்துவிட்டது. 1950இல், 21 வயது நிரம்பிய எல்லோருக்கும் வாக்குரிமை கிடைத்துவிட்டது.

1952இல்தான் முதலாவது பொதுத் தேர்தல் நடந்தது.

ஆனால் 1946இல் இந்தியாவின் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்ற பண்டித ஜவகர்லால் நேரு, 1964 வரை பிரதமராக இருந்தார். 1955லேயே தம் மகள் இந்திராகாந்தியை அனைத்திந்திய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படச் செய்தார்.

அதன்மூலம் நேருவின் மகள் இந்திராகாந்தியே இந்தியப் பிரதமராக வரக்கூடிய நிலைமை ஏற்பட்டது.

1966 முதல் 1977 வரையிலும் பின்னர் 1980 முதல் 1984 அக்டோபரில் இந்திராகாந்தி சுட்டுக்கொல்லப்படும் வரையிலும் அவரே பிரதமராக இருந்தார். 1984 நவம்பர் முதல் 1989 வரையில் நேருவின் பெயரனும், இந்திராகாந்தியின் மகனும் ஆன ராஜீவ் காந்தி இந்தியாவின் பிரதமர் ஆனார். நேருவின் குடும்ப ஆட்சிதானே,

**1946 சூன் முதல் 1989 வரையில், 43 ஆண்டுக் காலம் நேருவின் குடும்பம் இந்தியாவை ஆண்டதானது - மக்கள் நாயகமா? பார்ப்பனர் சாதி ஆதிக்க நாயகமா? நேருவின் குடும்ப ஆட்சியா?**

அது எப்படி மக்கள் நாயகம் ஆகும்? அதாவது, 1952 முதல் தேர்தல் அரசியியலில் வெற்றி பெற முடிந்தால்தானே!

அதாவது, தேர்தலில் சாதியைச் சொல்லி, குடும்பப் பெருமையைச் சொல்லி, கைக்கூலியையும் கொடுத்து, தேர்தலில் வெற்றி பெறுவது மட்டுமே மக்கள் நாயகமா?

ஜவகர்லால் நேருவின் சமகாலத்தவர், ஜம்மு-காஷ்மீர் தலைவர் ஷேக் அப்துல்லா. ஷேக் அப்துல்லா காலத்துக்குப் பிறகு தேசிய மாநாட்டுக் கட்சியின் பேராலும், காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்தும் பரூக் அப்துல்லா ஆட்சி; பரூக் அப்துல்லா தில்லி அரசில் அமைச்சரானால் - அவருடைய மகன் உமர் அப்துல்லா ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சர் ஆவார். இது மக்கள் நாயகமா?

**சுதந்தர காஷ்மீரும் இன்றி, தன்னுரிமை காஷ்மீரும் இன்றி, இன்று ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பாரதிய சனதா - மக்கள் நாயகக் கூட்டணி ஆட்சி நடக்கிறது.**

இது மக்கள் நாயக ஆட்சியா?

உத்தரப்பிரதேசத்தில் 1946 முதல் 1967 வரை - உத்தரகாண்டில் பிறந்த பார்ப்பனர்கள் மட்டுமே, காங்கிரசின் பேரால் முதலமைச்சர்கள் ஆனார்கள்.

1990க்குப் பிறகு மண்டல் பரிந்துரை அமலாக்கத்தின் உடனடி விளைவாகவும், உ.பி. ஆதித்திராவிட வகுப்பினர் கன்ஷிராம் - மாயாவதி தலைமையில் விழிப்புணர்ச்சி பெற்றதாலும் யாதவ் சாதிக் கட்சியான முலாயம் சிங் கட்சி - மாயாவதி கட்சி கூட்டணி ஆட்சி; பின் தனித்து மாயாவதியின் ஆட்சி; முலாயம் சிங் ஆட்சி; அவருடைய மகன் அகிலேஷ் சிங் யாதவ் ஆட்சி என, உ.பி.யில் சாதிவாத ஆட்சி நடந்தா? குடும்ப ஆட்சி நடந்தா? அதற்குப் பெயர் மக்கள் நாயகமா?

இப்போது இந்துத்துவ வெறியை ஊட்டி - பணத்தைக் கொட்டிப் பரப்பி பாரதிய சனதாக் கட்சி முழுப் பெரும்பான்மையுடன் சட்டமன்றத்தைக் கைப்பற்றி, உத்தரப் பிரதேசத்தில் மிகச் சிறுபான்மை வருண சாதியான - இரசபுத்திர சாதியான சத்திரிய சாதிக்காரர் யோகி ஆதித்ய நாத் முதலமைச்சராக ஆகி இருப்பது மக்கள் நாயகமா?

பீகாரில் லல்லு பிரசாத் யாதவ் குற்றவியல் தண்டனை பெற்றுச் சிறைக்குச் சென்றார்கள். அவருடைய மனைவி முதலமைச்சர்.

2014இல் இவர்களின் இரண்டு மகன்கள் அமைச்சர்கள். இது மக்கள் நாயகமா?

அரியானா மாநிலத்தில் தேவிலால் என்கிற ஜாட் வகுப்பினரும், அவருடைய மகன் சௌத்தாலா என்பவரும் மாறி மாறி முதலமைச்சராக வந்த ஆட்சி, மக்கள் நாயக ஆட்சியா? ஜாட் சாதிநாயக ஆட்சியா?

மேற்கு வங்கத்தில் 1977 வரையில் பார்ப்பன சாதி ஆதிக்க ஆட்சியும், 1977க்குப் பிறகு - பொதுவுடைமைக் கட்சி என்கிற பேரால் ஜோதி பாசு என்கிற காயஸ்தர் (எ) போஸ் சாதி ஆதிக்க ஆட்சியும், முற்போக்குக் கூட்டணியின் பேரால் நடந்தது மக்கள் நாயக ஆட்சியா? பார்ப்பனர்-காயஸ்தர் கூட்டணி ஆட்சியா?

அசாமிலும், ஒரிசாவிலும் மாறி, மாறி பார்ப்பனர் ஆட்சி அல்லது பட்நாயக் என்கிற காயஸ்தர் சாதி ஆட்சி மாறி மாறி நடப்பது மக்கள் நாயக ஆட்சியா?

தென்னாட்டில் ஆந்திராவில் பார்ப்பனர் ஆட்சி ஆதிக்கம் ஒழிந்து, கோபால ரெட்டி, பிரமானந்த ரெட்டி, சஞ்சீவி ரெட்டி என்கிற ரெட்டி ஆதிக்கமும் - என்.டி. ராமராவ் என்கிற கம்மநாயுடு ஆதிக்க ஆட்சியும், அவருடைய மருமகன் சந்திரபாபு நாயுடு குடும்பத்தின் ஆதிக்க ஆட்சியும் நடைபெறுவது மக்கள் நாயக ஆட்சியா? ரெட்டி-நாயுடு சாதி ஆதிக்க ஆட்சியா?

கருநாடகத்தில் நிஜலிங்கப்பா காலம் முதல் இன்று வரையில் லிங்காயத்து சாதிக்காரர் ஆட்சியா, ஒக்கலிக சாதிக்காரர் ஆட்சியா என, காங்கிரசின் பேராலும், பாரதிய சனதாவின் பேராலும் மாறி மாறி ஆட்சி நடைபெற்றதும் - நடைபெறுவதும் மக்கள் நாயக ஆட்சியா? சாதிநாயக ஆட்சியா?

தமிழகத்தில் 1967இல் காங்கிரசு அடியோடு வீழ்ந்தது. 1969 ஆகத்தில் கலைஞர் கருணாநிதி - இந்திராகாந்தி ஒப்பந்தம் மூலம், காமராசரின் செல்வாக்கு ஒழிந்தது. அதன் பிறகும் காங்கிரசோடு தி.மு.க. உறவு, பாரதிய சனதாவோடு உறவு என - தி.மு.க. - அ.தி.மு.க. என்கிற திராவிடக் கட்சிகள் மாறி மாறிப் பதவிக்கு

வருவது-கொள்கை வெற்றிக்காகவா? இல்லை தாங்கள் தாங்கள் அடிக்கும் கொள்ளைகளை மறைத்துக் கொள்வதற்காகவா? இதில் மக்கள் நாயகம் என்ன வாழ்கிறது?

**தி.மு.க.விலும், அ.தி.மு.க.விலும் ஒரு குறிப்பிட்ட குடும்ப ஆதிக்க ஆட்சி இருப்பது ஊரறிந்த செய்தி யாகும்.**

இரண்டு கட்சியினரும் ஊரார் அறிய, ஒரு கட்சியின் வண்டவாளத்தை இன்னொரு கட்சியினர் அம்பலப்படுத்துவதை மிக நன்றாகச் செய்கிறார்கள்.

**ஊரும் உலகமும் அறிய, எம்.ஜி.ஆர். என்கிற ஒரு திராவிடர் - ஒரு மலையாளி தொடங்கிய ஒரு கட்சிக்கு - ஒரு பச்சை அய்யங்கார் பார்ப்பனப் பெண்மணி ஈடு இணையில்லாத தலைவராக ஏன் - எதனால் - எப்படி யெப்படி வரமுடிந்தது என்பதை - திராவிடர் இயக்க ஆய்வாளர்கள் மண்டையைப் பிய்த்துக் கொண்டு ஆராய வேண்டும். நிற்க.**

கேரளா, திரிபுராவுக்கு அடுத்து - கல்விச் சாதனை யில் முதலாவது மாநிலம் ஆகும்.

**ஆனால் பொதுவுடைமைக் கட்சியினரும், காங்கிர சாரும் பதவிக்காகப் போட்டி போட்டுக் கொண்டு ஈழவர் - நாயர் - வெள்ளாளர் - பார்ப்பனர் மோதலை வளர்த் துக் கொண்டு, கேரளாவில் இந்துமத வெறியையும், சாதி வெறியையும் வளர்த்தெடுத்துவிட்டார்கள்.**

பாரதிய சனதாக் கட்சி, ஓர் அறைகூவலாக அங்கே வளர்ந்து வருகிறது.

**மக்கள் நாயகத்தில் உண்மையான பற்றுக்கோடு உள்ளவர்கள் - சாதியில் ஒரு காலையும் மதத்தில் இன்னொரு காலையும் ஊன்றிக் கொண்டு - அதன் பிறகு "மக்கள் நாயகம் காப்போம்" என்பது ஒரு ஏமாற்று என்பதை எல்லாரும் மனங்கொள்ள வேண்டுகிறோம்.**

ஏற்கெனவே குறிப்பிட்டபடி மக்கள் நாயகம் பற்றி, இந்திய சமுதாய அமைப்பைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, டாக்டர் ஆர்.எம். லோகியா பின்வருமாறு கூறினார்.

இந்தியாவில் ஆளும் வகுப்பு எது என்பதை எதை அளவுகோலாக வைத்துக் கண்டுபிடிப்பது?

1. மேல்சாதிக்காரராக இருப்பது, 2. பெருநில உடை மைக்காரராக இருப்பது, 3. உயர்ந்த ஆங்கிலக் கல்வி பெற்றவராக இருப்பது ஆகிய மூன்றில் - இரண்டு தகுதிகளைப் பெற்றவர்களே ஆளும் வகுப்புக்காரர் (Ruling Class) ஆவார் என்றார்.

**அதன்படி, இந்த மூன்று தகுதிகளையும் ஒரு சேரப் பெற்றோர் பார்ப்பனர்களிலும், சத்திரியர் களிலும், வைசியர்களிலும் 50 விழுக்காட்டுக்குமேல் இருப்பர்; இரண்டு தகுதிகளை மட்டும் பெற்றவர்கள் 100க்கு 80க்குமேல் இருப்பர். 2017லும் இதுவே உண்மை.**

**ஆனால் மேலே சொன்ன மூன்று தகுதிகளையும் பெற்றோர் சூத்திர வகுப்பிலோ, ஆதி சூத்திர வகுப்பிலோ இன்றும் இல்லை என்பது கண்கூடு. மேல்சாதிக் காரராக ஆக்கிக்கொள்ள சூத்திரருக்கும், ஆதிசூத்தி ரருக்கும் ஒருபோதும் வாய்க்கப்போவது இல்லை; இல்லை; இல்லை.**

**பிறவி வருண சாதியும், பிறவி உள்சாதியும் மாற்றிக்கொள்ள முடியாதவை.**

எனவே ஆளும் வகுப்பினராக (Ruling Class) சூத்திரர், ஆதிசூத்திரர் இருப்பது மிக, மிக அரிது. அந்த அரிதான இடத்தில் இன்று நரேந்திர மோடி உள்ளார் - பார்ப்பனர், சத்திரியர், வைசியர் மற்றும் வணிக முதலாளிகளின் தொழில் முதலாளிகளின் பச்சைக் கையாளாக - கைவாணமாக இன்று நரேந்திர மோடி உள்ளார்.

இனி, இந்திய சமுதாயத்தின் இருப்பைக் கணக்கில் எடுத்துக் கொண்டு - அரசு - இந்திய அரசு என்பது இந்தியாவின் வெகுமக்களால் ஆளப்பட வேண்டும் என்பதைப் பின்வருமாறு, மேதை அம்பேத்கர், 1948இல் முன்மொழிந்தார். அது என்ன?

"இந்தியாவில் ஒரு பெரிய சிறுபான்மையராக இருக்கிற பிற்படுத்தப்பட்டோரும், ஒரு சிறுபான்மை யாக இருக்கிற ஆதித்திராவிடரும், இன்னொரு சிறு பான்மையாக இருக்கிற மதச் சிறுபான்மையினரும், மிகச் சிறுபான்மையினராக உள்ள பழங்குடி மக்களும் ஆகிய 85% பேராக உள்ள நாம் ஓரணியாகத் திரண் டால் - உண்மையான அதிகாரம் தேங்கிக் கிடக்கிற இந்திய-தில்லி அரசை நாம் ஏன் கைப்பற்ற முடியாது என்பது பற்றி எண்ணிட எனக்கு வியப்பாக இருக் கிறது" என, ஒரு ஆதித்திராவிடர் மாநாட்டில் முன்மொழிந் தார். (It is astonishing to me, why, we, the Backward Classes who are a bigger minority, the scheduled castes, another minority Schedules Tribes a small minority, the religious minorities, who form 85% of the population join together, cannot capture the real seat of power that lies at delhi!) என நடைமுறைக்கு ஏற்ற-மக்கள் நாயக ஆட்சி இந்தியாவில் வர வழி சொன்னார்.

இதில் இரண்டு செய்திகள் அடங்கி உள்ளன.

1. முதலாவது செய்தி, இந்திய அரசு மட்டுமே முற் றுரிமை உள்ள அரசு; அதாவது எல்லா அதிகாரமும் உள்ளது இந்திய அரசு மட்டுமே ஆகும்.

2. இரண்டாவதாக, 85% பேராக உள்ள சூத்திர - ஆதிசூத்திர - மதச்சிறுபான்மை மக்கள் மற்றும் பழங் குடிகள் ஒன்றுசேர்ந்து இந்திய அரசைக் கைப்பற்ற வேண்டும்; அது முடியும் என்பது ஆகும்.

**இவற்றைப் பற்றி இந்தியா முழுவதிலும் உள்ள பிற்படுத்தப்பட்டோரும், மிகப் பிற்படுத்தப்பட்டோரும், பட்டியல் வகுப்பினரும், மதச்சிறுபான்மையினரும், பழங்குடியினரும் ஆக உள்ள இவ்வகுப்பு மக்களின் தலைவர்கள் முதலில் ஒன்றுகூடிப் பேசவேண்டும். அனைத்திந்திய அளவில், ஓர் குடை அமைப்பை (Umbrella Organisation) இவர்கள் உருவாக்க வேண்டும்.**

**இந்திய அரசைக் கைப்பற்றுவது என்று முடி வெடுத்து, அதை நோக்கி இவர்கள் பயணம் போக வேண்டும்.**

**இந்தியாவில் மக்கள் நாயகம் மலர இது ஒன்றே வழியாகும். மற்றவை, மக்கள் நாயக அரசை அமைக் கப் பயன்படமாட்டா.**

**7.4.2017** **- வே. ஆனைமுத்து**

## வடக்கலூரில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் 127ஆவது பிறந்த நாள் விழா

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வடக் கலூரில் புரட்சியாளர் பி.ஆர். அம்பேத்கர் நற்பணி மன்றம் சார்பில் ஏப்ரல் 14 வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் பேரறிவாளர் பி.ஆர். அம்பேத்கர் 127ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. பா. தமிழ்சீலன் தலைமையில், அக்ரி. ந. ஆறுமுகம், சி. தமிழ்மாணிக்கம், டாக்டர் பு. சாரோன், பங்குதந்தை ஆ. யூஜின் டோனி, க. செல்வன், B.H.E.L., மருத்துவர் சி. கருணாகரன், வழக்குரைஞர் இரா. ஸ்டாலின், வழக்கு ரைஞர் பா. காமராசு, சபா. சிலம்பரசன், ஆசிரியர் சி. ஸ்டாலின், அரங்க. செல்வக்குமார், து. இனியன், மு. இலியாஸ், பா. சதீஷ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தலைமையாசிரியர் சதா. செங்குட்டுவன், ஆசிரியர் தாண்டமுத்து, மு. கலியபெருமாள், வழக்குரைஞர் அருண், தங்க. வெங்கடேசன், வழக்குரைஞர் சத்தியமூர்த்தி, பட்டிமன்ற பேச்சாளர் சபா. முத்தரசன் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வடக்கலூர் உயர்நிலைப் பள்ளியில் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்ற முதல் மூன்று மாணவ, மாணவிகளுக்கு அம்பேத்கர் பிறந்த நாளில் சிறப்பு பரிசு கொடுக்கப் பட்டது. மேலும் வடக்கலூர் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகளை உற்சாகப்படுத்தி வாழ்த்தினர்.

- தோழர் **மங்கலம் அரசன்**

## சிதம்பரம் நடராசர் கோயிலில் தமிழில் தேவாரம் பாடிய ஆறுமுகசாமி மறைவுற்றார்



*சிதம்பரம் நடராசர் கோயி லில் தமிழில் தேவாரம் பாடிய சிதம்பரம் சிவனடியார் ஆறுமுக சாமி (94) மறைவுற்றார்.*

*சிதம்பரம் அருகே உள்ள குமுடி மூலை கிராமத்தைச் சேர்ந்தவர் சிவனடியார் ஆறு முகசாமி. இவர் பல ஆண்டு களாக சிதம்பரம் நடராசர் கோயிலில் தமிழில் தேவாரம், திருவாசகம் பாட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தார். மேலும், நடராசர் தரிசன விழாவின்போது கோயிலில் அமர்ந்துகொண்டு தமிழில் தேவாரம், திருவாசகம் பாட வேண்டும் என்ற துண்டறிக்கையை பக்தர் களுக்கு வழங்கி வந்தார். அவருக்கு ஆதரவாக மக்கள் கலை இலக்கியக் கழகம், பா.ம.க., விடுதலை சிறுத்தைகள், திராவிடர் கழகம், மா.பெ.பொ.க., மனித உரிமை பாதுகாப்பு மையம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் சிதம்பரத்தில் பல்வேறு போராட்டங்களை நடத்தின.*

*இதையடுத்து ஆறுமுகசாமி, தான் சிதம்பரம் நடராசர் கோயிலில் தேவாரம் பாட அனுமதிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். சென்னை உயர்நீதிமன்றத் தின் தீர்ப்புப்படி கடந்த 2008ஆம் ஆண்டு சிதம்பரம் நடராசர் கோயிலுக்குள் மேளதாளம் முழங்க தமிழ் உணர்வாளர்களுடன் சென்று தமிழில் தேவாரம் பாடினார்.*

*சிதம்பரம் நடராசர் கோயிலை அரசே ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தி உண்ணாவிரதம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை நடத்தினார்.*

*தி.மு.க. ஆட்சியின்போது தமிழறிஞர் என்ற அடிப்படையில் இவருக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக உடல் நலக் குறைவாக இருந்த இவர், கடலூர் புதுப்பாளை யத்தில் உள்ள தனது மகள் வீட்டில் வாழ்ந்து வந்தார். இந்நிலையில் 8-4-2017 சனி அன்று ஆறுமுகசாமி மறைவுற்றார். அவரது உடல் சொந்த ஊரான குமுடிமூலை கிராமத்துக்கு கொண்டு செல் லப்பட்டது. ஏப்ரல் 9 மதியம் இறுதிச் சடங்கு நடை பெற்றது.*

# மாட்டிறைச்சி அரசியல்

- க. முகிலன்

**வளர்ச்சி என்ற முழக்கத்தை முன்வைத்து 2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்கு நடை பெற்ற தேர்தலில் பாரதிய சனதாக் கட்சி வெற்றி பெற்றது. நடுவண் அரசில் கடந்த 25 ஆண்டு காலமாக இருந்துவந்த கூட்டணி ஆட்சிமுறைக்கு ஒரு முடிவுகட்டி, பா.ச.க. தனிப்பெரும்பான்மை யுடன் நரேந்திர மோடி தலைமையில் ஆட்சியில் அமர்ந்தது.**

இந்த வலிமையின் பின்னணியில் சங் பரிவாரங்கள் இந்துத்துவ வெறிச்செயல்களை அரங்கேற்றத் தொடங்கின. இந்துத்துவக் கொள்கைக்கு எதிராகப் பகுத்தறிவுப் பரப்புரை செய்துவந்த தபோல்கர், கல்பர்கி, பன்சாரி ஆகியோரைக் கொலை செய்தனர். 'கர்வாப்சி' என்கிற - தாய் மதத்துக்குத், திரும்புதல் என் பெயரால் இசுலா மியர்களை இந்து மதத்தைப் பின்பற்ற வேண்டும் என்று பல இடங்களில் அச்சுறுத்தினர். 'லவ் ஜிகாத்' என்ற பெயரால் முசுலிம் இளைஞர்கள் இந்துப் பெண் களை ஏமாற்றித் திருமணம் செய்துகொள்ள முனைவ தாகக் கூறி, முசுலீம் இளைஞர்களைத் தாக்கினர்.

பசுப் பாதுகாப்புப் படை என்ற பெயரில் இசுலாமியர் களையும் தலித்துகளையும் தாக்கி வருகின்றனர். 2015 செப்டம்பரில் உத்தரப்பிரதேசத்தில் தாத்திரியில் முகம்மது அக்லக் என்பவர் தன் வீட்டில் மாட்டிறைச் சியை ஒளித்து வைத்துள்ளார் என்று கூறி அவருடைய வீட்டிற்குள் புகுந்து அவரை அடித்துக் கொன்றனர். அவருடைய மகனையும் கடுமையாகத் தாக்கினர். இதுகுறித்து விசாரணை செய்ய அமைக்கப்பட்ட குழு அண்மையில் வெளியிட்ட ஆய்வறிக்கையில் முகமது அக்லக் வீட்டில் மாட்டிறைச்சி வைத்திருக்கவில்லை என்று தெரிவித்துள்ளது. முகமது அக்லக்கின் சாவுக்கு யார் பொறுப்பு?

2016 சூலை 11 அன்று குசராத் மாநிலம் கிர்சோம் நாத் மாவட்டத்தில் உனா நகருக்கு அருகில் உள்ள மோடா சமந்ரியாலா என்ற சிற்றூரில், செத்த பசுவின் தோலை நான்கு தலித் இளைஞர்கள் உரித்துக் கொண்டி ருந்த போது, பசுப் பாதுகாப்புக் குண்டர் படை அவர்களைப் பிடித்து மகிழுந்தில் கட்டி, உனா நகரில் தடியாலும் இரும்புக் குழாய்களாலும் பொது மக்கள் முன்னிலை யில் கடுமையாகத் தாக்கினர். இதைக் கண்டித்து தலித்துகள் அகமதாபாத்திலிருந்து உனா நகருக்கு 370 கிலோ மீட்டர் தொலைவுக்கு மாபெரும் பேரணியை நடத்தினர்.

1.4.2017 அன்று அரியானா மாநிலத்தைச் சேர்ந்த 16 பேர் இராஜஸ்தான் தலைநகரான ஜெய்ப்பூரில் 36



*இராஜஸ்தான் மாநிலம் அல்வாரில் மாடுகளை ஏற்றிச் சென்ற முசுலீம்களை பசுவெறியர்கள் தாக்கிய காட்சி-முகநூல் பதிவு*

மாடுகளை வாங்கி, அவற்றை 6 வாகனங்களில் ஏற்றிச் சென்றனர். அவர்கள் இராஜஸ்தான் மாநிலத்தின் அல் வார் மாவட்டத்தில் சென்று கொண்டிருந்தபோது, பசுப் பாதுகாப்புப் படையினர் அவர்களைக் கடுமையாகத் தாக்கினர்.

அரியானாவில் பால் வணிகரான 55 அகவை யினரான பெகலுகான் படுகாயமடைந்தார். இவர் தாக் கப்பட்ட வீடியோ காட்சிகள் குருதியை உறையச் செய்வன வாக உள்ளன. பெகலுகான் விலா எலும்புகள் நொறுக்கப் பட்டதால் நுரையீரல் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. காவல்துறையால் பெகலுகான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நான்கு நாள் கழித்து இறந்துவிட்டார். அவருடைய இரண்டு மகன்களும் தாக்கப்பட்டனர்.


அல்வாரில் பசுப் பாதுகாப்புப் படையினரால் ஒரு இசுலாமியர் கொல்லப்பட்டது குறித்து, 6.4.2017

அன்று மாநிலங்கள் அவையில் எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பினர். நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கான இணை அமைச்சர் முக்தர் அப்பாஸ் நவி, அவ்வாறு ஒரு நிகழ்ச்சி நடக்கவில்லை என்று மறுத்தார். அப்போது காங்கிரசுக் கட்சியின் தலைவர் குலாம் நபி ஆசாத், "நியூயார்க் டைம்ஸ்" ஏட்டில் இதுகுறித்து செய்தி வந்திருப்பதை அவையில் காட்டினார். அதன்பிறகு மாநிலங்கள் அவையின் துணைத் தலைவர் பி.ஜெ. குரியன், உள்துறை அமைச்சரிடம் உரிய தகவலைப் பெற்று இந்த அவையில் தெரிவிக்க வேண்டும் என்று முக்தர் அப்பாஸ் நவிக்கு அறிவுறுத்தினார்.

இராஜஸ்தான் மாநில அரசு அல்வாரில் பெகலுகான் தாக்கப்பட்டது குறித்து நடுவண் அரசுக்கு அறிக்கை அனுப்பியது. அந்த அறிக்கையில் "அல்வார் முசுலீம்கள் தாக்கப்படுவதை அறிந்தவுடன் காவல்துறை விரைந்து அங்கு சென்றது. படுகாயமடைந்திருந்த பெகலுகானை மருத்துவமனையில் சேர்த்தது. மற்ற நான்கு பேரையும் மீட்டது. இத்தாக்குதலில் ஈடுபட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வீடியோ பதிவைக் கொண்டு காவல்துறை மற்ற குற்றவாளிகளைத் தேடி வருகிறது" என்று கூறப்பட்டிருந்தது.

மேலும் இராஜஸ்தான் மாநில அரசு அனுப்பிய அறிக்கையில், சட்ட விரோதமாகப் பசுக்கடத்தலில் ஈடுபட்டதாக இராஜஸ்தானில் கடந்த ஏழு ஆண்டுகளில் 6000 பேர் கைது செய்யப்பட்டதாகவும், இவர்களில் 3000க்கும் மேற்பட்டோர் மீது குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2700 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. நீதிமன்றம் 40 பேரைத் தண்டித்துள்ளது. 59 பேரை விடுதலை செய்துள்ளது என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**இராஜஸ்தான் மாநில அரசின் அறிக்கையின் விவரங்கள், பசுப் பாதுகாப்பு என்ற பெயரில் இசுலாமியர்களும், தலித்துகளும் எந்த அளவுக்கு அச்சுறுத்தப்படுகின்றனர் என்பதைக் காட்டுகின்றன. செத்த மாடுகளை அகற்றுதல், அவற்றின் தோலை உரித்தல், தோலை விற்றல் என்பவற்றை தலித்துகள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காகக் காலங்காலமாகச் செய்து வருகின்றனர். மாட்டிறைச்சி குறைந்த விலையில் அவர்களுக்குக் கிடைக்கும் சத்தான உணவாக இருந்து வருகிறது. அதேபோன்று இசுலாமியர் மாடுகளின் தோலை வாக்குதல், தோல் பதனிடுதல், பதனிடப்பட்ட தோலிலிருந்து பலவகையான பொருள்களைத் தயாரித்தல் ஆகிய தொழில்களைச் செய்து வருகின்றனர். இசுலாமியரும் மாட்டிறைச்சி உண்ணும் பழக்கம் உடையவர்கள். எனவே தலித்துகளுக்கும், இசுலாமியருக்கும் வாழ்வாதாரத்திற்கான தொழிலாகவும், உணவாகவும்**



*உ.பி.தாத்திரியில் 2015 செப்டம்பரில் பசுப் பாதுகாப்பு வெறியர்களால் கொல்லப்பட்ட முகம்மது அக்லக்*

**இருக்கின்ற பசு உள்ளிட்ட கால்நடைகளைக் கிடைக்க விடாமல் இந்து மதத்தின் பெயரால் தடுப்பது அவர்களின் உயிர் வாழும் உரிமையைப் பறிப்பதாகும்.**

**பால்மடி வற்றிய பசுக்களையும், ஏர் உழவு செய்யவும், வண்டி இழுக்கவும் இயலாத நிலையை அடைந்து விட்ட எருதுகளையும் இறைச்சிக்காக உழவர்கள் விற்பது என்பது, நீண்ட நெடுங்காலமாக இருந்துவரும் சமூக நடைமுறையாகும். இவ்வாறு விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு கன்றுகளை, காளைகளை உழவர்கள் வாங்குவது வழக்கமாகும். பயன்பாட்டை இழந்துவிட்ட பசுக்களை, காளைகளை இறைச்சிக்காக விற்காமல் வைத்திருந்தால் அவற்றுக்குத் தீனி போடுவது பெருந்திண்டாட்டமாகிவிடும். அதனால் கறவைப் பசுக்களுக்கும், உழைக்கும் காளைகளுக்கும் போதிய தீனி கிடைக்காமல், இரண்டுங்கெட்டான் நிலை ஏற்படும்.**

தனிப்பெரும்பான்மையுடன் மோடி தலைமை அமைச்சரானபின், பா.ச.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் பசுவதைத் தடுப்புச் சட்டங்கள் மேலும் கடுமையானவையாக ஆக்கப்படுகின்றன. குசராத் மாநில சட்டப் பேரவையின் வரவு-செலவுக் கூட்டத் தொடரின் இறுதி நாளான 30.3.2017 அன்று, எதிர்க்கட்சிகள் அவையில் இல்லாமல் செய்துவிட்டு, 2011ஆம் ஆண்டின் பசுவதைத் தடுப்புச் சட்டத்தில் மேலும் கடுமையான திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன.

குசராத்தில் 1956இல் முதன்முறையாக பசுவதைத் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது. 2011இல் நரேந்திர


மோடி குசராத் முதலமைச்சராக இருந்தபோது இதில் திருத்தம் செய்யப்பட்டது. அதன்படி, பசுவதைக் குற்றத் திற்குக் குறைந்தது 3 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ஒரு இலட்சம் உருவா தண்டமும் விதிக்கப்படும், 30.3.2017 அன்று நிறைவேற்றப்பட்ட சட்டத்திருத்தத்தின்படி, பசுவதைக் குற்றத்துக்குக் குறைந்தது பத்து ஆண்டுகள் சிறையும்; வாழ்நாள் தண்டனையும் விதிக்கலாம். தண்டம் ஒரு இலட்சம் உருவா முதல் 5 இலட்சம் வரை விதிக்கப்படும், இந்தியா விலேயே பசுவதைக் குற்றத்துக்கு முதன்முதலாக வாழ்நாள் தண்டனை விதித்த பெருமை குசராத்தைச் சாரும் என்று குசராத் முதலமைச்சர் பெருமிதமுடன் கூறியுள்ளார். **மேலும் அவர் பசுக்கள், பகவத் கீதை, கங்கை ஆகியவற்றைக் காத்திட பா.ச.க. உறுதி பூண்டுள்ளது என்று கூறினார். 2017ஆம் ஆண்டு திசம்பர் மாதம் குசராத் மாநிலச் சட்டப் பேரவைக்குத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதை மனதிற்கொண்டே இச்சட்டம் மேலும் கடுமையாக்கப்பட்டுள்ளது.**

குசராத் சட்டப் பேரவையில் பசுவதைத் தடுப்புச் சட்டத்தை முன்மொழிந்து இணை அமைச்சர் பிரதீப் சிங் ஜடேஜா பேசிய போது, ''மத அடிப்படையில் மட்டும் பசுக்கள் முக்கியமானவை அல்ல; பொருளாதார நோக்கிலும் நமது சமூகத்தில் பசுக்கள் மிகவும் முதன்மையானவை; எனவே பசுவதையில் ஈடுபடுவோர்க்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும்'' என்று கூறினார்.

**பொருளாதார அடிப்படையை மட்டுமே காரணியாகக் காட்டி பசுவதைத் தடுப்புச் சட்டம் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்ற வரலாற்றைப் பார்ப்போம்.**

**டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் எழுதிய அரசமைப்புச் சட்டவரைவு 1947 பிப்பிரவரி 21 அன்று அரசமைப்புச் சட்ட அவையில் முன்மொழியப்பட்டது. அதில் பசுப் பாதுகாப்புக் குறித்து எந்தவொரு குறிப்பும் இல்லை. அதனால் பசுப்புனித வெறியர்கள் வெகுண்டெழுந்தனர். இந்துத்துவ வெறியர்களான பண்டித தாக்கூர்தாஸ் பார்கவா, சேத் கோவிந்தாஸ் ஆகிய இருவரும் அரசமைப்புச் சட்டத்தில் பசுப் பாதுகாப்பு குறித்து 38ஏ என்கிற பிரிவைச் சேர்க்க வேண்டும் என்று ஒரு திருத்தத்தை முன்மொழிந்தனர்.**

அவர்கள் கொடுத்த திருத்தம் : ''வேளாண்மையையும் கால்நடை வளர்ப்பையும் நவீனமாக்கவும், அறிவியல் அடிப்படையில் மேம்படுத்தவும் குறிப்பாக, பயன்பாட்டில் உள்ள கால்நடைகளின் இனவகைகளைப் பேணவும், பாதுகாக்கவும், மேம்படுத்தவும், பால்தரும் மாடுகளையும், கன்று ஈனும் அகவையில் உள்ள மாடுகளையும், இளம் கன்றுகளையும், உழைக்கும் வலிமையும் உள்ள காளைகளையும் கொல்லப் படுவதைத் தடுக்கவும் அரசு கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.''



*சுழலும் சிவப்பு விளக்குடன் ஆபத்தின் அறிகுறியாகிவிட்ட பசு*

**மேலே கண்டுள்ள சட்டத் திருத்த வரைவில் மத அடிப்படையோ, பசு புனிதமானது என்றோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. பொருளாதார அடிப்படையில் தான் இத்திருத்தம் அமைந்துள்ளது. பால்மடி வற்றிய பசுக்களை, உழைக்கும் வலிமையை இழந்த வயதான எருதுகளை இறைச்சிக்காக வெட்டப்படுவதற்குத் தடை ஏதும் இதில் கூறப்படவில்லை.**

இந்துத்துவ வாதிகள் இச்சட்டத்தை அடிப்படை உரிமைகள் பகுதியில் சேர்த்திட வேண்டுமென அவை உறுப்பினர்களிடையே ஆதரவு திரட்டினர். அந்நிலையில் அரசமைப்புச் சட்ட அவையின் தலைவராக இருந்த இராசேந்திர பிரசாத் 1947 ஆகத்து 7 அன்று பிரதமராக இருந்த நேருவுக்கு ஒரு மடல் எழுதினார். அம்மடலில், ''பசுக்கள் கொல்லப்படுவதைச் சட்டத்தின் மூலம் தடுக்க வேண்டும் என்று நாள்தோறும் எனக்கு எண்ணற்ற மடல்களும் தந்திகளும் வந்துகொண்டே இருக்கின்றன. பசுப் பாதுகாப்பு என்பது இந்துக்களின் உள்ளங்களில் நெடுங்காலமாக வேரூன்றியுள்ள மத நம்பிக்கையாகும். எனவே இதைப்பற்றி நாம் விரைவில் முடிவெடுக்க வேண்டும்'' என்று கூறி நேருவுக்கு அழுத்தம் கொடுத்தார், இராசேந்திர பிரசாத்.

பசுவதைத் தடுப்புச் சட்டத்திற்கு முற்றிலும் எதிரான கருத்தை அம்பேத்கர் கொண்டிருந்த போதிலும், அடிப்படை உரிமைகள் பகுதியில் இச்சட்டம் இடம்பெற்றால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பேராபத்தை கருத்தில் கொண்டு, அரசுக் கொள்கைகள் வழிகாட்டும் நெறிகள் (Directive Principles of State Policy) பகுதியில் வைத்திட முடிவு செய்தார். எனவே இச்சட்டத்தைத் தீவிரமாக ஆதரிப்போரை அம்பேத்கர் தன் அலுவலகத் திற்கு அழைத்துப் பேசி அவர்களை இதற்கு இணங்கச் செய்தார்.

அதனால்தான் வழிகாட்டும் நெறிகள் பகுதியில்



*படத்தில் வலப்பக்கத்தில் இருந்து இரண்டாமவராக இருப்பவர் அல்வாரில் கொல்லப்பட்ட பெகுலுகானின் தாயார். ஏப்பிரல் 19 அன்று தில்லியில் நடைப்பெற்ற கண்டனக் கூட்டத்தில் அவருக்கு உருபா 3 லட்சம் வழங்கப்பட்டது.*

48ஆவது பிரிவாகப் பசுவதைத் தடைச் சட்டம் சேர்க் கப்பட்டது. இதன் மீதான விவாதம் அரசமைப்புச் சட்ட அவையில் நடந்தபோது, தாக்கூர்தாஸ் பார்கவே பேசிய போது, "அம்பேத்கர் நயமாகப் பேசி இச்சட்டம் வழிகாட்டும் நெறி பகுதியில் சேர்த்திட எங்களை இணங்கச் செய்துவிட்டார். இது நல்லெண்ணத்தின் பேரில் நாங்கள் செய்த தியாகம்" என்று கூறினார்.

**வேளாண்மை மற்றும் கால்நடை மேம்பாடு என்கிற போர்வையில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டம் அம்பேத் கரின் முயற்சியால் மாநிலங்களின் அதிகாரப் பட்டியலில் சேர்க்கப்பட்டது. அதனால்தான் இன்று பல மாநிலங் களில் பால்மடி வற்றிய பசுக்களையும், உழைப்புக்குப் பயன்படுத்த முடியாத எருதுகளையும் இறைச்சிக்காக வெட்ட முடிகிறது. எனவேதான் இப்போது ஆர்.எஸ்.எஸ். இன் தலைவராக இருக்கும் மோகன் பகவத் இச் சட்டத்தை மாநிலப் பட்டியலிலிருந்து பறித்துப் பொதுப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கூறிவருகிறார்.**

பசுவதைத் தடைச் சட்டத்தை நடுவண் அரசின் அதிகாரப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். 1966 நவம்பர் 7 அன்று தில்லியில் நிர்வாணசாமியார் களைக் கொண்ட பேரணியை நடத்தியது. இது பெரும் கலவரத்தில் முடிந்தது. 1979இல் மொரார்ஜி தேசாய் தலைமை அமைச்சராக இருந்தபோதும், 2003இல் வாஜ்பாய் தலைமை அமைச்சராக இருந்த போதும் பசுவதைத் தடைச் சட்டத்தை பொது அதிகாரப் பட்டியலில் சேர்த்திட முயற்சி மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அது நிறைவேறாமல் போனது. **இப்போது தனிப்பெரும்பான் மையுடன் வலிமையான தலைவரான நரேந்திர மோடி யின் ஆட்சி நடப்பதால், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் பசுவதைத் தடைச் சட்டத்தை இந்தியா முழு மைக்கும் பொருந்தும்படியான வகையில் பொது அதிகாரப் பட்டியலில் சேர்த்திட வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறார்.**

தற்போது கேரளம், மேற்குவங்காளம், அருணாச்சலப் பிரதேசம், மிசோரம், மேகாலயா, நாகாலாந்து, திரிபுரா, சிக்கிம் ஆகிய மாநிலங்களில் பசுவதைத் தடைச் சட்டம் இல்லை. பசுவதைத் தடைச் சட்டம் ஒவ்வொரு மாநிலத் திற்கும் ஒவ்வொரு வகையாக உள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட பெரும்பாலான மாநிலங்களில் பால்மடி வற்றிய பசுக்கள், எருமைகள், உழைப்புக்கு உதவாத எருதுகள், எருமைகள் ஆகியவற்றை இறைச்சிக்காக வெட்டுவதற்குத் தடையோ, எதிர்ப்போ இல்லை. மேலும் எந்தவொரு உழவரும் பால்தரும் பசுவையோ, எருமையையோ உழவு செய்யும் - வண்டி இழுக்கும் எருதையோ, எருமையையோ இறைச்சிக்காக விற்க மாட்டார் என்கிற சாதாரண உண்மையைப் புரிந்து கொண்டால் பசுவதைத் தடைச் சட்டம் என்பதற்கான தேவையே இல்லாமல் போய்விடும்.

பசுவதைத் தடைச் சட்டம் பற்றிக் கூச்சலிடும் மோடி ஆட்சியில்தான் மாட்டிறைச்சி அதிக அளவில் ஏற்றுமதியாகிறது. அதன் விவரம் :

| | ஆண்டு | ஏற்றுமதியான இறைச்சி டன் | அதன் மதிப்பு ரூபாய் |
|---|---|---|---|
| எருமை இறைச்சி | 2012 -13<br>2014 -15 | 11,07,506 டன்<br>14,75,526 டன் | 17,412 கோடி<br>29,282 கோடி |

உலக அளவில் இறைச்சி ஏற்றுமதியில் இந்தியா முதலிடத்திலும், பிரேசில் இரண்டாவது இடத்திலும் உள்ளன. குறிப்பாக இந்தியாவின் நீர் எருமை (Water Buffalo) இறைச்சியை மற்ற நாடுகள் விரும்பி வாங்கு கின்றன. பசுப் பாதுகாப்பு குண்டர் படையின் அட்டூழியத் தால் எருமை இறைச்சி எற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. உத்தரப்பிரதேசத்தில் ஆர்.எஸ்.எஸ்.காரரான யோகி ஆதித்தியா முதலமைச்சராகப் பதவி ஏற்றதும் மாட்டிறைச்சிக் கூடங்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுத்தார். இந்தியாவில் உற்பத்தியாகும் எருமை இறைச்சி யில் 46.78 விழுக்காடு உத்தரப்பிரதேசத்தில் இருக்கிறது.


அரசமைப்புச் சட்டத்தில் அரசின் வழிகாட்டும் நெறிப்பகுதியில் 48ஆவது விதியில், "நவீன மற்றும் அறிவியல் அடிப்படையில் வேளாண்மையையும், கால்நடை வளர்ப்பையும் அமைக்கவும், குறிப்பாக, கால்நடை இனங்களைப் பேணவும், மேம்படுத்தவும், மற்றும் பசுக்களையும், கன்றுகளையும் மற்ற பால் தரும் மாடுகளையும், உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ள காளைகளையும் இறைச்சிக்காக வெட்டப்படுவதைத் தடுக்கவும் அரசு முயற்சிக்க வேண்டும்" என்று கூறப் பட்டுள்ளது.

**இதன்படி, பால்மடி வற்றிய பசுக்களையும், உழைப் புக்குப் பயன்பட முடியாத நிலையை அடைந்துவிட்ட எருதுகளையும் இறைச்சிக்காக வெட்டலாம் என்பது தெளிவாகிறது. 1958இல் உச்சநீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பில் இக்கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.**

மாட்டிறைச்சியை முசுலீம்கள், தலித்துகள் தவிர, இந்துக்களிலே பல சாதியினர் உண்கின்றனர். எனவே கோடிக்கணக்கான மக்களுக்குக் குறைந்த விலையில் சத்தான உணவாக மாட்டிறைச்சி அமைந்துள்ளது. கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரமாகத் தோல் தொழில் இருக்கிறது. இந்தியாவில் 75 விழுக்காட்டினர் புலால் உணவு உண்கின்றனர். நட்சத்திர உணவு விடுதிகளில் மாட்டிறைச்சி விரும்பி உண்ணப்படுகிறது. எதை உண்பது என்பது மக்களின் சனநாயக உரிமை.

**முசுலீம்களை எதிரிகளாகக் காட்டவும், இந்துக்களின் வாக்குகளைப் "பசு-புனிதம்" என்ற பெயரால் திரட்டிக் கொள்ளவும் ஆர்.எஸ்.எஸ். - பா.ச.க. முன்னிறுத்தும் பசுவதைத் தடுப்பு என்ற பொய்மையின் முகத்திரை யைக் கிழித்தெறிவோம்.**

# கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களின் 82ஆம் பிறந்தநாள் வாழ்த்து!



கடந்த 65 ஆண்டுகளுக்கு மேல் ஓய்வும் சாய்வும் இன்றித் தொடர்ந்து தம் இனிய படைப்பு களால் நம்மை யெல்லாம் இன் பத்தில் ஆழ்த்திவரும் முன்னாள் அமைச்சர் கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்கள், எதிர் வரும் 5-5-2017 அன்று தம் 82ஆம் அக வையில் அடி எடுத்து வைக்கின்றார். இன்றைய மூத்த தமிழ் மரபுப் பெரும் பாவலர் அவர்களுக்கு நம் இதழின் சார்பில் இனிய வாழ்த்துகளையும், போற்று தலையும் தெரிவிக்கின்றோம்.

**எதிர்வரும் 6-6-2017 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு,** சென்னை உயர்நீதிமன்றம் எதிரில் அமைந் துள்ள ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்ற அரங்கில் நடைபெறும் கவிஞுரைப் பற்றிய புதிய கவிதை ஆய்வு நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்று வாழ்த்துவோம். வருக.

கவிவேந்தர் நீடுழி வாழ்க!

(கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களின் கைப்பேசி எண்.94444 50167)

- ஆசிரியர் குழு
**"சிந்தனையாளன்"**

## காஞ்சியில் மத்திய மாநில அரசுகளைக் கண்டித்தும் தில்லியில் போராடும் விவசாயிகளை ஆதரித்தும் கடையடைப்பு - கண்டன ஊர்வலம்

*காஞ்சிபுரத்தில் 25.04.2017 அன்று காலை 9 மணி அளவில் காஞ்சிபுரம் பேருந்து நிலையம் வாயிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் அருகில் பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு மறியல் நடைபெற்றது. மறியலில் ஈடுபட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டு மாலையில் விடுவிக் கப்பட்டனர்.*

*தி.மு.க., காங்கிரஸ், சி.பி.ஐ.எம்., விடுதலைச் சிறுத்தைகள், மா.பெ.பொ.க. ஆகிய கட்சிகள் கலந்து கொண்டனர். மா.பெ.பொ.க. சார்பில் நகரச் செயலர் மு.செயப்பிரகாசு கலந்து கொண்டு கைதானார்.*

# எது கடவுள்? எது மதம்?

- பெரியார் ஈ.வெ.ரா.

தேவர்கள் என்றும், பல தெய்வங்கள் என்றும், அவற்றின் அவதாரமென்றும், உருவமென்றும், அதற்காக மதமென்றும், சமயமென்றும், மதாச்சாரியார்கள் என்றும், சமயாச்சாரியார்கள் என்றும் கட்டியழுபவர்கள் ஒன்று பகுத்தறிவில்லாதவர்களாக இருக்க வேண்டும்; அல்லது வயிற்றுப் பிழைப்புக்குப் புறப்பட்ட புரட்டர்களாயிருக்க வேண்டும் என்பதை அபிப்பிராயமாகக் கொண்டு, வெகுகால முதலே பல தடவைகளில் பல பெரியார்கள் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

அதுபோலவே சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரம்மா என்றோ, அல்லது ஒரு ஆசாமி என்றோ, அல்லது ஒரு உருவமென்றோ கொள்ளுவதும் உண்மை ஞானமற்ற வர்களின் கொள்கை என்றும் பலர் சொல்லி வந்திருக்கிறார்கள். இதைத்தான் சுயமரியாதைக்காரர்கள் எடுத்துக்காட்டி வருகிறார்கள்.

ஆதலால் உலகத் தோற்றமும், அதில் நடைபெறும் உற்பத்தி, வாழ்விப்பு, அழிவிப்பு என்பவையான மூவகைத் தன்மைகளையும், மேற்படி சாமிகளோ, ஆசாமிகளோ ஒவ்வொரு தன்மையை ஒவ்வொரு ஆசாமி நடத்துகிறான் என்றோ, அல்லது ஒவ்வொரு தன்மைக்கு ஒவ்வொரு ஆசாமி பொறுப்பாளியாய் இருக்கின்றான் என்றோ நினைத்துக் கொண்டிருப்பவர்கள் விசார ஞானமற்றவர்கள் என்றே சொல்லுவோம்.

மற்றபடி மேற்கண்ட ஒவ்வொரு தன்மைக்கும் மேற்கண்ட ஒவ்வொரு பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது என்றும், அது ஒரு உருவமல்ல. ஒரு உருப்படி அல்ல என்றும், உற்பத்தி, வாழ்வு, அழிவு என்னும் தன்மையையும், அத்தன்மைக்கு ஆதாரமான தோற்றங்களைத்தான் கடவுள் என்றோ, தெய்வம் என்றோ, சாமி என்றோ, ஆண்டவன் என்றோ கருதுகிறோம் என்பதாகவும்; தானாகத் தோன்றிற்று. தானாக வாழ்ந்தது, தானாக அழிகின்றது என்கின்ற யாவும் இயற்கை தான் என்றும் அவ்வியற்கைக்குத்தான் கடவுள், ஆண்டவன், சாமி, தெய்வம் என்று சொல்லுகின்றோம் என்பதாகவும், மற்றும் இவ்வியற்கைத் தோற்றங்களுக்கு ஏதாவது ஒரு காரணமோ அல்லது ஒரு சக்தியோ இருக்க வேண்டுமே என்றும், அந்தக் காரணத்திற்கோ, சக்திக்கோதான் கடவுள், சாமி, ஆண்டவன், தெய்வம் என்கின்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதாகவும் சொல்லிக்கொண்டு மாத்திரம் இருப்பவர்களிடத்தில் நமக்கு இப்போது பெரியதொரு தகராறு இல்லை.

ஆனால் அந்தக் கடவுள் என்பவைகளுக்கு கண், மூக்கு, வாய், கை, கால், தலை, பெயர், ஆண் பெண் தன்மை, பெண்ஜாதி, புருஷன், வைப்பாட்டி, தாசி, குழந்தை குட்டி, தாய், தகப்பன் முதலியவைகளைக் கற்பித்து, அவைகளினிடத்தில் பக்தி செய்ய வேண்டும் என்றும், அவற்றிற்குக் கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து தினம் பல வேளை பாலாபிஷேகம், படைப்பு, பூஜை முதலியன செய்ய வேண்டும் என்றும், அச்சாமிகளுக்குக் கல்யாணம் முதலியவை செய்வதோடு, அந்தக் கடவுள் அப்படிச் செய்தார்; இந்தக் கடவுள் இப்படிச் செய்தார் என்பதனை திருவிளையாடல்கள் முதலியவை செய்து காட்ட வருஷா வருஷம் உற்சவம் செய்ய வேண்டும் என்றும், அக்கடவுள்களின் பெருமையைப் பற்றியும் திருவிளையாடல்களைப் பற்றியும் பாட வேண்டும் என்றும், அப்பாடல்களை வேதமாக திருமுறையாக பிரபந்தமாக அப்படிப்பட்ட கடவுள்கள் உண்டு என்பதற்கு ஆதாரமாகக் கொள்ள வேண்டும் என்றும், அப்பாடல்களைப் பாடினவர்களை சமயாச்சாரியார்களாக ஆழ்வார்களாக, சமயக் குரவர்களாக, நாயன்மார்களாக அற்புதங்கள் பல செய்த அவதாரங்களாகக் கொள்ள வேண்டும் என்றும், இதுபோன்ற இன்னும் பல செய்தால் அக்கடவுள்கள் நமது இச்சைகளை நிறைவேற்றுவார்கள் என்றும், மற்றும் நாம் செய்த - செய்கின்ற - செய்யப்போகின்ற எவ்வித அக்கிரமங்களையும், அயோக்கியத்தனங்களையும், கொடுமைகளையும் மன்னிப்பார் என்றும் சொல்லப்படுபவைகளான மூடநம்பிக்கையும் வயிற்றுப் பிழைப்பும், சுயநலப்பிரசாரமும் ஒழிய வேண்டுமென்பதுதான் நமது கவலை. ஏனெனில், இந்நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கும், மக்களை மக்கள் ஏமாற்றிக் கொடுமைப்படுத்துவதற்கும், மற்ற நாட்டார்கள்போல நம் நாட்டு மக்களுக்குப் பகுத்தறிவு விசாலப்படாமல் மற்ற நாட்டார்களைப் போல விஞ்ஞான (சையன்ஸ்) சாஸ்திரத்திலே முன்னேற்றமடையாமல் இருப்பதற்கும், அந்நிய ஆட்சிக் கொடுமையிலிருந்து தப்ப முடியாமல் வைத்த பளுவைச் சுமக்க முதுகைக் குனிந்து கொடுத்துக் கொண்டிருப்பதற்கும் இம்மூடநம்பிக்கைகளும், சில சுயநலமிகளின் வயிற்றுச் சோற்றுப் பிரச்சாரமும், இவைகளினால் ஏற்பட்ட கண்மூடி வழக்கங்களும், செலவுகளுமேதான் காரணங்கள் என்பதாக நாம் முடிவு செய்து கொண்டிருக்கின்றோம்.

நாமும் நமது நாடும் அடிமைப்பட்டுக் கிடப்பதற்கும், ஒருவரையொருவர் உயர்வு-தாழ்வு கற்பித்துக் கொடுமைப் படுத்தி ஒற்றமையில்லாமல் செய்திருப்பதற்கும், மக்கள் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பொருள்கள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்கும் பயன்படாமல் பாழாவதற்கும், மக்களின் அறிவு வளர்ச்சி கட்டுப்பட்டுக் கிடப்பதற்கும், சிறப்பாக மக்களின் ஒழுக்கங்கள் குன்றி மக்களிடத்தில் மக்களுக்கு அன்பும் உபகாரமும் இல்லாமல் இருப்பதற்கும் மேற்கண்ட கொள்கைகள் கொண்ட கடவுள் என்பதும், அதன் சமயமும், சமயாச்சாரியார்கள் என்பவர்களும் அவர்களது பாடல்களும் நெறிகளுமே முக்கிய காரணம் என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம். சொல்லத் தயாராயிருக்கின்றோம்.

**நிற்க. இக்கடவுள்களின் பொருட்டாக நம் நாட்டில் பூஜைக்கும், அபிஷேகத்திற்கும், அவற்றின் கல்யாணம் முதலிய உற்சவத்திற்கும், பஜனை முதலிய காலட்சேபத்திற்கும், இக்கடவுள்களைப் பற்றிய சமயங்களுக்காக மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மூர்த்தி ஸ்தலம், தீர்த்த ஸ்தலம் முதலிய யாத்திரைகளுக்கும், இக்கடவுள் அவதார மகிமைகளையும், திருவிளையாடல்களையும், இக்கடவுள்களைப் பற்றிப் பாடின பாட்டுக்களையும் அச்சடித்து விற்கும் புத்தகங்களையும் வாங்குவதற்கும், மற்றும் இவைகளுக்காகச் செலவாகும் பொருள்களாலும் நேரங்களாலும் ஏற்படும் செலவும், நம் ஒரு நாட்டில் மாத்திரம் சுமார் இருபது கோடி ரூபாய்களுக்குக் குறைவில்லாமல் வருஷா வருஷம் பாழாகிக் கொண்டு வருகின்றன என்று சொல்லுவது மிகையாகாது.**

இவ்விருபது கோடி ரூபாய்கள் இம்மாதிரியாக பாழுக்கிறைக்காமல், மக்களின் கல்விக்கோ, அறிவு வளர்ச்சிக்கோ

விஞ்ஞான (சையன்ஸ்) வளர்ச்சிக்கோ, தொழில் வளர்ச்சிக்கோ செலவாக்கப்பட்டு வருமானால் நம் நாட்டில் மாத்திரம் வாரம் இலட்சக்கணக்கான மக்களை நாட்டை விட்டு அந்நிய நாட்டிற்குக் கூலிகளாக ஏற்றுமதி செய்ய முடியுமா? அன்றியும் தொழிலாளர்கள் கஷ்டங்கள் என்பதும் ஏற்படுமா? தீண்டக் கூடாத - நெருங்கக் கூடாத - பார்க்கக் கூடாத - மக்கள் என்போர்கள் கோடிக்கணக்காய் புழு, பூச்சி, மிருகங்களுக்கும் கேவலமாயிருந்து கொண்டிருக்க முடியுமா? 100-க்கு மூன்று பேர்களாயிருக்கும் பார்ப்பனர்கள் மற்ற 100-க்கு 97 பேர்களைச் சண்டாளர், மிலேச்சர், சூத்திரர், வேசி மக்கள், தாசி மக்கள், அடிமைப்பிறப்பு என்று சொல்லிக்கொண்டு அட்டை இரத்தத்தை உறிஞ்சுவதுபோல் உறிஞ்சிக் கொண்டும், நம்மையும் நம் நாட்டையும், அந்நியனுக்குக் காட்டிக் கொடுத்து நிரந்தர அடிமைகளாக இருக்கும்படி செய்துகொண்டும் இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம்.

**நமக்குக் கல்வி இல்லாததற்குச் சர்க்கார் மீது குற்றம் செலுத்துவதில் கவலை கொள்ளுகின்றோமேயல்லாமல் நம் சாமியும், பூதமும், சமயமும் நம் செல்வத்தையும் அறிவையும் கொள்ளை கொண்டிருப்பதைப் பற்றி யாராவது கவலை கொள்ளுகின்றோமா என்று கேட்கின்றோம்.**

நிற்க. அன்பையோ, அருளையோ, ஒழுக்கத்தையோ, உபசாரத்தையோ மாறு பெயரால் கடவுள் என்று கூப்பிடுகின்றேன். அதனால் உனக்கு என்ன தடை? என்று யாராவது சொல்ல வருவார்களானால், அதையும் (அதாவது அக்குணங்கள் என்று சொல்லப்பட்ட கடவுள் என்பதையும்) பின்பற்றும் படியான குணங்களாகவோ, கடவுள்களாகவோதான் இருக்க வேண்டும் என்று சொல்லுகின்றோமே ஒழியக், குணங்களைப் பின்பற்றாமல் வெறும் வணங்கும்படியான கடவுளாக இருக்க நியாயம் இல்லை என்றே சொல்லுவோம்.

**மதம்**

இதுபோலவேதான் மதம் என்பதும், சமயம் என்பதும், சமயநெறி என்பதும் மற்ற ஜீவன்களிடத்தில் மனிதன் நடந்து கொள்ள வேண்டிய நடையைப் பற்றிய கொள்கைகளைக் கொண்டது என்பவர்களிடத்தில் நமக்குத் தகராறு இல்லை! அன்பே சிவம் என்பதான சிவனிடத்தில் நமக்குச் சண்டையில்லை! அன்பு என்னும் குணம்தான் சிவம்; அந்த அன்பைக் கொண்டு ஜீவன்களிடத்தில் அன்பு செலுத்துவதுதான் சைவம் என்பதானால் நாமும் சைவன் என்று சொல்லிக் கொள்ளவே ஆசைப்படுகின்றோம். அதுபோலவே ஜீவன்களிடத்தில் இரக்கம் காட்டுவது, ஜீவன்களுக்கு உதவி செய்வது ஆகிய குணங்கள்தான் விஷ்ணு, அக்குணங்களைக் கைக்கொண்டு ஒழுகுவதுதான் வைணவம் என்பதான விஷ்ணுவிடத்திலும் வைணவனிடத்திலும் நமக்குத் தகராறில்லை என்ற சொல்லுவதோடு, நாமும் நம்மை ஒரு வைணவன் என்று சொல்லிக் கொள்ளும் நிலைமை ஏற்பட வேண்டும் என்றே ஆசைப்படுகின்றோம். நமக்கும் மற்றும் உள்ள மக்களுக்கும் அச்சைவத் தன்மையும் வைணவத் தன்மையும் ஏற்பட வேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

**அப்படிக்கில்லாமல், இன்னமாதிரி உருவம் கொண்ட அல்லது குணம் கொண்டதுதான் கடவுள் என்றும், அதை வணங்குகின்றவன்தான் சைவனென்றும், அப்படி வணங்குகிறவன் இன்ன மாதிரியான உடை, பாவனை கொண்டவனாகவும், இன்னமாதிரி குறி இடுகிறவனாகவும் இருப்பதுதான் சைவம் என்றும், இன்ன பேருள்ள இன்ன காரியம் செய்த கடவுள்களைப் பற்றிப் பாடின, எழுதின ஆசாமிகளையும் புத்தகத்தையும் வணங்குவதும் மரியாதை செய்வதும்தான் சைவம் என்றும், மற்றபடி வேறு இன்ன உருவமோ, பேரோ உள்ள கடவுள் என்பதை வணங்குகிறவர்களையும் வேறு குறி இடுகின்றவர்களையும் யாதொரு குறியும் இடாதவர்களையும் சைவரல்லாதவர் என்று கொல்வதுமான கொள்கைக்காரரிடமே நமக்குப் பெரிதும் தகராறு இருக்கின்றது என்று சொல்வதுடன், அக்கொள்கைகளையும், அச்சமயங்களையும், அக்கடவுள்களையும் பாமர மக்களிடம் பரவவிடக் கூடாது என்றும் சொல்லுகின்றோம்.**

அன்றியும், பல சமயப் புரட்டர்கள் இம்மாதிரி விவகாரம் வரும்போது, நான் கடவுள் என்பதாக ஒரு தனி வஸ்துவோ, ஒரு குணமோ இருப்பதாகச் சொல்லவில்லை என்றும், மலைதான் கடவுள், ஆறுதான் கடவுள், சமுத்தரம்தான் கடவுள், மரம் செடிதான் கடவுள், புஷ்பம்தான் கடவுள், அதன் மணம் தான் கடவுள், அழகுதான் கடவுள், பெண்தான் கடவுள், அதன் இன்பம்தான் கடவுள், இயற்கைதான் கடவுள், அத்தோற்றம் தான் கடவுள் என்பதாக தமக்கே புரியாமல் உளறுவதும்; மறுபடியும் சிவன்தான் முழுமுதற் கடவுள், மற்றபடி விஷ்ணுவும் பிரம்மாவும் அவரது பரிகார தேவதைகள், சைவ சமயம்தான் உண்மைச்சமயம் அதுதான் முக்தி அளிக்க வல்லது என்பதும் அல்லது விஷ்ணுதான் முழுமுதற்கடவுள் என்பதும், அதுதான் பரத்துவம் கொண்டது. மற்றவை விஷ்ணுவின் பரிவார தேவதைகள் என்பதும், வைஷ்ணவ சமயம்தான் உண்மை சமயம்; அதில்தான் பரத்திற்கு மார்க்கம் உண்டு என்பதும், அச்சிவனையோ, விஷ்ணுவையோ முழுமுதற் கடவுளாகக் கொண்டு அக்கடவுள்களையும், அச்சமயங்களையும் பாடினவர்கள்தான் கடவுள் நெறியையும் நிலைமையையும் உணர்த்திய பெரியார்கள் - சமயாச்சாரியார்கள் என்பதுமாக மக்கள் முன் உளறிக்கொட்டி அவர்களது மனதை குழப்பச் சேற்றில் அழுத்துகின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களது புரட்டையும் பித்தலாட்டங்களையும் வெளியாக்கி மக்களைக் குழப்பச் சேற்றிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று தான் சொல்லுகின்றோம்.

**உலகத்தில் கடவுள் என்பது இன்னது என்பதாக மனதில் விளம்பரப்படுத்திக் ெகாள்ளாமலே, கடவுளைப் பற்றிய தர்க்கங்களும் தகராறுகளும் தினமும் நடைபெற்று வருகின்றன. இது இன்று நேற்று ஏற்பட்ட விவகாரம் அல்ல என்றுங்கூடச் சொல்லுவோம்.**

**எனவே, மக்களின் பாரம்பரியமானதும் எங்கும் பரவியிருக்கும்படியானதுமான மடமைக்கு இதைவிட வேறு உதாரணம் கிடையாது என்பது நமது அபிப்பிராயம். ஏனெனில், இந்த விவகாரம் பாமர மக்களிடையில் மாத்திரம் நடைபெற்று வருகின்றது என்று சொல்லுவதற்கில்லை. இது பெரும்பாலும் படித்தவன், ஆராய்ச்சிக்காரன், பண்டிதன், பக்திமான் என்கின்ற கூட்டத்தாரிடையேதான் பெரிதும் [இவ்வறியாமை] இடம்பெற்று உரம் பெற்றிருக்கின்றது. இவைகள் ஒழியச் செய்யும் காரியத்தை நாஸ்திகமென்றும், பாபச் செயல் என்றும் யார் சொன்னாலும் சுயமரியாதைக்காரர்கள் பயப்படக்கூடாது.**

(தந்தை பெரியார் 1928இல் சொற்பொழிவு;
“குடிஅரசு”, 9-6-1945)

# தண்ணீருக்குத் தத்தளிக்கும் தமிழகம்! நீரின்றி அமையாது உலகு!

மனித உடலின் பெரும் பங்கு நீரால் உருவானது.

**- வே.ஆனைமுத்து**

காற்று இன்றி ஒரு மணித்துளி கூட உயிர்வாழ முடியாது. நீர் இல்லாமல் சில மணிநேரங்கள் மனிதன் உயிர்வாழ முடியும்.

இவை இரண்டு மட்டுமே மனிதன் உயிர்வாழப் போதமாட்டா.

நிலம் வேண்டும்; தீ வேண்டும்; விசும்பு அல்லது விண்வெளி அல்லது ஆகாயம் வேண்டும்.

“நிலம் தீ நீர் வளி விசும்போடு அய்ந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்” என்பது, உலகம் என்பது என்ன என்பதற்கு விடை.

“நீரின்றி அமையாது உலகு” என்பது திருக்குறள்.




தமிழ்நாட்டிலேயே தோன்றி தமிழ் நிலத்தில் ஓடிக் வைகை கடலில் விழுவது, தாமிரபரணி ஆறுகள் மட்டுமே.

காவிரி, தென்பெண்ணை, பாலாறு, பொருநை முதலான ஆறுகளின் தோற்றம் (அ) தலைமடை தமிழ்நாட்டில் இல்லை. பிறமொழிக்காரர் நாடுகளில் உள்ளன. முல்லைப் பெரியாறும் அப்படியே.

**அந்தப் பிற மொழி நாடுகளும் தமிழகமும் இந்தியாவில் தான் உள்ளன.**

ஆனால் தலைமடைகளைப் பெற்றுள்ள நாடுகள், இந்திய அரசு வலியுறுத்தினாலும், உச்சநீதிமன்றம் தமிழகத்துக்கு நீர்விடச் சொன்னாலும் கருநாடக மொழி மக்களும், தெலுங்கு மொழி மக்களும், மலை யாள மொழி மக்களும் இணங்கினால்தான் நம் ஆறுகளில் தண்ணீர் வரும்.

காவிரி ஆறு தன் போக்கில் ஓடிக்கொண்டிருந்தது. அதை மறித்து மேட்டூர் அணை கட்டப்பட்டது 1920க் குப் பிறகுதான்.

தலைமடையிலுள்ள கருநாடக ஏரிகள் நிரம்பி வழிந்து ஓடும் நிலைமை இருக்கிற போதுதான், வேறு வக்கு இன்றிக் காவிரியில் நீர்விடுகிறார்கள். அவர்கள் ஏரிகள் வழிந்தோடும் போது மட்டுமே காவிரியில் அட்டியின்றி நீர் வருகிறது.

தமிழக அரசும் மக்களும் - கருநாடக அரசும் மக்களும் முட்டி மோதிக் கொள்வதிலேயே நாம் குறியாக இருக்கிறோம்.

வெள்ளையன் காலத்திலும் காங்கிரசு ஆட்சிக் காலத்திலும் கருநாடகத்தார் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை. தமிழகத்தார், தட்டிப் கேட்கவில்லை.

தி.மு.க.-அ.தி.மு.க. ஆண்ட 50 ஆண்டுக் காலத்திலும் கருநாடகத்தார், கேரளத்தாரின் அடாவடிகள் நிற்க வில்லை; குறையவில்லை.

**தமிழக மக்கள் - கட்சிகள் - இயக்கங்கள் எல்லாம் நீர்ப் பங்கீடு உரிமைப் போரிலேயே மூழ்கி இருக் கிறோம்.**

இன்று, காவிரிக்கு நீர்தரும் மேட்டூர் அணையில், 27 அடி உயர நீர்மட்டுமே உள்ளது.

காவிரியிலிருந்து குடிநீர் பெறும் மக்கள் - வேளாண் நீர் பெறும் மக்கள் திக்கும் திசையும் தெரியாமல் தவிக் கிறார்கள்.

**அவரவர் ஊரில் இருக்கிற சிற்றேரி, ஏரி, பேரேரி இவற்றில் நீரைத் தேக்கி வைக்க வேண்டும் - அதற்குத் தமிழக மக்களின் முயற்சியும் - தமிழக அரசின் முயற்சி யும் மட்டுமே என்றென்றும் உதவும் என்கிற பொறுப் புணர்ச்சியும், புரிதலும், அறிவும் ஏன் எத்தரப்புத் தமிழர்க் கும் வரவில்லை? ஏன் எந்தக் கட்சி ஆட்சிக்கும் வரவில்லை?**

**அதற்கான அக்கறையும் முயற்சியும் குறைந்தது 95 ஆண்டுகளாக - மூன்று தலைமுறைகளாக அறவே இல்லையே ஏன்?**

எட்டுக்கோடி மக்கள் இருக்கிற தமிழ்நாட்டில் 41,000 ஏரிகள் உள்ளன.

50 ஏக்கர் முதல் 5,000 ஏக்கர் வரை நீர்பாயும் அளவுக்கு நீர் பிடிக்க ஏற்ற ஏரிகள் இவை.

**இவை நம் காலடியிலும் புழக்கடையிலும் உள்ளன.**

இவற்றைப் பற்றி ஊர்நாட்டாண்மைக்காரர், ஊராட்சித் தலைவர், சாதித் தலைவர்கள், மக்கள் அமைப்புகள், ஆளும் கட்சி - எதிர்க்கட்சிகள் - உள்ளூர் ஆசிரியர்கள், படித்த இளைஞர்கள் எவருமே கவலைப்படுவதில்லையே ஏன்? இதைப்புரிந்து கொள்ள அறிவில்லையா? பொறுப் பில்லையா? அக்கறை இல்லையா? இதற்குத் தீர்வு காண்பது பற்றியே எத்தரப்பாரும் கவலைப்படவில்லை என்றால், என்ன பொருள்?

நாம் செய்ய வேண்டியது தான் என்ன?

1. அந்தந்த ஊர் ஏரியின் ஆழம், அகலம், பரப்பு, நீர் கொள்ளளவு என்பதைப் பொதுப் பணித்துறை, வருவாய்த் துறை ஆவணங்களிலிருந்து மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.
2. ஏரிக்கு வரத்து வாய்க்கால், போக்கு வாய்க்கால் இவை எங்கே என்று அடையாளப்படுத்த வேண்டும். ஏரியின் பரப்பை அளந்து தெரிந்து கொள்ள வேண்டும்.
3. ஊராட்சியின் மாதாந்தரப் பொது மக்கள் கூட்டத் தில்-ஏரி வாய்க்கால்களையும், ஆக்கிரமிப்பை யும் தூர்வாரும் பொறுப்பு முழுவதையும் ஊர் மக்களே, நிர்ணயிக்கப்பட்ட வரி மூலம் நிதி திரட்டிக் கொண்டு, ஊர் மக்களே தூர் வார வேண்டும்.

**இதற்குப் பெயர்தான் குடிமராமத்து முறை.**

ஏரி உள்வாய், கலங்கு, மதகு இவற்றைத் தூர் வாருவது-பழுது பார்ப்பது என்பவற்றை மூன்றாண் டுக்கு ஒருமுறை பொதுப் பணித்துறையினர் செய்ய, அந்தந்த ஊராட்சியினர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்றைய இளந்தலைமுறையினரும் படித்தவர் களும் ஊர்ப் பெரியவர்களும் இவற்றைப் பற்றிச் சிந்தியுங்கள்!

**நீராண்மைக்கு உடனடித் தீர்வும் நிரந்தரத் தீர்வும் இதுதான் என்கிற அதேநேரத்தில், இரண்டாம் பட்ச மாக - இரண்டாம் நிலைப்பாடாக நீராண்மை பங்கீட்டு உரிமைக்கும் போராடுவோம்!**

**நீரின்றி அமையாது உலகு!**

**- வே. ஆனைமுத்து**

**பெரியார் ஈ.வெ.ரா.-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு மாதவரம் இரா.பத்மநாபன் ரூ.1000/- நன்கொடையளித்தார்.**

# உன்னை நீ விற்காதே!

**கவிவேந்தர் கா. வேழவேந்தன்**

வாக்குரிமை என்பதென்ன? நண்பா! அஃது
வளமார்ந்த நல்லாட்சித் ‘திறவுகோல்’ தான்!
பூக்கின்ற புதுப்புரட்சி, வண்மை, மேன்மை
பொலிவுடனே உருவாக்கும் ‘மந்தி ரக்கோல்!’
ஆக்கங்கள் அறுவடைக்கே மண்ணில் நாமும்
ஆவலுடன் பதியமிடும் ‘விதைநெல்’ என்பேன்!
தீக்குணத்தோர் அவ்வுரிமை விலைக்கு வாங்கச்
செயல்பட்டால் நீ பலியாய் ஆகலாமா?

கூறுகெட்டோர் நூறுகளால் உனையே வாங்கிக்
கோட்டைகளில் நுழைவார்கள்; விளைவும் என்ன?
ஏறுமுகம் நாட்டுக்கும் உண்டா? அந்த
எத்தர்களோ கோடிகளைச் சுரட்டி ஊழல்
நாறும்பாழ் வரலாற்றைப் படைப்பார் என்றால்,
நண்பா! நீ உனைவிற்க எண்ண லாமா?
‘சீறிவரும் பாம்புகட்குத் தவளை யூரில்
திருமுடி ஏன்?’ பாவேந்தர் அன்றே கேட்டார்!

பொன்னைவிற்பார்; பொருளைவிற்பார்; எனினும் தங்கள்
புகழ்க்கற்பை விற்பாரா நந்தம் பெண்டிர்?
தென்னைவிற்றார்; பனையைவிற்றார்; எனினும் தங்கள்
சீர்மானம் விற்றாரா நந்தம் முன்னோர்?
தன்னைஉயர் நாற்காலி அமர்த்து தற்குச்
சண்டாளர் இருட்பேரம் பேச வந்தால்
உன்னையும்நீ விற்காதே! தோழா, இன்னும்
ஊழல்நெடி தாங்காது நமது நாடு!

## பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில் பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு

*பெங்களூர் தமிழ்ச்சங்கம் ஒவ்வொரு ஆண்டும் பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடத்தி வருகிறது. 22.04.2017 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு தி.கோ.தாமோதரன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் மா.பெ.பொ.க.துணைப் பொதுச் செயலாளர் சி.பெரியசாமி மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே.ஆனைமுத்து ஆகியோர் உரையாற்றினர்.*

# எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!

# இந்தியா முழுவதையும் ஆள ஏற்ற திட்டம் வகுத்தது பாரதிய சனதாக் கட்சி தேசிய செயற்குழு!

**பா**ரதிய சனதாக் கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டம், ஒடிசா மாநிலத் தலைநகரமான புவனேஸ் வரத்தில், 15.4.2017 சனி, 16.4.2017 ஞாயிறு இரண்டு நாள்களிலும் நடைபெற்றது.

அண்மையில் நடந்த உத்தரப்பிரதேசச் சட்டமன்றத் தேர்தலில் 403 இடங்களில் 312 இடங்களைக் கைப் பற்றிய மாபெரும் வெற்றியைக் குவிக்க பாரதிய சனதா கையாண்ட அதே வாக்குச் சேகரிப்பு முறையை அப் படியே கையாண்டு, இந்தியா முழுவதிலுமுள்ள :

1. ஊராட்சிகள் அனைத்தையும்
2. நகராட்சிகள் அனைத்தையும்
3. பெருநகராட்சிகள் அனைத்தையும்
4. மாநிலச் சட்டமன்றங்கள் எல்லாவற்றையும்
5. நாடாளுமன்றத்துக்கு உள்ள 543 தொகுதிகளையும்

2019இல், பாரதிய சனதா கைப்பற்றத் திட்டமிட்டு விட்டது.

என்னென்னத் திட்டங்கள்?

**முதலாளித்துவமும் இந்துமதமும் கைகோத்துக் கொண்ட பெரிய பணத்தெம்பில், பாரதிய சனதாக் கட்சியின் தேசியத் தலைவர் அமித் ஷாவும், பிரதமர் நரேந்திர மோடியும் 2 ஆண்டுகளுக்கு முந்தியே வலி வான திட்டங்களைத் தீட்டிவிட்டனர்.**

அத்திட்டங்களாவன :

1. அமித் ஷா, இந்தியா முழுவதையும் 95 நாள்களில் வானூர்தியில் இப்போதே வலம் வருவார்.
2. இந்தப் பயணத்தைப் பயன்படுத்தி, ஊராட்சி உறுப் பினர் தொகுதி முதல் நாடாளுமன்றத் தொகுதி வரையில் உள்ள ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் - வாக்குச் சேகரிக்க வேண்டிய ஊதியப் பணியாளர் களை விரைவிலேயே அமர்த்திவிடுவார்.

**இந்த வசதி, பணத்தைப் பொறுத்த வரையில், இந்தியாவிலுள்ள வேறு எந்தக் கட்சிக்கும் இல்லை.**

**இது நடக்குமா? ஆம்! நடக்கும்!**

**எதை முகாந்திரமாக வைத்து இதை நாம் கூறுகிறோம்?**

நாம் 2017 ஏப்பிரல் "சிந்தனையாளன்" தலையங் கத்தில் எழுதியுள்ளதை ஒவ்வொருவரும் இங்கு நினைவு கூருங்கள்!

இதோ அது :

"அமித் ஷா பா.ச.க.வின் தேசியத் தலைவர்.

அவர் ஓராண்டுக்கு முன்னரே உ.பி.யில் ஒரு வாக்குச்சவாடிக்கு 10 முதல் 21 பேர்கள் வீதம் வாக்குச் சேகரிப்போரை அமர்த்திவிட்டார்.

உ.பி.யில் மொத்த வாக்குச்சாவடிகள் 1,47,401 ஆகும். இவற்றில் வாக்குச் சேகரிக்க 13,50,000 ஆள்கள் அமர்த்தப்பட்டிருந்தனர்.

அதனால்தான் உ.பி.யில் பதிவான மொத்த வாக்கு களில், பாரதிய சனதா கூட்டணியினர் 41.4 விழுக்காடு வாக்குகளை வாரிக் குவிக்க முடிந்தது.

**இவ்வளவு பெரிய பட்டாளத்துக்கு எத்தனை ஆயிரம் கோடி ரூபா செலவாயிற்றோ!**

**மோடிக்கும் ஷாவுக்கும் தான் அது தெரியும்!"**

**எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!**
**எல்லோருக்கும் எச்சரிக்கை!**

**17.4.2017** **- வே. ஆனைமுத்து**

**பேராசிரியர்**
**யோகசுந்தரனார் அறக்கட்டளை, வேலூர்**

## தமிழ் நூல்கள் பரிசுப்போட்டி 2017

நற்றதமிழ் வளர்த்தவர், தனித்தமிழ் ஆர்வலர், ஊரிசு கல்லூரியின் மேலாளர் தமிழ்த்துறைத் தலைவர் செ.யோக சுந்தரனார். தமிழறிஞர் மு.வரதராசனாரின் இணைபிரியா வாழ்நாள் தோழர். அமரர் பேரா.செ.யோகசுந்தரனாரின் நூற்றாண்டு விழாவின்போது தொடங்கிய அறக்கட்டளை ஆண்டுதோறும் நல்ல தமிழ் நூல்களுக்குப் பரிசு அளித்து வருகிறது. இந்த ஆண்டும் 2017 சூன் மாத இறுதியில் ஆண்டு விழாவின்போது பரிசுகள் அளிக்கப்படும்.

* நல்ல தமிழில் 2015, 2016, 2017 ஆண்டுகளில் வெளியான கதை, கவிதை, கட்டுரை நூல்கள்.
* கேடயத்துடன் முதல், இரண்டு, மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.5000/-, ரூ.3000/-, ரூ.2000/-
* நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது. நூல்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

மூன்று படிகள் நூலாசிரியரின் முழு விவரத்துடன் 31-5-2017க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

நூல்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

**பேரா. செ.யோகசுந்தரனார் அறக்கட்டளை**
மே/பா.மரு.ஏ.பி.சோதிநாதன், மனை எண்.1268சி,
இரண்டாம் பகுதி, 50வது தெரு, சத்துவாச்சாரி, வேலூர் - 632 009.
தொடர்புக்கு : 9486969525, 9444111416

# வரலாறு காணாத வறட்சியிலும் வஞ்சிக்கும் அரசுகள்

- க. முகிலன்

1876ஆம் ஆண்டிற்குப்பின் 2016ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவ மழை மிகவும் குறைவாகப் பெய்தது. பொதுவாக வடகிழக்குப் பருவ காலத்தில் தமிழகம் 440 மி.மீ. மழை பெறும். ஆனால் 2016 வெறும் 168 மி.மீ. மழை மட்டுமே பெய்தது. இது வழக்கத்தைவிட 62 விழுக்காடு குறைவாகும். தென்மேற்குப் பருவ மழையும் குறைவாகவே பெய்தது. அதனால் தமிழகம் கடந்த அய்ம்பது ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் கடுமையான வறட்சியையும், பயிர்ச் சேதத்தையும் சந்திக்க நேரிட்டது. தமிழகத்தில் உள்ள 16,682 வருவாய்க் கிராமங்களில், 13,305 வருவாய்க் கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் 32 மாவட்டங்களிலும் வறட்சி நிலவுகிறது. ஏறத்தாழ 50 இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்ட பயிர்கள் பல்வேறு நிலைகளில் நீரில்லாமல் கருகின. இதனால் முப்பது இலட்சம் உழவர்கள் பெரும் இழப்புகளுக்கு ஆளாகி உள்ளனர்.

### காவிரி நீர் உரிமை

காவிரிப் பாசனப் பகுதியில் வேளாண்மை காவிரி ஆற்றின் நீரையே நம்பியிருக்கிறது. கருநாடகம் ஓராண்டில் தமிழகத்துக்கு 179 டி.எம்.சி. நீரைக் காவிரியில் திறந்துவிட வேண்டும். ஆனால் 2016இல் வெறும் 66 டி.எம்.சி. நீர் மட்டுமே திறந்துவிடப்பட்டது. உச்சநீதிமன்றம் தமிழகத்துக்குத் தண்ணீரைத் திறந்துவிடுமாறு பலமுறை அறிவுறுத்தியும் கருநாடகம் அதைப் பொருட்படுத்தவில்லை.

காவிரிப் பாசனப் பகுதி உழவர்கள், மேட்டூர் அணையில் தண்ணீர் குறைவாக இருந்தபோதிலும், வடகிழக்குப் பருவத்தில் இயல்பான அளவுக்கு மழைபெய்யும் என்று நம்பி 13 இலட்சம் ஏக்கரில் நெல் பயிரிட்டனர். வடகிழக்குப் பருவ மழை கிட்டத்தட்ட முற்றிலுமாகப் பொய்த்துவிட்டதால் பயிர்கள் காய்ந்து கருகுவதைக் கண்டு 400க்கும் மேற்பட்ட உழவர்கள் அதிர்ச்சியால் மாரடைப்பு ஏற்பட்டும் தற்கொலை செய்து கொண்டும் மாண்டனர்.

தமிழகத்துக்கு உரிய காவிரி நீரைத் தராமல் கருநாடகம் அடாவடித்தனம் செய்து வருகிறது. நடுவண் அரசில் மாறி, மாறி ஆட்சி செய்யும் காங்கிரசுக் கட்சியும், பாரதிய சனதாக் கட்சியும் தங்களுடைய அரசியல் ஆதாயத்தைக் கருத்தில் கொண்டு கருநாடகத்துக்கு ஆதரவாக நின்று, தமிழகத்தைத் தொடர்ந்து வஞ்சித்து வருகின்றன.

தி.மு.க.வின் முயற்சியால் வி.பி. சிங் தலைமை அமைச்சராக இருந்தபோது 1990இல் காவிரி ஆற்றுநீர் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. ஓராண்டிற்குள் தீர்ப்பாயம் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. அதன்படி ஆண்டுதோறும் சூன் மாதம் முதல் கருநாடகம் 205 டி.எம்.சி. நீரைத் தமிழகத்திற்கு திறந்துவிட வேண்டும். ஆனால் கருநாடக அரசு இதன்படி நீரைத் திறந்துவிடவில்லை. தீர்ப்பாயம் 2007இல் தன் இறுதித் தீர்ப்பை வழங்கியது. அதில் தமிழகத்துக்குரிய நீரின்



அய்யாக்கண்ணு தலைமையில் உழவர்கள் தில்லியில் 41 நாட்கள் நடத்திய போராட்டத்தின் ஒரு நாள் காட்சி

அளவு 183 டி.எம்.சி.யாகக் குறைக்கப்பட்டது. தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த பிறகுதான் நடுவண் அரசு 2013இல் தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டது. அரசிதழில் வெளியிட்ட ஓராண்டிற்குள் காவிரி மேலாண்மை வாரியத்தையும், காவிரி நீர் பங்கீட்டு ஒழுங்காற்றுக் குழுவையும் நடுவண் அரசு அமைத்திருக்க வேண்டும்.

தமிழக மக்கள் தங்கள் தனித்தன்மையைத் துறந்து தேசிய நீரோட்டத்தில் தங்களைக் கரைத்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்பதால் நடுவண் அரசு தமிழகத்துக்குரிய காவிரி நீரைக் கிடைக்கவிடாமல் செய்திட வஞ்சக எண்ணத்துடன் காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்காமல் இருக்கிறது. தமிழக அரசு இதுகுறித்து உச்சநீதிமன்றத்தில் முறையிட்டது. உச்சநீதிமன்றத்தில் நடுவண் அரசு, காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்குமாறு ஆணையிட உச்சநீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று அடாவடித்தனமாகக் கூறியது. நாடாளுமன்றம்தான் அதை முடிவு செய்ய வேண்டும் என்றும் கூறியது.

காவிரி ஆற்றுநீர்த் தீர்ப்பாயத்தில் தமிழகத்துக்குத் தரப்பட்டுள்ள குறைந்த அளவு காவிரி நீர் உரிமையையும் குழி தோண்டிப் புதைக்கும் நோக்கில், நடுவண் அரசின் நீர்வளத் துறை அமைச்சர் உமாபாரதி, இந்தியா முழுவதும் உள்ள ஆறுகள் அனைத்துக்கும் சேர்த்து ஒற்றைத் தீர்ப்பாயம் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார், உமாபாரதியின் இந்த அறிவிப்பை எதிர்த்து தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் காவிரிப் பாசன உழவர்கள் பல நாள்கள் போராட்டம் நடத்தினர். காவிரிச் சிக்கலை 1974இல் இருந்த நிலைக்குத் தள்ளிவிட்ட நடுவண் அரசின் வல்லாதிக்கத்தைத் தமிழர்கள் ஒன்றுதிரண்டு எதிர்த்துப் போராட வேண்டும். இல்லாவிடில், மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று, யானைக் கட்டிப் போரடித்த சோழ வளநாடு என்கிற பெருமிதம் பழங் கதையாய்ப் போகும். தமிழகத்தின் காவிரிப் பாசன வள வயல்கள் பாலை நிலமாக மாறும்.




**தமிழக அரசின் நிவாரணம்**

வடகிழக்குப் பருவமழை முற்றிலுமாகப் பொய்த்ததால், நவம்பர், திசம்பர் மாதங்களில் காவிரிப் பாசனப் பகுதியில் தங்கள் பயிர் முற்றிலும் கருகுவதைக் கண்டும், வாங்கிய கடனை எப்படி அடைப்பது என்கிற அதிர்ச்சியாலும் பல உழவர்கள் வயல்களிலேயே மாரடைப்பால் மாண்டனர். பலர் தற்கொலை செய்துகொண்டனர். இந்தக் கொந்தளிப்பான சூழலில் 2017 சனவரியில் தமிழக அரசு வறட்சி நிவாரணத் தொகையாக ரூ.2,247 கோடியை ஒதுக்குவதாக அறிவித்தது. மேலும் நிலவரி முழுவதையும் தள்ளுபடி செய்வதாகவும், கூட்டுறவு வங்கிகள் மூலம் உழவர்கள் பெற்ற ரூ.3028 கோடிக்கான பயிர்க்கடனை மத்திய காலக்கடனாக மாற்றிய மைக்கப்படும் என்று அறிவித்தது.

ரூ.2,247 கோடி நிவாரண நிதியிலிருந்து நெல் உள்ளிட்ட நீர்ப்பாசனப் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.5465, மானாவாரிப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.3000, கரும்பு, வாழை போன்ற நீண்டகாலப் பயிர்களுக்கு ரூ.7287 இழப்பீட்டுத் தொகையாக உழவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. தமிழக அரசு அமைத்த தொழில் நுட்ப வல்லுநர் குழுவின் அறிக்கையில் ஒரு ஏக்கருக்கான சாகுபடிச் செலவு நெல்லுக்கு ரூ.25,000; மானாவாரிப் பயிர்களுக்கு ரூ.10,000 முதல் ரூ.15,000 வரை, கரும்புக்கு ரூ.75,000 என்று கூறப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசு அறிவித்துள்ள இழப்பீட்டுத் தொகை யானைக்குச் சோளப் பொறி போன்றதே ஆகும்.

நடுவண் அரசின் வல்லுநர் குழு தமிழகத்தின் பயிர்ச் சேதத்தைப் பார்வையிட்டுச் சென்றது. நடுவண் அரசின் தேசியப் பேரிடர் மீட்பு நிதியிலிருந்து தமிழகத்துக்கு ரூ.39,565 கோடி வறட்சி நிவாரணமாக வழங்க வேண்டும் என்று தமிழக அரசு நடுவண் அரசுக்கு அறிக்கை அனுப்பியது. மார்ச்சு மாத இறுதியில் நடுவண் அரசு வெறும் ரூ.1748 கோடி மட்டுமே அளித்தது. கருநாடகம் உள்ளிட்ட சில மாநிலங்கள் வறட்சி நிவாரண நிதியாகக் கேட்ட தொகையில் 30 விழுக்காடு அளவுக்குப் பெற்றன.

தமிழகத்தில் ஆட்சியில் இருக்கும் அ.தி.மு.க. உள்கட்சி சண்டையிலேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறது. மேலும் தமிழக ஆட்சியாளர்கள் நடுவண் அரசைக் கண்டு அஞ்சிக் கொண்டிருப்பதால், தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணத் தொகையைப் பெற்றிட தவறிவிட்டனர். நடுவண் அரசும் வேண்டுமென்றே தமிழகத்தை வஞ்சித்துவிட்டது. 23.4.2017 அன்று தில்லியில் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் முன்னிலையில் நடைபெற்ற நீதி ஆயோக் கூட்டத் தில் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தமிழகத் திற்கு மிகக் குறைவாக வறட்சி நிவாரணத் தொகை ஒதுக்கப் பட்டது பற்றியோ, இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டு மென்று வலியுறுத்தியோ ஒரு சொல்லும் பேசவில்லை.

மேலும் தமிழக அரசு, ஊரக வளர்ச்சித் துறை மூலம் ரூ.3,400 கோடி செலவில் ஏரிகள், பாசனக் கால்வாய்கள், குளங்கள் முதலானவைத் தூர்வாரப்படும் என்று கூறியுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் நீர்நிலைகள் தூர்வாரப்படவே இல்லை. இதற்காக ஒதுக்கப்படும் பணத்தை அதிகாரிகளும், அரசியல் கட்சியினரும் பங்குபோட்டுக் கொள்ளை யடித்தனர். குடிமராமத்து எனப்படும் நீர்நிலைகளைத் தூர் வாருதல், ஏரி, குளம், குட்டைகளைச் செப்பனிடல் போன்ற பணிகள் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வந்திருந்தால், 2015ஆம் ஆண்டு பெய்த பெருமழையால் நீர்நிலைகளில் 2016ஆம் ஆண்டிலும் தண்ணீர் இருந்திருக்கும். இந்த நீர் பயிரிடுவதற்குப் போதுமானதாக இல்லாவிடினும், குடி நீருக் கும், கால்நடைகளின் நீர் தேவைக்கும் போதுமானதாக இருந்திருக்கும்.

**பிரதமர் பயிர்க் காப்பீட்டுத் திட்டம்**

தடாலடி மன்னன் பிரதமர் நரேந்திர மோடி, பேரிடர் காலத்தில் உழவர்களுக்கான "சர்வரோக நிவாரணி"யாக புதிய பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தை 2015ஆம் ஆண்டு அறிவித்தார். இது 2016ஆம் ஆண்டுமுதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திட்டம் தனியார் காப்பீட்டுத் துறை மூலம் செயல்படுத்தப்படும்.

பயிர் இழப்பீட்டின் விழுக்காடு முன்பு சில வருவாய்க் கிராமங்களைக் கொண்ட "பிர்க்கா" அளவில் மதிப்பிடப் பட்டது. புதிய பயிர்க் காப்பீடு திட்டத்தின்படி கிராம அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும். இதனால் பயிர் இழப்புக்குள்ளான உழவர்களுக்குக் கட்டாயம் இழப்பீடு தொகை கிடைக்கும் என்று கூறப்படுகிறது. காரிப் பயிர்களுக்கு 2 விழுக்காடும், ராபி பயிர்களுக்கு 1.5 விழுக்காடும் உழவர்கள் காப்பீட்டுக் கட்டணம் செலுத்த வேண்டும். மீதி பிரீமியம் தொகையில் 50 விழுக்காடு மாநில அரசும், 50 விழுக்காடு நடுவண் அரசும் செலுத்தும். 2016ஆம் ஆண்டில் 13 இலட்சம் உழவர்களுக் காக தமிழ்நாட்டு அரசு ரூ.410 கோடி பிரீமியம் தொகையைச் செலுத்தி உள்ளது. இதற்குமுன் சராசரியில் ஆண்டிற்கு ரூ.40 கோடி அளவில் பிரீமியம் தமிழக அரசால் செலுத்தப்பட்டு வந்தது.

2016ஆம் ஆண்டின் வறட்சியால் ஏற்பட்ட பயிர்ச் சேதத்தை ஈடுகட்டும் அளவுக்குப் பயிர்க் காப்பீட்டுத் தொகை கிடைக்கும் என்று உழவர்களுக்கு ஆசை காட்டப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் காவிரிப் பாசனப் பகுதியில் நெல் பயிரில் 100 விழுக் காடு பயிர் பாதிப்பு அடைந்தவர்களுக்கு ஏக்கருக்கு ரூ.25,000; 80 விழுக்காடு பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.20,000; 60 விழுக் காடு பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.15,000; 33 விழுக்காடு பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.8250 பயிர்க் காப்பீட்டுத் தொகை கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

எந்த உழவரின் பயிருக்கு எவ்வளவு விழுக்காடு பாதிப்பு என்று காப்பீடு செய்துள்ள 13 இலட்சம் உழவர்களுக்குத் தனித் தனியான கணக்கீட்டு அறிக்கை வருவாய்த் துறையிடமோ வேளாண் துறையிடமோ இல்லை. எனவே பயிர்க் காப்பீட்டு மூலம் இழப்பை ஈடுகட்டும் தன்மையில் பணம் தரப்படும் என்பது கானல் நீராகவே இருக்குமோ என்று அய்யுற வேண்டியுள்ளது. தனியார் மருத்துவக் காப்பீடு என்பதிலும் தனியார் காப்பீட்டு நிறுவனமும் தனியார் மருத்துவமனை களும் கூட்டுக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றன. எந்தவொரு தனியார் காப்பீட்டு நிறுவனமும் பிரீமியத் தொகை மூலம் பணம் திரட்டுவதில் காட்டும் ஆர்வத்தை, இழப்பீடு தருவதில் காட்டுவதில்லை என்பது கண்கூடான உண்மை.

### ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

மகாத்மா காந்தி வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் வறட்சி நிவாரண நடவடிக்கையாக 100 நாள் வேலை என்பதை 150 நாளாக உயர்த்துவதாகத் தமிழக அரசு அறி வித்துள்ளது. தமிழ்நாட்டில் 89 இலட்சம் பேர் இத்திட்டத்தில் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 69 விழுக்காட்டினர் பெண்கள். ஒரு நாளைக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி ரூ.203. ஆனால் வேலையின் அடிப்படையில் அளிக்கப்படும் சராசரி கூலி ரூ.162 ஆகும். 2016-17ஆம் நிதி ஆண்டில் மண் வேலை செய்தவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய கூலி நிலுவைத் தொகை ரூ.965 கோடி. மொத்தமாக நிலுவையில் உள்ள கூலித் தொகை ரூ.2954 கோடி. உண்மை நிலை இவ்வளவு கேடானதாக இருக்கும்போது, வேலை நாள்கள் 150ஆக உயர்த்தப்படும் என்பது எத்தகைய மோசடி! (ஆதாரம் : தி இந்து (தமிழ்), 11.1.17).



பிரதமரைச் சந்திப்பதற்காக என்று கூறி அழைத்துச் சென்றபின் ஏமாற்றியதால் ஆடைகளைக் களைந்து போராட்டத்தில் ஈடுபட்ட உழவர்கள்

இத்திட்டத்தில் நடுவண் அரசின் பங்களிப்புத் தொகையான 75 விழுக்காட்டைத் தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களுக்கு அளிக்கப்படாமையே கூலித்தொகை நிலுவைக்கு முதன்மை யான காரணமாகும். 2017-18ஆம் ஆண்டிற்கு இந்திய அளவில் இத்திட்டத்திற்கு எப்போதும் இல்லாத அளவில் ரூ.48,000 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாக நிதி அமைச்சர் அருண்ஜெட்லி வரவு-செலவு திட்ட அறிக்கையில் கூறுகிறார். மக்களுடன் நேரிடையான நிருவாகத் தொடர்பில் இருப்பவை மாநில அரசுகள். ஆனால் மக்களுடன் நேரிடையான தொடர் பில் இல்லாத நடுவண் அரசின்கீழ் பல திட்டங்கள் இருப்பது சனநாயகப் படுகொலையாகும்.

### கடனில் உழலும் உழவர்கள்

1991இல் இந்திய அரசு தாராள மயம், தனியார் மயம், உலக மயம் என்கிற கொள்கையை நடைமுறைப்படுத்தத் தொடங்கியது முதல் நடுவண் அரசாலும், மாநில அரசு களாலும் வேளாண்மை புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. வேளாண்மை இடுபொருள்களின் மானியங்கள் படிப்படியாக நீக்கப்பட்டன. கொள்முதலில் பன்னாட்டு நிறுவனங்கள் அனு மதிக்கப்பட்டன. விதை, உரங்கள், பூச்சி மருந்துகள் தனியாரின் ஆதிக்கத்திற்குச் சென்றன. அதனால் வேளாண்மை பெருஞ் செலவினதாக மாறியது. விலையைக் கட்டுப்படுத்தும் பொறுப்பி லிருந்து அரசு விலகிக் கொண்டது. அறுவடைக்காலத்தில் குறைந்த விலையில் உழவர்கள் தங்கள் விளைபொருள் களை விற்கும் அவலநிலைக்குத் தள்ளப்படுகின்றனர். வறட்சி, அதிக மழை, காலந்தவறிய மழை, பூச்சி நோய் தாக்குதல் முதலான காரணங்களால் அய்ந்து ஆண்டுகளில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் முழுமையான இழப்பு ஏற்படுகிறது. மக்களின் உணவுக்கான வேளாண்மை என்பது சந்தையில் விற்பதற்கான வேளாண்மையாக மாறியதால் மானாவாரி வேளாண்மை அழிந்தது. இக்காரணங்களால் கடன்சுமை அதிகமாகியது.

கடந்த இருபது ஆண்டுகளில் இந்திய அளவில் கடன் சுமையைத் தாங்க முடியாமல் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட உழவர்கள் தற்கொலை செய்துகொண்டதாகத் தேசிய குற்றப் பதிவு ஆணையத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. நாளொன்றுக்கு 34 உழவர்கள் தற்கொலை செய்து கொள் கின்றனர். தமிழ்நாட்டில் 2016-17ஆம் ஆண்டில் 400க்கும் மேற்பட்ட உழவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். தமிழக அரசோ 17 உழவர்கள் மட்டுமே தற்கொலை செய்து கொண்டதாகக் கூறிவந்தது. அண்மையில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி 82 உழவர்கள் தற்கொலை செய்து கொண்டதாகத் தமிழக அரசு ஒத்துக்கொண்டுள்ளது. ஆனால் 28-4-17 அன்று தமிழ்நாட்டு அரசு தில்லி உச்ச நீதி மன்றத்தில் அளித்த அறிக்கையில், ‘‘வறட்சியின் காரணமாக எந்தவொரு விசாயியும் தற்கொலை செய்து கொள்ளவில்லை; மாரடைப்பு, உடல்நலக்குறைவு, வயது முதுமை உள்ளிட்ட தனிப்பட்ட காரணங்களால் மட்டுமே அவர்கள் இறந்து போனார்கள்’’ என்று கயமையாகக் கூறியுள்ளது. மேலும் 80 விழுக்காட்டினராக உள்ள உழவர்கள் தனியாரிடம் கடன் வாங்குகின்றனர். விதை, உரங்கள், பூச்சி மருந்து கடைக் காரர்களிடம் அதிக வட்டியில் கடன் வாங்குகின்றனர்.

எனவே கடன் சுமையால் உழவர்கள் பெருந் துன்பத் திற்கு உள்ளாகின்ற நெருக்கடியான காலங்களில் அவர்களின் கடன் சுமையைப் போக்க வேண்டியது அரசின் கடமை யாகும். 1989இல் வி.பி. சிங் தலைமை அமைச்சராக இருந்த போது, ரூ.10,000 கோடிக்கு உழவர்களின் வங்கிக் கடனைத் தள்ளுபடி செய்தார். அதன்பின் அரசுகளால் செய்யப்பட்ட கடன் தள்ளுபடிகளெல்லாம் கட்சிகளின் ஆதாயத்தை நோக்க மாகக் கொண்டிருந்தன. 2008இல் மன்மோகன் சிங் ஆட்சி யில் 72,000 கோடிக்கு உழவர்களின் கடன் தள்ளுபடி செய்யப் பட்டது. 2006இல் தமிழ்நாட்டில் கலைஞர் கருணாநிதி ஆட்சியில் ரூ.7000 கோடி கூட்டுறவு வங்கிக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. 2016 தேர்தலில் வாக்களித்தபடி முதலமைச்சர் செயலலிதா சூன் மாதம் ரூ.5,780 கோடிக்கு 16,94,145 சிறு, குறு உழவர்களின் கூட்டுறவு சங்கக் கடனைத் தள்ளுபடி செய்தார். உத்தரப்பிரதேசத் தேர்தல் அறிக்கையில் சொல்லிய படி, 2017 மார்ச்சு மாதம் முதலமைச்சர் ஆதித்தியநாத் ரூ.36,000 கோடிக்கு உழவர் கடன் தள்ளுபடியை அறிவித்திருக்கிறார்.

இந்திய ரிசர்வ் வங்கியும், நிதி அமைச்சகமும், உலக வங்கியும் உழவர்களின் கடன் தள்ளுபடி நடவடிக்கைகளை எதிர்க்கின்றன. ஆனால் பெருமுதலாளிகளுக்கு இலட்சக்கணக் கில் அரசு கடன் தள்ளுபடி செய்வதை இவர்கள் கண்டுகொள் வதில்லை. கடந்த மூன்று ஆண்டுகளில் 50 பெரு முதலாளி களின் வாராக் கடன் 1.4 இலட்சம் கோடி தள்ளுபடி செய்யப் பட்டது. (தினமணி 1.4.2017 ஏப்பிரல் மாதம் ரூ.5,02,068 கோடியாக இருந்த வாராக்கடன் 2016 திசம்பரில் 9 மாதங் களில் ஒரு இலட்சம் கோடி அதிகரித்து - ரூ.6,06,911 கோடி யாக உயர்ந்தது) இந்த வாராக்கடன்கள் பெருமுதலாளிய நிறுவனங்கள் திருப்பிச் செலுத்தாத கடன் தொகையாகும்.



இதுதவிர, ஆண்டுதோறும் பெருமுதலாளிய - வணிக நிறுவனங்கள் ஏற்றுமதி வரி, இறக்குமதி வரி, சொத்து வரி, முதலீட்டு வரி, விற்பனை வரி என்கிற பல்வேறு பிரிவுகளின் கீழ் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரித் தொகையில் விலக்கு பெறும் தொகை 5 இலட்சம் கோடி உருபா ஆகும். கடந்த பத்து ஆண்டுகளில் இத்தன்மையில் அரசுக்கு வரவேண்டிய வருவாய் இழப்பு ரூ.48 இலட்சம் கோடி என்று நடுவண் அரசின் பொருளாதார ஆய்வறிக்கையிலேயே கூறப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த நூறு ஆண்டுகளில் இல்லாத அளவில் கடும் வறட்சியில் தத்தளிக்கும் தமிழக விவசாயிகள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்றுள்ள ரூ.7000 கோடி கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அய்யாக்கண்ணு தலைமையில் தில்லியில் ஜந்தர் மந்தர் பகுதியில் மார்ச்சு 14 முதல் 41 நாள்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான அவலநிலைப் போராட்டம் நடத்திய தமிழக உழவர்களை மோடி அரசு ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஆனால் உச்சநீதி மன்றம் நெடுஞ்சாலைப் பகுதிகளில் உள்ள மதுக்கடைகளை மூடவேண்டும் என்று உறுதியுடன் ஆணையிட்டதும், சாராய முதலாளிகள் கொடுத்த அழுத்தத்தால் உடனே மோடி தன் அமைச்சரவையைக் கூட்டி, பா.ச.க. ஆட்சி செய்யும் மாநிலங் களில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளையும், மாநில நெடுஞ்சாலைகளையும் மாவட்டச் சாலைகளாக அறிவிப்பது என்று முடிவு செய்தாரே! விஜய் மல்லையா பல்லாயிரம் கோடி கடன் வாங்கிவிட்டு இந்தியாவை விட்டுத் தப்பியோட துணைநின்றவர் தானே இந்த மோடி!

கடந்த பத்து ஆண்டுகளில் மட்டும் உழவர்கள், வேளாண் தொழிலாளர்கள் என 5 கோடிப் பேர் வேளாண்மையை விட்டு நகரங்களில் வேறு தொழில்களைத் தேடி வெளியேறி யிருக்கிறார்கள். 2011 மக்கள் தொகைக்கணக்கெடுப்பின்படி, நாளொன்றுக்கு 2500 பேர் விவசாயத்தைவிட்டு வெளியேறு கின்றனர். குடிப்பது கூழானாலும் தன்மானத்துடன் கிராமத்தில் வாழ்ந்து வந்த இவர்கள் நகரங்களின் நடைபாதைகளில் பிச்சைக்காரர்களைப் போலப் படுத்துக் கிடக்கும் இழிநிலைக் குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.


நடுவண் அரசின்கீழ் இயங்கும் தேசிய மாதிரி ஆய்வு ஆணையம் (NSSO) 2002-2003ஆம் ஆண்டில் நடத்திய கணக்கெடுப்புப்படி ஒரு விவசாயக் குடும்பத்தின் சராசரி வருமானம் ரூ.2115ஆக இருந்தது. இது பத்து ஆண்டுகள் கழித்து 2012-13இல் ரூ.6426ஆக உயர்ந்தது. ஆனால் 2012-13இல் ஒரு விவசாய குடும்பத்தின் செலவு ரூ.6223 என்று தெரிவித்துள்ளது. எனவே ஒரு விவசாயக் குடும்பத்தின் மொத்த வருமானமும் அவர்களின் குடும்பச் செலவுக்கே சரியாகிவிடுகிறது. அதாவது வாய்க்கும் வயிற்றுக்குமான வாழ்க்கையாக இருக்கிறது.

அதேசமயம் விவசாயத் தொழிலாளர்களின் நிலை இன்னும் இரங்கத்தக்க நிலையில் இருக்கிறது. 2002-2003 முதல் 2012-2013 வரையிலான காலத்தில் வேளாண் கூலித் தொழிலாளர்களின் நுகர்வுப் பொருள்களின் பணவீக்கம் 7.2 விழுக்காடாக இருக்கிறது. இதேகாலத்தில் இவர்களின் வருவாய் உயர்வு 4 முதல் 4.5 விழுக்காடாக இருக்கிறது. எனவே இவர்களின் உண்மையான வருமானம் எதிர்மறையாக இருக்கிறது. அதனால்தான் வேளாண் தொழிலாளர்கள் கிராமங்களைவிட்டு நகரங்களை நோக்கிதான் வெளியேறிக் கொண்டே இருக்கிறார்கள்.

இந்த நிலையைத்தான் முதலாளிய ஆளும்வர்க்கம் விரும்புகிறது. ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநராக இருந்த இரகுராம் ராஜன் விவசாயத்திலிருந்து மக்களை வேறு பிழைப்புக்கு நகர்த்துவதுதான் வளர்ச்சியின் இலக்கு என்று ஒருமுறை குறிப்பிட்டார். முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் 70 விழுக்காடு விவசாயிகள் தேவையில்லை என்றும் அவர்களை வேறு தொழிலில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் கூறினார். இந்தியாவில் கிராமங்களிலிருந்து 40 கோடி மக்களை நகரங்களுக்கு நகர்த்த (விரட்ட) வேண்டும் என்று உலக வங்கி கூறுகிறது. இப்படிச் செய்தால்தான் கிராமப்புறங் களில் கார்ப்பரேட் வேளாண்மையைக் கொண்டுவரமுடியும். நகர்ப்புறங்களில் குறைந்த கூலிக்கு, காரல்மார்க்சு குறிப்பிட்டது போல் உழைப்பதற்காகப் பெரும் பட்டாளம் ஏங்கிக் காத்துக் கிடக்கும் நிலை ஏற்படும். முதலாளியத்தின் கொள்ளை இலாபத் துக்கு இதுவே இன்றியமையாத முன் தேவையாகும்.

அய்யாக்கண்ணு தலைமையில் உழவர்கள் தில்லியில் திறந்தவெளியில் அரை நிர்வாண கோலத்தில் வெய்யிலிலும் கடும் குளிரிலும் போராடியதால், இந்தியா முழுவதும் நாள் தோறும் செய்தி ஏடுகளிலும் தொலைக்காட்சிகளிலும் தமிழ்நாட்டில் நிலவும் கடும் வறட்சி குறித்தும், தேவையான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளாத மாநில - மத்திய அரசுகள் பற்றியும் மக்கள் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. இதில் தமிழ்நாட்டு அரசின் கையாலாகத்தனமும் நடுவண் அரசின் வஞ்சப்போக்கும் தமிழக மக்கள் முன் அம்பலப்பட்டு நின்றன. இன்னும் கடுமையான போராட்டங்களை மேற் கொண்டால்தான் ஆளும் வர்க்கங்களை மக்களின் கோரிக் கைகளை ஏற்கச் செய்ய முடியும் என்பதைத் தில்லியில் உழவர்கள் நடத்திய 41 நாள்கள் போராட்டமும் தமிழகத்தில் பரவலாக நடத்தப்பட்ட போராட்டங்களும் உணர்த்துகின்றன.

## தோழர் மூவேந்தன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்விற்கு பாவலர் தமிழேந்தி அவர்களின் இரங்கல் செய்தி!



தமிழியக்கச் செயற்பாட்டாளர், பெரியார் பற்றாளர் தோழர். மா. மூவேந்தன் அவர்கள் 3-3-17 அன்று மறைவுற்ற செய்தி அதிர்ச்சியையும் ஆறாத் துயரையும் அளித்தது. என்னுடைய முப்பதாண்டு கால இனிய தோழர் மூவேந்தன்; அவரும் நானும் பழகிய நாட்களை நினைந்து நினைந்து நெஞ்சம் அழுகிறது. இப்போது நான் உடல்நிலை முழுவதும் பாதிக்கப்பட்டிருக் கிறேன். என்னால் அவருடைய இரங்கல் நிகழ்ச் சிக்கு வரமுடியவில்லை; உரிய நேரத்தில் என்னு டைய இரங்கலைப் பதிவு செய்ய வாய்ப்பில்லை. எனவே, அந்தப் பெரும் வாய்ப்பினை நான் இழந் தேன்.

உரிய தகவல் தொடர்பு இன்மை காரணமாக எங்கள், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும் அதன் பொதுச் செயலாளர் தோழர் ஆனை முத்துவும் இரங்கலைப் பதிவு செய்ய முடியவில்லை. அதனால் இந்த ஏப்ரல் “சிந்தனையாளன்” இதழிலும் தோழர் மூவேந்தனின் இறப்புச் செய்தி இடம் பெறாமையானது மிகப் பெரும் அவலமாகும்.


தோழர் மூவேந்தன் அவர்களின் இழப்பினை எப்படித் தாங்குவேன்? எங்கள் கட்சியோடு அவர் ஓசூர் நகரில் இயங்கியதை எப்படி நாங்கள் மறப் போம்? இப்போதைக்கு, 16-4-17 அன்று நடக்கும் இந்த இரங்கல் கூட்டத்தில் எங்கள் கட்சியின் ஆழ்ந்த இரங்க லை மட்டும் அவருக்காக நாங்கள் பதிவு செய்கிறோம்.

தோழரை இழந்து வாடும் அவருடைய பெற்றோர் அவருடைய அன்புத் துணைவியார் தங்கை மலர் விழி மற்றும் அவர் மகன் பேத்தி கயல்விழி யாவ ருக்கும் என் இரங்கலைப் பதிவு செய்து கொள்கிறேன்.

(வேலூர் பாகாயத்தில் மருத்துவமனையில் இருந்து இரங்கலைப் பதிந்திருக்கிறேன்.)

**- பாவலர் தமிழேந்தி**

# கோவை தமிழ் அறிவியக்கப் புரவலர் மருத்துவர் மா. அரங்கசாமி மறைந்தார்!



மண்டல் பரிந்துரை தொடர்பாக, தாமாகவே முன் வந்து, ''பிரதமர்களும் குடி அரசுத் தலைவர்களும், பிற்படுத்தப்பட்டோர் உரிமையும்: நம் மானங் கெட்ட நிலை'' என, என் மனப்புழுக்கத்தைக் கொட்டி, ''சிந்தனையாளன்'' 2007 சூலை இதழில் நான் எழுதிய ஒரு நீண்ட கட்டுரையை ஒரு குறுநூல் வடிவில் தம் சொந்தச் செலவில் வெளியிட்டவர், கோவை மருத்துவ மாமணி மா. அரங்கசாமி அவர்கள்.

அப்பெருமகனார் 31.12.2016 அன்று கோவையில் மாரடைப்பால் மறைவுற்றார் என்கிற செய்தியை, 'சிந்தனையாளன்' E-mail-க்கு செந்தலை ந. கவுதமன் உடனே விடுத்திருக்கிறார். அது வெளியிடப்படவில்லை.

2017இல் மார்ச்சில் அவருடைய படங்களையும், 2017 ஏப்பிரல் கடைசியில் மா. அரங்கசாமி அவர்களின் குறிப்புகளையும் அவருடைய நான்காவது மகள் மாயாதேவி விடுத்து வைத்தார்.

கனத்த நெஞ்சுடன் மா. அரங்கசாமி அவர்களின் மறைவுச் செய்தியை வெளியிடுகிறோம்.

அப்பெருமகனார் கோவை இராமநாதபுரத்துக்கு அருகில் கணேசபுரத்தில் 29.1.1936இல் மாரப்பன்-ராசம்மாள் இணையரின் 3ஆவது மகனாகப் பிறந்தார். அவருடைய தமையனாரும் தமக்கையும் பிளேக் நோய்க்கு இரையாயினர்.

எனவே தாய்மாமா வீட்டில் 15 அகவை வரை வளர்ந்த அவர், பங்கஜா நூற்பு ஆலையில் வேலை செய்துகொண்டே, உயர்நிலைக் கல்வியை முடித்தார்.

கும்பகோணம் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்று, மருத்துவர் ஆனார். ஒத்த கல்வித் தகுதியுள்ள சரசுவதி அம்மையாரை 1963இல் இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்.

நான் சூலூரில் பங்கேற்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் மருத்துவர் மா. அரங்கசாமி பங்கேற்றார். கடைசியாக சூலூரில் ம. சரவணக்குமார் புதுமனை புகுவிழாவில், 5.10.2015 அன்று என்னை நேரில் சந்தித்து நீண்ட நேரம் அளவளாவினார்; பெரியார் - நாகம்மை அறக் கட்டளைக்கு அன்புடன் என்னிடம் நிதி அளித்தார்.


தி.மு.க. ஆர்வலரான மா. அரங்கசாமி அவர்கள் சிற்றூர்ப்புறப் பள்ளிகள் முன்னேற்றம், தமிழ் ஈழ விடுதலை, தமிழ் வளர்ச்சி, நூல்கள் வெளியீடு இவற்றில் நாட்டங்கொண்டு செயல்பட்டார்.

மா. அரங்கசாமி தம் 80ஆம் அகவை நிறைவு விழாவைக் கொண்டாட ஆயத்தம் செய்து கொண்டிருந்த நிலையில் சற்றும் எதிர்பாராத வண்ணம் தம் துணைவியார் சரசுவதி அம்மையார், அன்பு மகள்கள் கலைச்செல்வி, பரிமளா, திலகவதி, மாயாதேவி, மருமகன் ஆகியோரைத் தவிக்க விட்டுவிட்டு மறைவுற்றதை எண்ணி, மிக வருந்துகிறோம். அன்னாரின் குடும்பத்தார் மனந்தேற வேண்டுகிறோம்.

**வாழ்க மருத்துவர் மா. அரங்கசாமி புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

## காரல் மார்க்சு நூலகக் கண்ணன் மறைந்தார்



காரல் மார்க்சு நூலகக் கண்ணன் என அனைவராலும் அறியப்பட்ட ச.சீ.கண்ணன் தன் 94ஆம் அகவையில் 25-4-17 அன்று சென்னையில் இயற்கை எய்தினார். இவர் கல்வியாளர் ச.சீ.இராசகோபாலன் அவர்களின் அண்ணன்.

காங்கிரசு தேசிய இயக்கக் குடும்பத்தில் பிறந்த கண்ணன் காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்றார். கல்லூரியில் பயின்ற காலத்தில் பொதுவுடைமைக் கொள்கையாளரானார்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து 1978இல் ஓய்வு பெற்றார். அதன்பின் காரல் மார்க்சு நூலகத்தை நிறுவினார். இந்நூலகத்தில மார்க்சிய-லெனிய மூல நூல்களின் முழுமையான தொகுப்பு, கம்யூனிஸ்ட் கட்சியின் ஆவணங்கள், சோசலிச நாடுகளின் வரலாற்று நூல்கள், சோசலிசம் குறித்த ஆய்வு நூல்கள், இந்திய, தமிழக வரலாற்று நூல்கள், இந்தியாவிலும் உலக அளவிலும் வெளியிடப்பட்டு வந்த இடதுசாரி இதழ்கள் முதலானவை இடம் பெற்றிருந்தன. ஆய்வாளர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் இந்நூலகம் கருத்துக் கருவூலமாகப் பயன்பட்டு வந்தது.

அதேபோல பார்வையற்ற மாணவர்கள், பட்டதாரிகள் நலனுக்காகச் சங்கம் அமைத்து முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக உழைத்து வந்தார். அவரது மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். ச.சி.கண்ணன் அவர்களின் விருப்பப்படி, அவரது உடல் இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரிக்குக் கொடையாக வழங்கப்பட்டது.

# பெரியார் பெருந்தொண்டர் – என் மைத்துனர் கடலூர் கோ. பாண்டுரங்கனின் துணைவியார்
# ருக்குமணி அம்மாள் மறைந்தார்

கடலூர் ஆ. கோவிந்தசாமி அவர்களும், நானும் 1946 அக்டோபர் முதல் நெருங்கிய நண்பர்கள். 1950 முதல் மிகவும் நெருக்கம். அவருடைய வீடு கடலூர் வண்ணாரப் பாளையத்தில். அங்குதான் கோ. பாண்டுரங்கன் என்கிற கருப்புச் சட்டைக்காரரை - சுருட்டை முடிக்காரரை - எப்போதும் சிரித்த முகம் உள்ள அத்தோழரை 1952 தேர்தல் சமயத்தில் நான் பார்த்தேன். அங்கிருந்து 3 பர்லாங் தொலைவில் வன்னியர் பாளையத்தில் அவருடைய வீடு.

1952 தேர்தலில் விக்கிரவாண்டி தொகுதியில் ஆ. கோவிந்தசாமி போட்டியிட்டார். அவருடைய சொந்த மைத்துனர் வழக்குரைஞர் கோ. செல்வராசுவும், நானும் விக்கிரவாண்டி தொகுதி தேர்தலுக்குப் பொறுப்பாளர்கள். அத்தேர்தலின் போது, இரவு நேரத்தில் விழுப்புரத்துக்கு வந்து எங்கள் தேர்தல் பணிக்கு உதவி செய்தவர், பாண்டுரங்கன். 1953இல் கடலூரிலிருந்து சின்ன சேலத்துக்கு என்னை மாற்றிவிட்டார்கள். கோ. பாண்டுரங்கனுடன் சந்திப்பு குறைந்தது.

1956இல் அரசுசார் வேலையிலிருந்து விலகிய நான், 26.11.1957இல் அரசமைப்புச் சட்டத்தை எரித்துவிட்டு, 1957-58இல் சிறைப்பட்டேன். 1958 இறுதியில் விடுதலை பெற்றேன்.

1959-1960இல் திருச்சியில் விறகு மண்டி நடத்திடத் திட்டமிட்டேன். அதற்குப் பயிற்சி வேண்டும்.

கடலூர் கோ. பாண்டுரங்கன் திருப்பாதிரிப்புலியூர் சன்னதி தெருவில் “அழகிரி ஸ்டோர்” என்ற பெயரில் பெரிய மரக் கடை வைத்திருந்தார். 1959 கடைசியில் அக்கடைக்கு இரண்டு தடவைகள் போய், 2, 3 நாள்கள் தங்கி தோப்புகளைப் பார்ப்பது - மதிப்புப் போடுவது - கடையில் உடனிருந்து விவரம் தெரிந்து கொள்ளுவது இவற்றைச் செய்தேன்.

அப்பகுதியிலிருந்த “மதுரை முனியாண்டி விலாஸ்” உணவு விடுதிக்குச் சாப்பிட வரும் கம்யூனிஸ்ட்டுத் தோழர்கள் நடராசன், புருஷோத்தமன், தி.மு.க. தோழர் கி. கோவிந்தராசன் ஆகியோர்-என்னிடம் பேசுவதற்காகத் தோழர் கோ. பாண்டுரங்கன் கடைக்கு வருவர், கட்சிகளைப் பற்றிய நீண்ட விவாதம் நடக்கும்.

எங்கள் இருவரின் நட்பு நெருக்கமானது. உறவினர் என்கிற முறையில், பாண்டுரங்கன், திருச்சிக்கு என் வீட்டுக்கு வந்து 1978இல் 2, 3 நாள் தங்கினார். அப்போது விளையாட்டாக என் மகன்களில் மூத்தவருக்கு, அவர் வீட்டில் பெண் எடுப்பது பற்றிப் பேசிக் கொண்டோம். அது வினையமாக மாறி, 1989 நாங்கள் முன்கூட்டி செய்தியைச் சொல்லாமல், பெண் பார்க்கப் போனோம்; ஆனால் அதற்கு முதல் வாரத்தில் நாங்கள் நினைத்த பெண்ணுக்குத் திருமண உறுதி நடந்துவிட்டது.

எதிர்பாராதவிதமாக கோ. பாண்டுரங்கன் அவர்கள் 12.12.1990இல் தம் 65ஆம் அகவையில் மறைந்தார். வாண்டுகளாக மூன்று மகன்களையும் மூன்று மகள்களையும் விட்டு



கோ. பாண்டுரங்கன்



ருக்குமணி பாண்டுரங்கன்

விட்டு அவர் மறைந்தார். வன்னியர் பாளையத்துக்குப் போய் அத்துக்கத்தில் பங்கேற்றேன்.

அவர் மறைந்த பிறகு எங்களுக்குள் தொடர்பே இல்லை. திடுமென, 13.2.2017 அன்று, பாண்டுரங்கன் அவர்களுடைய அன்புத் துணைவியார் ருக்குமணி அம்மாள் மறைந்துவிட்டார் என்ற செய்தியை-அவருடைய மூத்த மகன் அழகிரியும், ம.தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் ஆ.வந்தியத்தேவனும் எனக்கு அறிவித்தார்கள். அன்று நான் தில்லியில் இருந்தேன்.

86ஆம் அகவையில் மறைந்த அன்புக்குரிய என் தங்கை ருக்குமணி அம்மாள் மறைவு கருதி, அவருடைய மக்களிடம் துக்கம் உசாவிட வேண்டி, 4.4.2017 பகல் 1 மணிக்கு நான் வன்னியர் பாளையம் கோ. பாண்டுரங்கன் இல்லம் சென்றேன். அவருடைய மகன்கள் அழகிரிசாமி, இராமசாமி, குருசாமி - மூன்று பேர்களையும் அழகிரிசாமி துணைவியார் காமாட்சி, இராமசாமி துணைவியார் வசந்தகுமாரி ஆகிய இருவரையும் நேரில் கண்டு ஆறுதல் கூறினேன்.

நீண்டநேரம் கோ. பாண்டுரங்கன் அவர்களின் தொண்டுகளைப் பற்றி அளவளாவினோம்.என்னைவிடச் சரியாக 6 மாதம் இளையவர் கோ. பாண்டுரங்கன்.

குருசாமியின் துணைவியார் மச்சகாந்தி மற்றும் மகள்கள் அறிவுக்கண்ணு - தரணிகுமார் இணையர், அன்பரசி - இராஜி இணையர், ரேவதி - வரதன் இணையர் ஆகியோர்க்கும்; மஞ்சு பாரதி முதல் அரவிந்தன் வரையிலான பெயரக் குழந்தைகளுக்கும், இதன் வழி ஆழ்ந்த ஆறுதல் கூறிக் கொள்வதுடன், 4.4.2017 அன்று என்னுடன் கோ. பாண்டுரங்கன் இல்லத்துக்கு வந்து கடைசி வரை இருந்து விடைபெற்ற ஆ. வந்தியத் தேவன் அவர்கட்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

வாழ்க கடலூர் ருக்குமணி - பாண்டுரங்கன் புகழ்!

**6.4.2017** **- வே. ஆனைமுத்து**

# தொடரும் ஊழல்களும் சுரண்டல்களும்

சென்ற இதழ் தொடர்ச்சி

- குட்டுவன்

**1997இல்** ஊடகங்களில் வெளி வந்த ஊழல்களில் பெரும் ஊழல் ஜெயின் நாட்குறிப்பேட்டு ஊழலாகும். வெளிநாட்டிலிருந்து பணத்தை எடுத்து வந்து உள்நாட்டுப் பணத்தை மறைமுகமாக மாற்றி அயல்நாட்டு செலாவணி ஒழுங்குமுறைச் சட்டத்தை மீறிய செயல்கள் இந்த நாட்குறிப்பேட்டில் இடம் பெற்றிருந்தன. இந்தியாவின் பத்து மூத்த தலைவர்கள் இந்த ஹவாலா மோசடியில் இடம் பெற்றிருந்தனர்.

பிரதமர் நரசிம்மராவ் அவரது மகன் பிரபாகர் ராவ் இந்திரா காந்தியின் தனிச்செயலராக இருந்த தவான், சந்திராசாமி, காங்கிரசு மத்திய அமைச்சராக இருந்த வி.சி. சுக்லா, மாதவராவ் சிந்தியா நாடாளுமன்ற சபாநாயகராக இருந்த பல்ராம் ஜாக்கர் ஆகியோர் பெயர்கள் இடம் பெற்றிருந்தன. இந்த நாட்குறிப்பை வைத்துக்கொண்டு வருமானவரி அமலாக்கத் துறைகள் மத்தியப் புலனாய்வுத் துறை பல வழக்குகளைப் போடுவதற்கு ஆயத்த மாயின. பாஜக தலைவர் அத்வானியின் பெயரும் ஜெயின் நாட்குறிப்பில் இடம் பெற்றிருந்தது. தன் மீது சுமத்தப்பட்ட குற்றம் மெய்ப்பிக்கும் வரையில் நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவராகப் பணியாற்ற மாட்டேன் என்று கூறிப் பதவி விலகினார் திருவாளர் அத்வானி. பாஜகவின் மூத்தத் தலைவரான அடல்பிகாரி வாஜ்பாய் பிரதமர் நரசிம்மராவின் பெயர் இக்குறிப் பேட்டில் உள்ளதால் பிரதமர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஜெயின் நாட்குறிப்பு 1991 மே மாதம் 3ஆம் நாள் புலனாய்வுத் துறையால் கைப்பற்றப்பட்டாலும், ஆவணத்தில் இடம்பெற்ற தலைவர்களின் பெயர்களும் குறிப்புகளும் 1997இல்தான் வெளிவந்தன. 1982-83 ஆண்டுகளில் இத்தாலியில் இயங்கி வந்த அரசு நிறுவனத்தில் பணிபுரிந்த ஜெர்னி வழியாகத்தான் சோனியா காந்தியின் குடும்ப நண்பர் குவோத்ரோச்சியைச் சந்தித்தேன். ரூர்கேலா உருக்காலைக்குத் தேவையான பெரும் கருவிகளை வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளித் தொடர்பாக குவோத்ரோச்சியிடம் பேசினேன். அது போன்று ஜம்மு காஷ்மீரில் நீர்மின் திட்டம் அமைப்பதற்கான ஒப்பந்தம் தொடர்பாகவும் பேசினேன். இதன் தொடர்பாக சுவீடனில் இருந்து வந்த யுரி என்பவரையும் பென்போர்ன் என்பவரையும் யுடீ குழுமங்களின் துணைத்தலைவர் ஆகியோரை அன்றைய ராஜிவ் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த அருண் நேருவும், சிவசங்கரும் அறிமுகப்படுத்தினர். இதில் தொடர்புடையவர்கள் எல்லாம் இந்த ஒப்பந்தங்கள் வழியாக எனக்குப் பல நூறு கோடி வருமானம் வரும் என்று குறிப்பிட்டார்கள் என்று ஜெயின் நாட்குறிப்பில் இடம் பெற்றி ருந்தன.

1991 மார்ச்-மே மாதங்களில் ரூபாய் 4 கோடியை நான் ராஜிவ் காந்தியிடம் அளித்தேன். இந்தப் பணத்தை ஜெயலலிதாவிற்கு கொடுக்கப் போகிறேன் என்று ராஜிவ்காந்தி தெரிவித்தார் (I have paid Rs.4 crore to Rajiv Gandhi in March and May 1991 because he had demanded the said amount for making payments to Jayalalitha – Jain Dairy). ராஜிவ்காந்தியின் தனிச்செயலராக இருந்த ஜார்ஜிடம் எனது இல்லத்தில் 2 கோடியை அளித்தேன். விசாரணையின் போது ஜெயின் இன்னொரு முதன்மையானக் கருத்தை வெளியிட்டார்.

தற்போதைய பிரதமர் மோடியின் ஆதரவோடு பெரும் முதலாளிகளாக வலம் வரும் அம்பானி சகோதரர்களின் தந்தையான திருபாய் அம்பானியைப் போன்று நானும் பெரிய அளவில் வளர வேண்டும் என்று விரும்பினேன். அவர் பெரிய ஒப்பந்தங்களை அரசியல்வாதிகளின் தொடர்போடு அவர்களுக்கு ஊழல் பணத்தில் பங்கு அளித்து பெரும் பணக்காரராக ஆனார் என்பது எனக்குத் தெரியும்.

அவர் வழியைப் பின்பற்றித்தான் உயர் பதவியில் இருந்த அதிகாரிகளுக்கு ஊழலின் ஒரு பங்கை அளித்தேன். இவை எல்லாம் 1987இல் தொடங்கி 1991 வரை தொடர்ந்தது. ஒரு முறை நரசிம்மராவ் என்னிடம் தனியாகப் பேசினார். மத்திய அமைச்சர் சதிஷ் சர்மாவிற்கு 50 இலட்சமும் தனக்கு 50 இலட்சமும் சாமியார் சந்திராசாமிக்கு 2 கோடியும் அளிக்கும்படியும் கேட்டுக்கொண்டார். அன்றைய காங்கிரசுத் தலைவராக இருந்த சீத்தாராம் கேசரிக்கும் 2 கோடி ரூபாய் அளித்தேன் என்று ஜெயின் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் மத்திய புலனாய்வுத் துறையிடம் தெரிவித்தார்.

இந்தியாவின் முதன்மையான அரசியல் பிரமுகர்கள் தொடர்புடைய இந்த ஹவாலா ஊழல் இறுதியில் எதிர்பார்த்தது போல, எவ்விதத் தொடர் நடவடிக்கைகள் இன்றிக் கைவிடப் பட்டது. இதைத்தான் மத்திய புலனாய்வுத் துறையைச் சேர்ந்த இணை இயக்குநர் லால் தனது நூலில் *(Who Owns CBI)* விளக்கமாக எடுத்துரைத்துள்ளார். இந்தியாவில் ஒன்றிய அரசோடு தொடர்புடையவர்கள் ஊழல் செய்தால் அது பெரும் ஊழலாகக் கருதப்படுவதில்லை. அதே நேரத்தில் மாநில முதல்வர்கள் செய்கின்ற ஊழல்கள் பெரிதுப்படுத்துப்பட்டு வருகின்றன. அரசியல் காரணங்களுக்காக ஒன்றிய அரசு மாநில முதல்வர்களை மிரட்டும் போக்கு இன்றும் தொடர்கிறது. அண்மையில் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத் தேர்தலுக்காக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருக்கின்ற விஜயபாஸ்கர் வாக்காளர்களுக்குப் பணம் கொடுப்பதற்காக ஒரு தாளில் 89 கோடி அளவிற்குக் குறிப்புகளை எழுதி வைத்திருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு, தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தினகரன் இரட்டை இலை சின்னத்தைப் பெறுவதற்காகத் தேர்தல் ஆணையத்திற்கு

தில்லித் தரகர் வழியாக ரூ.60 கோடி கொடுப்பதாக இருந்தார் என்ற குற்றச்சாட்டும் இப்போது சொல்லப்படுகிறது. வருமான வரித்துறையும் அமலாக்கத் துறையும் மத்திய புலனாய்வுத் துறையும் மாநில முதல்வரையும் ஒன்றிய அரசை எதிர்ப்பவர் களையும் அடக்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது என்று ஏற்கெனவே மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியும் டெல்லி முதல்வர் கெஜ்ரிவாலும் தெரிவித்து வருகின்றனர்.

எல்லாம் வல்ல-நீக்கமற நிறைந்துள்ளவர்தான் கடவுள் என்று ஆத்திகர்கள் குறிப்பிடுவார்கள். ஆனால் ஊழல்தான் நீக்கமற எல்லா இடங்களிலும் எல்லாத் துறைகளிலும் நிறைந்துள்ளது என்பது உண்மையாகிறது (Omnipotent and omnipresent).

சான்றாகப் போலி முத்திரைத்தாளினை தயாரித்து 32 ஆயிரம் கோடி அளவிற்கு ஊழல் செய்தது இந்தியாவில் மட்டும்தான் நடந்துள்ளது. போலி முத்திரைத்தாள் 18 மாநிலங் களில் 72 நகரங்களில் 1992 முதல் 2002 வரை பத்தாண்டு களாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. அரசு தெரிவித்திருந்த புள்ளிவிவரம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என்று, பல வல்லுநர்கள் கூறுகிறார்கள். இந்த ஊழலின் பரிமாணத்தைக் கணக்கிட்டால் ஊழல் தொகை இன்னும் பல ஆயிரம் கோடி பெருகும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். அரசியல் தலைமையும் அதிகார வர்க்கமும் அதை எப்படிக் கண்டுகொள்ளாமல் பத்தாண்டுகள் விட்டதைப் பற்றிப் பலர் வியப்பைத் தெரிவித்தனர். மகாரா'டிர மாநிலத்தில்தான் இது தொடங்கியது. ஆந்திரா கர்நாடகா மேற்கு வங்கம் தமிழ்நாடு ராஜஸ்தான் உ.பி. ஆகிய மாநிலங்களின் அரசு வருவாய் பெரிதும் வீழ்ந்தது. இதன் வழியாக மாநில அரசிற்குச் சேர வேண்டிய பல்லாயிரம் கோடி ரூபாய் தனி மனிதர்களிடம் சேர்ந்தது. இக்காலக்கட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பல சொத்துகள் போலியான முத்திரைத்தாள் வழியாக அந்தந்த மாநிலங்களின் பதிவாளர் அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டாலும் அவைகளை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தியாவினுடைய ரூபாய் தாள்களை அச்சடிக்கும் நகரான நாசிக் அரசு அச்சகத்தில் உள்ள சில அதிகாரிகளின் துணை யோடுதான் இந்த மோசடி இந்தியா முழுவதும் பரவியது. இதில் பல காவல் உயர் அதிகாரிகளும் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடப்பட்டது. இந்த ஊழலில் மகாராஷ்டிர மாநில முதல்வர் சரத்பவார் உட்பட பலரின் தொடர்பு இருந்ததாக, தெல்கி குறிப்பிட்டுள்ளார். தெல்கி பல தொழில் குழுமங்களை உருவாக்கி அதன் வழியாகப் பல அரசியல் தலைவர்களுக்கும் தனது ஊழல் பணத்தில் பங்கினை அளித்தார் என்று குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. சான்றாக தெலுங்கு தேசம், தேசியவாத காங்கிரசுக் கட்சி போன்ற கட்சிகளின் தலைவர்களோடு பல மணி நேரம் தொலைபேசியில் தெல்கி பேசியது வெளிக் கொணரப்பட்டது. இந்தக் குற்ற நடவடிக்கை மாநிலங்களுக்கு வரவேண்டிய வருவாயைத் தடுத்து நிறுத்திய போதும் பல மாநில முதல்வர்கள் கண்டும் காணாமல் இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த வழக்கில் தெல்கிக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் 2006இல் 30 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப் பட்டது. ஆயிரம் கோடி தண்டமும் அளிக்கப்பட்டது. இந்தத் தண்டத் தொகையைப் பெறுவதற்காக தெல்கியின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

1999இல் வாஜ்பாய் தலைமையில் பாஜக ஆட்சி நடைபெற்ற போது கார்கில் எல்லையில் பாகிஸ்தான் இராணுவத்துடன் இந்திய இராணுவம் சண்டையிட்டது. அப்போது பல இந்திய வீரர்கள் இறந்தனர். சவப்பெட்டி வாங்குவதில் 1.16 கோடி அளவிற்கு அரசிற்கு இழப்பு ஏற்பட்டது. என இந்தியத் தலைமை கணக்காயர் தனது அறிக்கையில் குறிப்பிட்டார். இது தொடர்பாக மத்தியப் புலனாய்வுத் துறை 2002இல் ஆய்வு செய்தது. இந்திய இராணுவ அதிகாரிகளான அருண் ராயி மாலிக், எப்.சி.சிங் ஆகியோர் மீதும் சவப்பெட்டி வழங்கிய அமெரிக்க நிறுவனங்கள் மீதும் வழக்குத் தொடரப்பட்டது. இதே போல மராட்டிய மாநிலத்தில் ஆதர்' கூட்டுறவுச் சங்க ஊழலில் பல உயர் இராணுவ அதிகாரிகள் ஈடுபட்டனர். இராணுவத்தில் பணிபுரிந்த வர்களுக்கு அலுவலகங்கள் கட்டுவதற்கும் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கும் ஒதுக்கப்பட்ட நிலத்தில் இந்த உயர் அதிகாரிகளும் மராட்டிய அரசும் இணைந்து ஊழலைச் செய்தனர்.

மேற்கு வங்கத்திலும் சுகுணா நில ஊழலில் இராணுவ அதிகாரிகளான அவதேஷ் பிரகாஷ் பி.கே.ராத் ஆகியோர் சிக்கினர். 72 ஏக்கர் இராணுவ நிலத்தைத் தனியார் கட்டிட ஒப்பந்தக்காரர்களிடம் கல்விக்காக ஒதுக்கியதாகக் கூறி இந்த ஊழலைச் செய்தனர். காஷ்மீரில் 100 ஏக்கர் நிலத்தை அதிலும் குறிப்பாக ஸ்ரீநகர் விமான நிலையத்திற்கு அருகே தனியார் நிறுவனங்கள் விற்பது பற்றிப் புகார் வந்தது. ஒன்றிய அரசின் பாதுகாப்புத் துறை இந்த வழக்கை மத்திய புலனாய்வுத் துறை யிடம் விசாரணைக்கு அளித்தது. மத்தியப் புலனாய்வுத் துறை இத்திட்டத்தில் ஊழல் இருப்பதால் இதனை ரத்துச் செய்யும்படி கேட்டுக்கொண்டது.

புனே நகரில் தம்புராஜ் எஸ்.ஆர். நய்யார் ஆகிய இராணுவ அதிகாரிகள் 46 கோடி நிலத்தைத் தனியார் இலாபம் பெறும்படி மாற்றினர். இது போன்று எண்ணற்ற ஊழல்களைத் தரைப் படை கப்பல்படை விமானப் படை அதிகாரிகள் செய்துள்ளார்கள். **இந்த நில ஊழலில் 79.66விழுக்காடு இராணுவத்தினரும், 8.72 விழுக்காடு விமானப்படையினரும், 2.13 விழுக்காடு கப்பல் படையினரும் ஈடுபட்டுள்ளனர் என்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. நாட்டைப் பாதுகாப்பவர்களே இராணுவ நிலங்களில் ஊழல்கள் செய்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்து கிறது.**

மட்டைப்பந்து விளையாட்டில் மிகப்பெரிய ஊழல்களும் மோசடிகளும் இந்தியாவில் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக மட்டைப்பந்து விளையாட்டில் ஊழல் முதலில் சூதாட்ட வடிவில்

உலக அளவில் தொடங்கியது. இந்த ஊழல் நோய் இந்தியாவில் புதிய பல பரிமாணங்களை எடுத்தது. புகழ்பெற்ற மட்டைப்பந்து ஆட்டக்காரர்கள் அசாருதின் ஜடேஜா, மனோஸ் பிராபாகர் போன்றோர் இந்தச் சூதாட்டப் பந்தயத்தில் பங்கேற்றுப் பல கோடிகளைச் சுருட்டினர். மெல்ல மெல்ல இந்த நோய் மட்டைப்பந்து விளையாட்டை நடத்தும் பல அணிகளுக்கும் பரவியது. இந்தியாவின் பெரும் முதலாளிகளும், சரத்பவார், அருண் ஜெட்லி போன்ற அரசியல் கட்சித் தலைவர்களும் வெளிநாட்டிற்குத் தப்பியோடிய லலித் மோடி, மல்லையா போன்றோரும் மட்டைப் பந்து அணிகளோடு தொடர்புடையவர்கள். ஒவ்வொரு மாநில அளவிலும் ஒரு மட்டைப்பந்து அமைப்பை உருவாக்கி ஆட்டக் காரர்களை ஏலமெடுக்கும் தரகு வணிகம் இன்றும் தொடர்கிறது. மிகவும் அருவருக்கத்தக்க கேவலமான முறையில் மட்டைப்பந்து விளையாட்டு சூதாட்டம் ஊழல் மோசடி பெண்களின் ஆபாச நடனத்தோடு நடைபெற்று வருகிறது. இந்த மோசடிகளுக்கு எதிராகச் சில பொது நல ஆர்வலர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடர்ந்தனர். 2014இல் மூன்று நீதிபதிகள் அடங்கிய ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி முகுல் முட்கல் தலைமையில் ஒரு குழு அமைத்துப் பல்வித மட்டைப்பந்து ஊழல்களை ஆய்ந்து அறிக்கை அளிக்கும்படி வேண்டியது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்தியா சிமெண்ட் நிறுவனத் தலைவர் சீனிவாசன் அவரது மருமகன் குருநாத் ஆகியோர் மீது சூதாட்டத்தில் பங்கு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. பலமுறை உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் இந்த மட்டைப் பந்து குழுமங்கள் பல்வேறு வழக்குகளைப் போட்டுத் தப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டன. உச்ச நீதிமன்றம் உறுதியாக இருந்த காரணத்தினால் மட்டைப் பந்து வாரியம் எவ்வாறு செயல்பட வேண்டும் எவ்வாறு தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்பதற்கான சட்ட நடைமுறை விதிகளை உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட குழு பரிந்துரைத்தது. இதை ஏற்க மாட்டோம் என்று கூறி மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனுவினை மட்டைப்பந்து குழுமங்கள் அரசியல்வாதிகளின் துணையோடு தங்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று கோரின. ஆனால் உச்ச நீதிமன்றம் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி லோதா குழுவின் பரிந்துரைகளை ஏற்க வேண்டும் அல்லது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று எச்சரித்தது. இத்தகைய ஊழல்களும் மோசடிகளும் சூழ்ந்த மட்டைப்பந்து சூதாட்டத்தை மக்களின் அடிப்படைப் பிரச்சினை களை எல்லாம் மறைத்து, மட்டைப் பந்து ஆட்டக்காரர்களின் செய்திகளையும் மட்டைப்பந்து குழுமங்கள் நடத்தும் எல்லாவித அநீதிகளையும் மறந்து அல்லது மறைத்து ஒளி அச்சு ஊடகங்கள் இன்றும் வெளியிட மறுக்கின்றன. மாறாக இந்த ஊழல் சக்திகளுக்குத் தேவையற்ற விளம்பரங்களை அளிக்கின்றன. இவ்வாறாக ஊழலின் பரிமாணம் விளையாட்டில் தொடங்கி சவப்பெட்டிவரை எனத் தொடர்ந்து கொண்டே உள்ளது.

- தொடரும்

## காஞ்சியில் பாலாறு பாதுகாப்புக் கூட்டியக்கத்தின் சார்பில் தில்லியில் போராட்டம் நடத்திவரும் தமிழக விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம்



தில்லியில் போராட்டம் நடத்திவரும் விவசாயி களின் கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தி, 13-4-2017 அன்று பாலாறு பாதுகாப்புக் கூட்டியக்க ஒருங்கிணைப்பாளர் காஞ்சி அமுதன் தலைமையில் காஞ்சிபுரம் காந்தி சாலை, பெரியார் தூண் அருகில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

மா.பெ.பொ.க. வேளாண் அணிச் செயலாளர் அரங்க. சானகிராமன், தொடக்க உரை ஆற்றினார். தேசிய வங்கிகளிலும், கூட்டுறவு வங்கிகளிலும் வறட்சி யால் வாடும் விவசாயிகள் வாங்கியக் கடனைத் தள்ளுபடி செய்யக் கோரியும், அரசு மானியம் வழங்கக் கோரியும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரியும், தஞ்சையில் போராடும் விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றவும் பாலாறு, செய்யாற் றில் தடுப்பணைகள் கட்ட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

போராட்டத்தில், மாவட்ட அனைத்து விவசாயிகள் சங்கத்தின் தலைவர் கு. எழிலன், மரம் வளர்ப்போர் சங்கத் தலைவர் மாசிலாமணி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் நேரு, காஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பொ. எழிலரசன், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மாவட்டச் செயலாளர் சி. நடராசன் - துணைச் செயலாளர் தீ. கோபாலகிருஷ்ணன், நகரச் செயலாளர் மு. செயப்பிரகாசு, தோழர்கள் இரா. நாராயணமூர்த்தி, ச. சிவக்குமார், உலகஒளி, கீழம்பி முத்து, கிரில் தயாரிப்பாளர் நல சங்கத் தலைவர் ஏகாம்பரம் ஆகியோர் பங்கேற்றனர்.

செய்தி : **சி. நடராசன்**

கட்டுரைத் தொடர்-49

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இருவர் பலியாயினர். முதலாமவர் இல.நடராசன். மற்றொருவர் தாளமுத்து ஆவார்.

இல.நடராசன் அவர்கள் 5.12.1938இல் இந்தி எதிர்ப்புப் போரில் கலந்துகொண்டு இந்து தியாலஜிகல் பள்ளியின்முன் மறியல் செய்து கைது செய்யப்பட்டார். நீதிபதி அப்ரஸ் அலி அவருக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனையும் 50 ரூபாய் அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஆறு வாரம் சிறையிலிருக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார்.

நடராசன் சென்னை 11ஆவது டிவிஷன் பண்ணைக்கார ஆண்டியப்பன் தெரு எண்.2/2 இல்லத்தில் வசித்து வந்தார். அவருடைய தந்தையார் பெயர் இலட்சுமணன் ஆகும். இவர் அந்தக் குடும்பத்திற்கு ஒரே மகன் ஆவார். இவர் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்.



இல. நடராசன் சென்னை சிறையில் பலநாள் நோயினால் அவதிப்பட்டு வந்தார். இராசாசி அரசு இவருக்கு சரியான மருத்துவ வசதியைச் செய்து கொடுக்காமல் கடைசி நேரத்தில் சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் 30.12.1938இல் சிறைச்சாலை நிர்வாகிகள் சேர்த்தனர். நடராசன் அவர்களை மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தால் விடுதலைச் செய்துவிடுவதாக அரசு பலமுறைக் கூறியும், அவர் மறுத்துவிட்டார்.

15.1.1939 பகல் 2.45 மணிக்கு, பொங்கல் நாளில் இவர் மருத்துவமனையிலேயே இயற்கை எய்தினார்.

படிப்பறிவு இல்லாத இவரை, இந்தி எதிர்ப்பாளர்கள், இந்தி எதிர்ப்புக்குப் பயன்படுத்திக் கொண்டனர் என முதல்வர் இராசாசி சட்டமன்றத்தில் கூறினார். ஆனால் இல.நடராசனின் தந்தை இலட்சுமணன் தன் மகன் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளார் என்று முதலமைச்சருக்குப் பதில் அளித்தார். தமிழ்மொழியைக் காப்பதற்காக உயிர்நீத்த அந்த உத்தமத் தோழரின் உடல் குமாரசாமிராஜா, முத்தையா செட்டியாரின் விருப்பப்படி மாலை 5 மணிக்கு அரசு பொது மருத்துவ மனையிலிருந்து காரில் வைத்து, கறுப்புக் கொடிகளுடன் பெரும் ஊர்வலமாகக் கந்தசாமி கோவில் தெரு, தேவராஜ முதலி தெரு, தங்கசாலை வீதி, கொத்தவால் சாவடி, பிராட்வே, போர்ச்சுக்கீஸ் வீதி, ஏழுகிணறு முதலிய தெருக்களின் வழியாக நடராசனின் இல்லத்தில் முடிவுற்றது.



### இல.நடராசனின் இறுதி ஊர்வலம்

தமிழ்மொழியைக் காக்க உயிர் நீத்தத் தோழர் இல. நடராசனின் இறுதி ஊர்வலம் 16.1.1939 காலை 9 மணிக்குத் துவங்கியது. ஊர்வலத்தில் சுமார் பத்தாயிரம் பேர் கலந்து கொண்டனர்.

இறுதி ஊர்வலத்தில் ஏராளமானோர் கைகளில் கருப்புக் கொடி ஏந்தி இருந்தனர். பெரியார் சிறையில் இருந்ததால் ஊர்வலத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.

இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட முக்கியமானவர்கள் :

டாக்டர் தர்மாம்பாள், மீனாம்பாள் சிவராஜ், புஷ்பவதியம்மாள், பட்டம்மாள், நாராயணியம்மாள் முதலிய நூற்றுக்கணக்கான பெண்மணிகளும், தோழர்கள் ராவ்பகதூர், என். சிவராஜ், வி.பி.எஸ். மணியர், என்.வி. நடராசன், சி.என். அண்ணாதுரை, அ. பொன்னம்பலனார் உள்ளிட்ட ஏராளமான முன்னணித் தோழர்கள் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தின் வழிநெடுகிலும் மாடிகளிலிருந்து பூமாரி பொழியப்பட்டது. ஊர்வலம் அரை மைல் நீளத்திற்குமேல் இருந்தது. இந்தி எதிர்ப்பு முழக்கங்களை முழங்கிக்கொண்டு 11.30 மணிக்கு மூலக்கொத்தளம் மயானத்தை அடைந்தது.

மாநகர மன்ற உறுப்பினர் ஆல்பர்ட் ஜேசுதாசன் தலைமையில் தோழர்கள் அண்ணாதுரை, அ. பொன்னம்பலனார், காஞ்சி பரவஸ்து, இராசகோபாலாச்சாரியார், வேலூர் அண்ணல் தஸ்கோ, டாக்டர் தர்மாம்பாள், நாராயணியம்மையார் முதலியவர்கள் மறைந்த இல. நடராசனுக்கு இரங்கல் தெரிவித்தும் அவருடைய அருங்குணங்களைப் போற்றியும் இராசாசி ஆட்சியின் இந்தித் திணிப்பு அடாவடிப் போக்கைக் கண்டித்தும் உரையாற்றினர்.

தோழர் அண்ணாதுரை அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது : “தமிழ்த் தாய்மார்களே! தமிழ்த் தோழர்களே! நாம் ஒரு மனஉறுதியுடைய இளங்

காளையைக் காங்கிரஸ் ஆட்சிக்குப் பலிகொடுத்து விட்டோம். நடராசன் வீர சுவர்க்கம் அடைந்தார். அவர் சிறையில் பலமாக நோய்வாய்ப்பட்டு இருந்தும் நாங்களும் மேற்படியாருக்கு நோயைப் பற்றிக் கூறி வேண்டுவன செய்துகொள்ளும்படி கூறியும் நான் மன்னிப்பு ஒன்றுமட்டிலும் கேட்கமாட்டேன்; நான் இறந்தாலும் கவலை இல்லை என்று தீரமாகவும் வீர மாகவும் மொழிந்த வீரனின் பிரேதம் நம்மிடையில் இருக்கிறது. தோழர்களே! நாமெல்லோரும் இறப்பவர் களேதான். இறந்தே தீருவோம். ஆனாலும் காங்கிரஸ் ஆட்சியில் இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்று மொழிந்து தாய் பாஷைக்காக அரசாங்கத்தாரால் தண் டிக்கப்பட்டு உயிர்நீத்தான் என்று நாம் எந்த வல்லரசு நாட்டிலும், எந்த சரித்திரத்திலும் கேட்டதில்லை. இன்று இங்கு நம்முன் கூடியுள்ள இந்தப் பதினாயிரக்கணக் கான ஆண், பெண் மக்களிடையில் கிடத்தியிருக்கும் தமிழ் வீரனின் செய்கையைப் பொன் எழுத்துக்களிலே உலக சரித்திரத்திலே எழுதப்படும். ஆனாலும் நாம் ஒவ்வொருவரும் நம் இளங்காளை நடராசனைப் போல் வீரத்துடன் தமிழுக்காகத் தியாகம், தாய் பாஷைக்காகத் தியாகம், தமிழ் கலைக்காகத் தியாகம் செய்து, இந்தியை ஒழிக்க இன்றுமுதல் மனத்திடம் கொள்ள வேண்டும்'' என்று சுமார் அரை மணிநேரம் பேசினார்.

**தோழர் அ.பொன்னம்பலனார் உரை :**

''தாய்மார்களே! தோழர்களே! நான் இங்கு இப்படி ஒரு தமிழ் வீரனைப் போற்றி பேச நேரிடும், இந்த துக்கமான சம்பவம் நமக்கு ஒற்றுமையை அளிக்கும் காரியம் ஒன்று நம்முன் இருக்கிறது என்று நான் காலை யில் ஈரோட்டிலிருந்து வந்ததும் தெரியவில்லை. நான் வரும் வழியில் தற்கால காங்கிரஸ் ஆட்சியில் ஒரு இந்தி எதிர்ப்புத் தொண்டன் மாண்டான் என்று கேள்விப் பட்டதும் இறந்த தோழனின் ஆவேசம் என்னை இங்கு கொண்டுவந்துவிட்டது. நாம் தெருக்களில் கொடியேந்தி ஆர்ப்பாட்டம் செய்வதினாலும், பல பெருங்கூட்டங்கள் போட்டு ஆர்ப்பாட்டம் செய்வதாலும் நமக்கு விடுதலை இல்லை. தோழர்களே! தாய்மார்களே! நமது இந்தி எதிர்ப்புத் தொண்டனின் மன உறுதியைப் போல், அரசியலாளர்களால் பல துன்பங்களுக்கிடையில் மன்னிப்பு கேட்க மறுத்து மாண்டுபோன நடராசனின் மனவுறுதி யைப்போல் ஒவ்வொரு தமிழனின் மனமும் ஆகவேண்டும். கைதட்டுவதும் கோஷமிடுவதும் பிரயோஜனமில்லை. தமிழன் தன் தாய் பாஷைக்காகச் சிறையில் உயிர்விட வேண்டிய நிலைக்கு இன்று காங்கிரஸ் கொண்டுவந்து விட்டது. நம்முன் வீரமாய் உயிர்துறந்த தோழனைக் காண்பது பெரிதன்று. அவருக்கு அனுதாபத் தீர்மானம் செய்வதும் பெரியதல்ல. தமிழன், தமிழ்நாடு, தாய்மொழி என்றதைக் கருத்தில் கொண்டு, காரியத்தில் காட்ட முன்வரவேண்டியது ஒவ்வொரு மகனும், மகளும் நம் நடராசனைப் போல் (இறக்காமல்) வீரமாய் வீர உரங் கொண்டு தாய்மொழிக்காகவும், தமிழ்நாட்டிற்காகவும் செய்யும் தொண்டில் பங்குகொண்டு செய்கையில் காட்டுவதுதான் நாம் நம் தோழர்நடராசனின் ஆத்மா சாந்தியடையச் செய்யும் காரியம் என்பதை இது சமயம் கங்கனம் பொதுமையாக மனதில் கொண்டு தமிழ் மொழியைக் காக்க முன்வருமாறு கேட்டுக் கொள்ளு கிறேன் என்றார்.'' அன்று மாலை சென்னை கடற்கரை யில் பத்தாயிரம் பேர் கலந்து கொண்ட மாபெரும் இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

**- (விடுதலை 17-1-1939)**

உயிர் நீத்த நடராசனைப் பற்றி பாவேந்தர் பாரதிதாசன்

## தமிழுக்கு உயிர்தந்த நடராசன்

**எண்சீர் விருத்தம்**

இந்திஎதிர்ப் புப்போரில் சிறைக்குச் சென்றான்.
இளங்காளை நடராசன்; சென்னை வாசி;
அந்தமுறும் இலக்குமணன் அம்மாக் கண்ணாம்
அருந்தமிழர் பெற்றெடுத்த மருந்து போல்வான்!
செந்தமிழிற் பற்றுடையான்; உத்தி யோகச்
சிறுவாழ்வில் வெறுப்புடையான்; கைத்தொ ழில்மேல்
சிந்தைவைத்தான்; பயின்றுவந்தான்; திறமை யுள்ளான். 1

தமிழ்நாட்டில் இந்தியினைக் கட்டா யத்தால்
சாரவிட்டால் தமிழ்சாகும் எனநி னைத்தான்.
அமுதொத்த தன்தமிழின் நிலைக்கு நொந்தான்!
அண்டைஅயற் பெரியார்பால் தனக்கேற் பட்ட
சமுசயத்தைத் தெரிவித்தான். உணவு நீத்தான்.
சதாகாலும் இதேநினைவாய் இருந்து வந்தான்.
தமிழகத்தார் எல்லார்க்கும் உணர்வு காட்டித்
தன்உருவம் காட்டிவிட்ட தமிழ்ப்பி ராட்டி! 2

நடராசன் எதிரேயும் வந்து நின்று,
நானில்லா விடில்நீயும் இல்லை என்று;
படபடத்த இதழாலும் துயர்க்கண் ணாலும்
பகர்ந்துசென்றாள். 'வாழ்கதமிழ் வாழ்க வாழ்க
இடரான இந்திமொழி வீழ்க வீழ்க''
என்றுரைத்தான்; தமிழரிடம் தமிழ்நாட டின்கண்!
அடாதசெயல் இதுஎன்றார் இந்திச் சர்க்கார்.
அழகியோன் தான்தன்னைச் சிறையிற் கண்டான். 3

நெஞ்சத்தில் வீற்றிருந்த தமிழ்த்தா யோடு
நெடுஞ்சிறையில் நடராசன் இருந்தான். அன்னோன்
கொஞ்சுமொழி தனைநினைத்துப் பெற்றோர் உற்றோர்,
கொடுஞ்சிறைக்கு வெளியினிலே இருந்தார், மற்ற
வஞ்சமில்லாத் தமிழரெலாம் நடரா சன்பேர்
வாழ்த்திக்கொண் டிருந்தார்கள் சிலநா ளின்பின்
வெஞ்சுரந்தான் கண்டதுவாம், அதுநாள் தோறும்
மேலோங்க லாயிற்றாம் மெலிவுற் றானாம். 3

சாக்காட்டின் ஒட்டினிலே தவிக்கும் போது,
தமிழ்நாட்டைத், தமிழர்களைப் பெற்றோர் தம்மைப்
பார்க்குமோர் ஆசைவந்து படுத்தும் போது,
பழியேற்க அஞ்சாத சிறைத்த லைவர்
ஆக்கினைஒன் றிட்டாராம்! நடரா சாநீ
அரசினரை மன்னிப்புக் கேட்டுக் கொண்டால்,
பாக்கியனாய் விடுதலையைப் பெறுவாய் என்றார்.
பைந்தமிழன் தன்நிலையை எண்ண லானான். 4

மன்னிப்புக் கேட்டிடுவாய்; தமிழர்க் குள்ள
மானத்தை இழந்திடுவாய் என்று கூறிச்
சின்னபுத்தி அதிகாரி கேட்டு நிற்கச்,
செந்தமிழ்த்தாய் உன்அன்பின் அடையா ளத்தை
இந்நிலையிற் காட்டுகநீ மைந்தா, மைந்தா
என்றேதன் தாமரைக்கை ஏந்தி நின்றாள்.
மன்னாதி மன்னர்களின் வழியில் வந்த
மாத்தமிழர் பழம்பெருமை பறிபோ காமே. 5

காக்கஎன்று நின்றிருந்தார் கூட்ட மாகக்
கண்ணாலும், சிரிப்பாலும் தனது காதற்
போக்குணர்த்தி வந்தஓர் இளைய நங்கை
பூமானை, அன்புதர வேண்டி நின்றாள்.
வாய்க்குமிவை அத்தனையும் நடரா சன்தன்
மனோலோக நடைமுறையாம். என்ன செய்வான்.
ஆர்க்கும்முர சம்போல்'மன் னிப்புக் கேளேன்'
அருஞ்சிறையில் சாதற்கும் அஞ்சேன் என்றான். 6

தனைத்தந்தான் எனக்கென்றாள் செந்த மிழ்த்தாய்!
தகதகெனக் களியாட்டம் ஆடா நின்றாள்!
தனக்கென்று வாழாத தமிழா என்று
தமிழரெலாம் அவன்பேரைப் பாடா நின்றார்!
தனிப்புகழ்சேர் நடராசன் தன்னைப் பெற்றோர்
தமிழுக்குப் பெற்றோம்என் றகம கிழ்ந்தார்!
நனித்தநறுங் காதலிதான் தேம்பி நின்றாள்!
தமிழ்வீரன் நடராசன் இறந்து போனான். 7

அன்னவனின் புகழ்இந்தத் தமிழ்நாட் டின்கண்
ஆர்ந்ததற்குக் காரணத்தை அறிவிக்கின்றேன்.
சின்னதொரு கல்வியினால் தருக்குக் கொண்டு,
தீமையெலாம் மக்களுக்குச் செய்து கொண்டு,
தன்னலத்தை எண்ணி எண்ணித் தமிழர் நாட்டைத்
தரைமட்ட மாக்குகின்றார். அவர்போ லின்றி
இன்தமிழிற் கல்விகற்றான் நடரா சச்சேய்
எழில்பெற்றான் புகழ்பெற்றான் எல்லாம் பெற்றான். 8

- *புகழ்மலர்கள்*, ப.75-76, 1978;
*தமிழரசு*, 15.2.1939

**- தொடரும்**

## மா.பெ.பொ.க. களப்பணி
## "சிந்தனையாளன்" இதழுக்கு 100 நாள்களில் 10,000 உறுப்பினர்கள் சேர்ப்போம்!

**"சிந்தனையாளன்" இதழ் தான் :**

* பிற்படுத்தப்பட்டோருக்கு இந்திய மத்திய அரசில், முதன்முதலாக, 1975இல் இடஒதுக்கீடு கோரி எழுதியது;
* வட மாநிலங்களில், 1978 முதல் 1991 வரை மேற்கொண்ட இடஒதுக்கீடு பயணச் செய்தியைத் தமிழகத்தில் பரப்பியது;
* "மார்க்சியம் – பெரியாரியம் ஏன்" என்பதை, சிந்தனையாளன் தான் பரப்புரை செய்தது;
* பெரியார் – நாகம்மை அறக்கட்டளைப் பணிகளை "சிந்தனையாளன்" தான் துலாம்பரமாக விளக்குகிறது.

**நமக்கு உள்ள ஒரே ஊடகம் - "சிந்தனையாளன்"**
**சிறந்த கருத்துக் கருவூலம் - "சிந்தனையாளன்"**

**2017 சூன் 1 முதல் 2017 ஆகத்து 10 வரையில் உள்ள 100 நாள்களில் 10,000 பேர்களிடம் உறுப்பினர் கட்டணம் பெற்று உதவிடுங்கள்!**

30-05-2017க்குள், உறுப்பினர் பற்றுச்சீட்டுகள், அஞ்சலில் விடுக்கப்படும் (அ) நேரில் தரப்படும்!

- **வே. ஆனைமுத்து,** ஆசிரியர், "சிந்தனையாளன்" மற்றும் **ஆசிரியர்குழு உறுப்பினர்கள்**

# ஊழலும் ஒடுக்குமுறையும்

- இராமியா

புராதனப் பொதுவுடைமைச் சமுதாயத்தில், அதாவது தனிச் சொத்துரிமை என்ற எண்ணமே உதிக்காத காலத்தில், மக்கள் அனைவரும் கூட்டம் கூட்டமாக வேட்டையாடினர்; காய் கனிகளைப் பறித்தனர்; தேனடைகளைப் பிழிந்து தேனெடுத் தனர். அனைவரும் அவரவர் தேவைக்கு ஏற்பப் பகிர்ந்து உண்டனர். அச்சமூக அமைப்பில் ஒருவருக்கு மற்றவர் மீது மன உராய்வுகள் ஏற்படும் பொழுது பெரியவர்களுடைய கண்டிப்பி லும், வழிகாட்டுதலிலும் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டன. அவர்களிடையே கண்டிப்பும் கனிவும் இருந்தனவே தவிர காய்தல் உவத்தல் இருந்ததில்லை.

திட்டமிடலும், வழிகாட்டுதலும் இருந்தனவே தவிர சூழ்ச்சியும் ஒடுக்குமுறையும் இருந்ததில்லை. அப்பொழுதெல்லாம் மனித சமுதாயத்தினால் தாங்கள் வாழ்வதற்கும், தங்களுக்குப்பின் தங்கள் சந்ததிகள் வாழ்க்கையைத் தொடர்வதற்கும் தேவை யான அளவிற்கு மட்டுமே பொருட்களை உற்பத்தி செய்ய முடிந்தது. இதற்கு சமூக உறுப்பினர்கள் அனைவரும் உழைப் பது அவசியமான நிபந்தனையாக இருந்தது. காலப்பேக்கில் மனிதனுடைய உற்பத்தி ஆற்றல் வளர்ந்தது. தாங்கள் வாழ்வதற்கும், தங்கள் சந்ததியினர் இப்புவியில் வாழ்க்கையைத் தொடர்வதற்கும் தேவையான பொருட்களை விட அதிகமான பொருட்களை மனிதர்களால் உற்பத்தி செய்ய முடிந்தது.

**இந்த வளர்ச்சி தங்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அனைவருடைய உழைப்பும் தேவை இல்லை; சிலர் உழைக்காமல் இருந்தாலும் அனைவருக்கும் தேவையான பொருட்களை உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலையைத் தோற்றுவித்தது. இந்நிலைமையைப் பயன்படுத்தி, சிலர் உழைப்பதைத் தவிர்க்க முனைந்தனர். உழைக்க வற்புறுத்தியோரை வன்முறையாலும் சூழ்ச்சியாலும் தாக்கி ஒடுக்கினர். இவ்வாறு ஒடுக்கும் வேலையைச் சமூக ஒழுங்கமைப்புக்கான பணி என்று பெயரும் இட்டுக் கொண்டனர். இப்படியாக மனித குலத்தில் வர்க்க சமூகம் தோன்றியது.**

வர்க்க சமூகம் தோன்றிய பின் அது பல்வேறு அடுக்கு நிலையாக வளர்த்து எடுக்கப்பட்டது. காலப்பேக்கில் பல சமூகப் படிநிலைகள் கொண்ட சமூகமாக மாற்றம் அடைந்தது. கீழ்ப் படிநிலையில் உள்ளோர் தங்கள் அறிவுத் திறனையும், உழைப்புத் திறனையும் வளர்த்துக் கொண்டு, தாங்கள் இருக்கும் நிலையை விட உயர் நிலைக்குச் செல்ல முயல வேண்டும் என்றும், இது தான் அனைவருடைய குறிக்கோளாக வேண்டும் என்றும் ஒரு கருத்தியலை உயர் படிநிலையில் உள்ளவர்கள் பரப்பிக் கொண்டு வருகின்றனர்; பொதுக் கருத்தாகவும் வெற்றிகரமாக வளர்த்து எடுத்தும் இருக்கின்றனர். இதன் மூலம் படிநிலை அடிமைத்தனக் கருத்தியலை சமூகத்தில் உறுதிப்படுத் தியும் இருக்கின்றனர்.

ஆகவே ஒவ்வொரு மனிதனும் சமூகத்தில் முன்னேற்றம் அடைவதற்கு, தன் அறிவுத் திறனையும், உழைப்புத் திறனையும் பயன்படுத்துகிறான். இந்தப் படிநிலைச் சமுதாய அமைப்பு தான் அடிமைத்தனத்தையும், வேதனைகளையும் உள்ளடக்கி உள்ளது என்பதைச் சாதாரண மனிதன் மறந்துவிட்டான். அதை அவன் புரிந்து கொண்டு விடக் கூடாது என்று மேல் படிநிலையில் உள்ளவர்கள் கவனமாகப் பார்த்துக் கொள்கிறார்கள்.

படிநிலை அடிமைத்தனம் ஒழியாத நிலையில், ஒருவன் உயர் படிநிலையை அடைவதற்கும், குறைந்த பட்சம் தன் படிநிலையில் இருந்து கீழே போய் விடாமல் இருப்பதற்கும், சுற்றிலும் உள்ள மனிதர்களைப் பற்றிக் கவலைப்படாமல் தன் அறிவுத் திறனையும், உழைப்புத் திறனையும் மட்டும் நம்பிச் செயல்பட்டால் முடிந்து விடுவது இல்லை; சில, பல சமயங்களில் அறிவுத் திறனும் உழைப்புத் திறனும் செல்லுபடி ஆவதே இல்லை. அதற்கு ஆங்காங்கே அதிகாரத்தில் உள்ளவர்களின் அனுசரணையான ஒத்துழைப்புத் தான் மிக முக்கிய கராணியாக உள்ளது. இந்த அனுசரணையான ஒத்துழைப்பு, பல வடிவங்களில் இருக்கிறது. உறவினன், நண்பன், ஒரே ஊர்க்காரன், ஒரே சாதிக்காரன், பிற்காலத்தில் உதவிகரமாக இருப்பான் என்ற பல வடிவங்களில் இந்த அனுசரணையான ஒத்துழைப்பு கிடைக்கிறது. இவற்றுடன் கூட, பணத்தை / பொருட்களை இலஞ்சமாகக் கொடுத்து ஒத்துழைப்புப் பெறுவதும் உண்டு. இந்த இலஞ்ச வடிவம்தான் எல்லாவற்றையும் விட மிக எளிமையான வடிவம்.

படிநிலைச் சமுதாயமாக இருப்பதால்தான், உயர் அதிகாரத்தில் இருக்கும் ஒருவன், தங்களுடைய தேவைகளை நிறைவேறப் பிறரைத் தன்னிடம் அடிபணிய வைக்கப் போதுமான வலிமை பெற முடிகிறது. படிநிலைச் சமூகமாக இல்லாமல் சமநிலைச் சமூகமாக இருந்தால், ஒரு அதிகார விரும்பியால் பிறரைத் தன்னுடைய சுயநலத்திற்காகப் பணிய வைக்கும் வலிமையைப் பெற முடியாது. அச்சூழலில் இலஞ்சம் / ஊழல் என்பது மறைந்து விடும். படிநிலைச் சமூக அமைப்பில் இருந்து சமநிலைச் சமூக அமைப்பாக மாறும் காலத்தில் இலஞ்சமும் ஊழலும் முழுமையாக ஒழியாவிட்டாலும் அதன் வலிமை குறையத் தொடங்கிவிடும்.

**ஆகவே இலஞ்ச ஊழலை ஒழிக்க முனைபவர்கள் முதலில் படிநிலைச் சமூக முறையை, அதாவது சமூக ஒடுக்குமுறையை ஒழிக்க முனைய வேண்டும். அதைச் செய்யாமல் ஊழலை ஒழிக்க வேண்டும் என்று உரக்கப் பேசுபவர்கள் உண்மையில் ஊழல் என்றென்றைக்கும் உயிர்ப்புடன் இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்களே. படிநிலைச் சமூக அமைப்பை / ஒடுக்குமுறையை ஒழிக்காமல் ஊழலை ஒழிக்க முடியாது.**

## ஆசிரியருக்கு மடல்

அன்புகெழுமிய சிந்தனையாளன் ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்.

ஏப்பிரல் 2017 சிந்தனையாளன் கிடைக்கப் பெற்றேன். 'என் முன்னுள்ள பணிகளும் நானும்' என்ற தலைப்பு என்னைக் கவலைப்பட வைத்தது. உடல்நிலைப்பற்றிக் கவலைப் படாமல் உழைக்கும் தங்களால் தமிழகம் பெறவேண்டிய பணிகளுள் முதன்மையானது பெரியார் வரலாறு முழுமை செய்து வெளியிட வேண்டியதேயாகும். உடல்நலனுக்கு முதன்மை தந்து இப்பணியையும் முதன்மையாகச் செய்து நிறைவேற்றுங்கள்.

சிந்தனையாளன் இதழ்ப் பொறுப்பைத் தக்கவர்களிடம் ஒப்படைத்துச் செயல்பட ஆவன செய்ய வேண்டும்.

**தமிழகத்தில் திங்களிதழ்களில் ஏ4 அளவில் பல்துறைக் கட்டுரைகளையும் கவிதைகளையும் கொண்டு 48 பக்கங்களில் 15 உரூபாய்க்கு வெளிவருவது சிந்தனையாளன் மட்டுமே.**

பல்வேறு துறைகளிலும் பணியாற்றும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட வகுப்புகளைச் சார்ந்தோர் சிந்தனையாளனுக்கு உறுப்பினராகி இதழை வளர்த்தெடுக்க வேண்டும்.

**மதிப்புரைக்கு நூல்கள் வந்தால் மதிப்புரை வராமலேயே ஒதுக்கப்பெற்றுவிடுகிறது. நூல்களைப் பெற்றவர்களே மதிப்புரை எழுதாமல் அல்லது வரப்பெற்றோம் என்ற தலைப்பில் செய்தியை வெளியிடலாம். 'சிந்தனையாளன் உறுப்பினர் களுக்கு' மட்டும் இப்பணியைச் செய்யலாம்.**

2017ஆம் ஆண்டு சனவரி சிந்தனையாளன் இதழில் திருவள்ளுவர் ஆண்டு 2047 எனக்குறிப்பிட்டது சரி. 2017 ஆம் ஆண்டு பொங்கல் மலர் அட்டையிலேயே திருவள்ளுவ ராண்டு 2048 எனச் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதன் பின்னர் ஏப்பிரல் 2017 ஆம் ஆண்டு இதழ் முகப்பு அட்டையில் திருவள்ளுவர் ஆண்டு 2047 எனக் குறிக்கப் பெற்று வருவதைத் திருவள்ளுவர் ஆண்டு 2048 எனத் திருத்தம் செய்யச் சொல்லுங்கள். தங்களின் உடல் நலனும் ஓயா அலைச்சலும் இவற்றைக் கவனிக்க இயலா நிலையில் ஆக்கியுள்ளது.

சிந்தனையாளன் ஆசிரியர்குழு உறுப்பினர்கள், அலுவலகப் பொறுப்பாளர்கள் அனைவரும் கவனம் செலுத்தி இதழைச் செம் மையாகவும் சிறப்பாகவும் அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

சிந்தனையாளன் இதழுக்கு வாழ்நாள் உறுப்பினர்களாகவும், உறுப்பினர்களாகவும் இதழை வாங்குவோர் தவறாமல் சிந்தனையாளன் இதழை முழுமையும் படிப்பதைத் தம் கடமையாகக் கொள்ள வேண்டும். சிந்தனையாளனை வளர்க்கும் பொறுப்பு நம் கையிலும் இருக்கிறது. வாய்ப்பு மிக்கவர் ஒவ்வொரு மாதமும் இயன்ற அளவு சிந்தனை யாளன் வளர்ச்சி நிதியை வழங்கி இதழுக்கு வலிவூட்ட வேண்டும். இப்பணிக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

**ஆசிரியர் அவர்கள் தம் உடல் நலனுக்கு முதன்மை தந்து பெரியார் வரலாற்றை முதன்மைப்படுத்தி விரைவில் வெளியிட ஆவன செய்ய வேண்டுகிறேன்.**

- முனைவர் **அ.ஆறுமுகம்**
திருமழப்பாடி

அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய அய்யா,

வணக்கம். தங்களிடமிருந்து 5 அல்லது 6 மாதங்களாக "சிந்தனையாளன்" மாத இதழ் எனக்கு வந்து கொண்டிருக் கின்றது. மிக, மிக நன்றி. தங்கள் அன்புக்கு மிகக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

"சிந்தனையாளன்" மாத இதழ் ஓர் அற்புத, அறிவார்ந்த மாத இதழ். இதில் நிறைய விபரங்கள் தெளிவாகவும், விரி வாகவும் எழுதப்பட்டு வருகின்றது. எவ்வளவோ தெரியாத, புரியாத விஷயங்கள் பொதிந்துள்ள நல்ல அருமையான இதழ். எவ்வளவோ வார, மாத இதழ்கள், நாளேடுகள் படித்து வந்தாலும் செய்திகளையும், பெரியார் திராவிடக் கொள்கைகள், மார்க்சிய, பெரியாரிய, சாதி ஒழிப்பு போன்றவை எல்லாரும் தெரிந்துகொள்ள வேண்டியவை. தாங்கள் ஏற்றிருக்கும் பணி ஓங்கி வளர்க. நான் வயதின் சிறியவனானாலும் வாழ்த்திப் போற்றி வணங்குகின்றேன்.

தாங்கள் பல்லாண்டு வாழ்ந்து சீரிய கொள்கைகளுக்கு உழைக்க எல்லாவிதப் பலன்கள், சக்தியை வழங்கிட இயற்கை அன்னையை வேண்டுகின்றேன்.

நன்றி. இத்துடன் "சிந்தனையாளன்" மாத இதழ் வளர்ச்சி நிதிக்காக எனது சிறு 'துளி' தொகையாக ரூ.1000 (ரூபா ஆயிரம் மட்டும்) காசோலை எண்.370385, தேதி 17.3.2017 (கனரா வங்கி) இத்துடன் அனுப்பியுள்ளேன். அன்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். வணக்கம்.

- ஈரோடு **கோ. ராஜா சம்பத்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அய்யா, தாங்கள் அனுப்பிய சிந்தனையாளன் பொங்கல் மலர் 2017, 2017 சனவரி, பிப்ரவரி, மார்ச்சு மாதங்களின் சிந்தனையாளன் இதழ்கள் கைவரப்பெற்றேன். களிப்புற் றேன். நெஞ்சம் நிறைந்த பாராட்டு. வாய் நிறைந்த வாழ்த்து. நனி நன்றி. இவ்விதம் அனுப்புவீர்கள் என்று நான் எதிர் பார்க்கவில்லை.

தமிழர் திருநாள் வரலாறு, அடிமை வாழ்வும் உரிமை வாழ்வும் என்னும் தொண்டறிக்கைகள் இதனுடன் அனுப்பி யுள்ளேன். வாய்ப்பு வசதி வாய்க்கும் போது நமது இதழில் வெளியிட்டு எனது தொண்டு தொடர்வதற்கு உரமும் ஊக்கமும் அளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

பொங்கல், புத்தாண்டு விழா, ஐவர் வழியே ஆக்கவழி இரண்டும் பற்றிப் பொங்கல் மலர்களில் விளம்பரம் செய்து வந்தேன். முதியோர் இல்லத்தில் சேர்ந்தது முதல் அவ்விதம் செய்ய இயலவில்லை. முதியோர் இல்லத்துக்கே மாதம் ரூபா 47000/- செலவாகிறது. எனக்கு மாதம் ரூ.22,500/- தனி உதவியாளருக்கு ரூபா 19,500/- ஆக மாதம் ரூபா 42000/-, சில்லரைச் செலவுகள் ஐந்து ஆயிரம் ஆகிறது.

எனக்கு மாத ஓய்வூதியம் ரூ.26,000/- வருகிறது. எனது வயது 82 நடக்கிறது. எல்லாச் செலவுகளையும் பொறுப்பு களையும் கல்பாக்கம் அணுவாற்றல் துறையில் பணிபுரிகின்ற மகன் திருவள்ளுவன் கவனித்துக் கொள்கிறான். பாதுகாப்பு முன்பணம் (Security Deposit) இரண்டு இலட்சம் கட்டியுள் ளோம்.

முதியோர் இல்லத்தில் செலவு அதிகம். ஆனால் பாதுகாப்பு, உணவு, கவனிப்பு, தனி அறை, A.C., T.V., பேசி போன்ற வசதிகள், நாள்தோறும் துப்புரவு, நாள்தோறும் காலை 6.30 மணிக்கு B.P., Pulse எடுத்தல், வாரம் இரண்டு நாள் பிசியோ தெரபி, 15 நாள்களுக்கு ஒருமுறை டாக்டர் சோதனை, சர்க்கரை நோய்க்கும் சோதனை முதலிய வசதிகள், அரசு அலுவலகம் போல் நிதி நிருவாகம், பொதுச் சுகாதாரம், சமையல் பிரிவு, பொது நிருவாகம், ஆள் எடுத்தல் போன்றவைகளுக்குத் தனித்தனி அலுவலர்கள் போன்ற வசதிகள் உள்ளன. 15 நர்சிங் கோர்சு படித்த பெண்கள் முதியோர்களைக் கவனித்துக் கொள்வதற்கு. வசதிகள், வாய்ப்புகள் மிகுதி. செலவு அதிகம். 34 முதியோர்கள். இதில் 24 பேர்கள் மகளிர்கள்.

தனித்து இயங்க முடியாதவர்களுக்குத் தனி உதவி யாளர்கள். அவர்கள் 24 மணிநேரமும் உடன் இருந்து கவனித்துக் கொள்கிறார்கள். எல்லாரும் மகளிர்களே. இல்லத்தை நடத்துபவர்கள் கிறித்தவ மதம் சார்ந்தவர்கள்.

2014இல் இதய நோயாலும் (Cardiology), 2015இல் நரம்பியல் நோயாலும் (Neurology) பாதிக்கப்பட்டுக் கேளம்பாக்கம் செட்டிநாடு சிறப்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். பிறகு 2015 ஆகஸ்டு மாதம் முதல் அமேசிங் லவ் ஹோம் முதியோர் இல்லத்தில் இருந்து வருகின்றேன். நடுக்கம், மயக்கம், தனித்து இயங்க முடியாது. தனி உதவியாளர் 24 மணிநேரமும் உடன் இருந்து கவனித்து வருகிறார்.

முதியோர் இல்லத்தில் இருந்தாலும், மூட்டுவலியால் துன்புற்றாலும், தமிழ்மொழி, இன, நாட்டுநலம் பேணாமல் இருக்க முடியவில்லை என்னால். அதன்விளைவு 1971 முதல் 2016 வரை கொண்டாடிய 40 பொங்கல் விழாக்கள் தொகுப்பு, பொங்கல் விழாச் சிந்தனைகள் நூல்ல வெளியீடு, தங்களுக்கு ஒரு நூல் அனுப்புதல் போன்ற பணிகள்.

தங்களின் அரிய நேரத்தை நீண்டநேரம் எடுத்துக்கொண்டு விட்டேன். பொதுநலம் கருதிப் பொறுத்தருளக் கோருகின்றேன். நான் எதிர்பார்க்காமல் தாங்கள் அனுப்பிய மலரும் இதழ் களும் என்னை இவ்விதம் எழுத வைத்துவிட்டன.

நனி நன்றி.

**- ஐவர் வழி வ. வேம்பையன்,**
தலைவர், திருவள்ளுவர் மன்றம், மறைமலைநகர்

## மணம்பூண்டி அ.தட்சிணாமூர்த்தி மறைவு



பெரியார் பெருந்தொண்டர் விழுப்புரம் மாவட்டம் மணம் பூண்டியைச் சேர்ந்த த.தட்சி ணாமூர்த்தி 23.04.2017 ஞாயிறு அன்று மறைவுற் றார் என்பதை வருத்தத் தோடு தெரிவித்துக் கொள்கி றோம்.

**- ஆசிரியர் குழு**



# பாவேந்தே ... எம்மைப் பார்வேந்தே...!

**பாவலர் வையவன்**

வந்தான்என் கனவில்பா வேந்தன் நேற்று
வரச்சொல்லி யாசொன்னேன்? அவனே வந்தான்
இந்தாப்பா தம்பி,இதோ விடியும் நேரம்;
இப்படியா உறங்குவது? எழுஎழு என்றான்
தந்தானே தொந்தரவு உறக்கத் திற்கு
தவிர்க்கமுடி யாதெழுந்து வணக்கம் சொன்னேன்
எந்தனுயிர் மூச்சான தமிழும் நாடும்
எங்கே?யெங் கே?யென்றே குடைந்தெ டுத்தான்!

நன்றாநீர் கேட்பதெல்லாம் நியாயந் தானா?
நீயிருக்கும் போதேதான் செத்துப் போச்சே!
இன்றுவந்து எதற்குஅதைக் கேட்கின் றீர்கள்?
என்றேநான் சொன்னேன்பார், அவனும் சீறி
அன்றேநான் தமிழியக்கப் பாட்டில் சொன்ன
அழகான அடிகளுக்கு ஒப்பாய் இங்கு
தமிழாய்ந்த தமிழன்தான் தமிழர் நாட்டின்
தலைமைஅமைச் சாயிருந்து ஆண்டா ராமே!

ஆண்டாரே ஆண்டாரே ஆண்டா ரய்யா
அரசாண்டார் மண்ணாண்டார் மலையும் ஆண்டார்
ஆண்டிகளும் அரசர்களாய் ஆக ஆண்டார்
அடுத்தவரின் பெண்டாண்டார் பிள்ளை ஆண்டார்
மண்டிநின்ற காடாண்டார் மணலும் ஆண்டார்
மற்றுமவர் ஆண்டதெல்லாம் பதவி ஊழல்
மண்டுதமிழ் இலக்கியத்தின் பெருமை எல்லாம்
மாநாட்டில் எழுத்துகளில் பேச்சில் ஆண்டார்!

கண்டுரைத்து நீசொன்ன கருத்தை யெல்லாம்
காற்றினிலே பட்டமெனப் பறக்க விட்டோம்
சுண்டிவிட்ட ரத்தத்தில் சொரணை இன்றி
சூழ்ச்சிஅர சியல்மட்டும் செய்யக் கற்றோம்
மண்டிவிட்ட சுயநலத்தால் மானம் கெட்டு
மாநிலத்து உரிமையெலாம் தாரை வார்த்தோம்
கண்டுவக்கத் தமிழகத்தில் ஒன்றும் இல்லை
கையெடுத்துக் கும்பிடுவேன் போய்வா என்றேன்.

இதையெல்லாம் எடுத்துச்சொல்ல ஆளா இல்லை?
இருக்கின்றார் ஆனைமுத்து என்றோர் கிழவன்
அதையெல்லாம் எவரையா கேட்கின் றார்கள்
அவரவரும் அவர்பேச்சே பெரிதென் கின்றார்
கதையின்றோ எல்லாமே சாதி சாதி
கற்பனையும் செய்வதில்லை தமிழர் என்றே
இதையெல்லாம் பார்க்காதே திரும்பு என்றேன்
இடிந்துமனம் நொந்தபடி எழுந்தே போனான்!

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்

# மே நாளைக் கொண்டாடிய முதலாவது கம்யூனிஸ்டுத் தோழர்

- மரு.க. சோமாஸ் கந்தன், எம்.டி.,

இந்திய விடுதலை இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவர் - விடுதலைப் போரில் பங்கேற்ற போராளி - தென்னகத்தின் முதல் பொதுவுடைமைவாதி - முதன்முதலாக மே நாளைக் கொண்டாடிய கம்யூனிஸ்டுத் தோழர் - தொழிலாளர் தலைவர் - மிகச்சிறந்த பகுத்தறிவுவாதி - அறிவியல் ஆய்வுரையாளர் - சுயமரியாதை இயக்கச் சிந்தனையாளர் என்ற பன்முக ஆளுமை கொண்ட ம. சிங்காரவேலர் அவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மீனவர் வகுப்பைச் சேர்ந்த வெங்கடாசலம் செட்டி-வள்ளியம்மை இணையருக்கு 18.2.1860 இல் மூன்றாவது செல்வ மகனாகப் பிறந்தார்.

அந்நாளில், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் கல்வி பெறும் உரிமையும் வாய்ப்பும் இன்றி வாழ்ந்து வந்தனர். அத்தகைய சூழலில் ஒருவர் தொடக்கக் கல்வியினைப் பெறுதல் என்பதே குதிரைக் கொம்பாகும்.

ஆனால், அன்றைய சாதிக் கட்டுப்பாடுகளையும் சமூக அமைப்புகளையும் உடைத்தெறிந்துவிட்டு, சிங்காரவேலர் சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள இந்து உயர்நிலைப் பள்ளியில் தம் பள்ளிப் படிப்பையும், 1994ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரியில் படித்துப் பி.ஏ. (B.A.) பட்டமும் பெற்றதுடன், சில ஆண்டுகள் கழித்துச் சட்டக் கல்லூரியில் பயின்று, பி.எல். (B.L.) பட்டமும் பெற்றார் என்பது மிகப் பெரிய சாதனையாகும். 1907இல் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞராகத் தன்னைப் பதிவு செய்துகொண்டார். அந்நாளில் வாழ்ந்த சிறந்த வழக்கறிஞர்களுக்கிணையாகச் சிறப்புடன் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

1889இல் சிங்காரவேல் - அங்காளம்மாள் திருமணம் நடைபெற்றது. இத்திருமணம் சாதி மறுப்புத் திருமணமாகும். இவர்களது ஒரே மகள் கமலா இவர்களது பெயர்த்தி சீத்தா. பிலிப் ஸ்பார்ட் என்ற கம்யூனிஸ்டுத் தோழர், 1939இல் சீத்தாவை மணம் புரிந்துகொண்டார்.

இளமைக் காலத்தில், சிங்காரவேலர், சமூக அநீதிகளைக் குறிப்பாகத் தீண்டாமைக் கொடுமைகளை எதிர்க்கத் துணிவு கொண்டார். அக்காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் போர்க்குரலாகப் பண்டிதர் அயோத்தி தாசர் (1845-1914) விளங்கினார். சிங்காரவேலுக்கு அவருடன் ஏற்பட்ட தொடர்பின் காரணமாக புத்த நெறியில் ஈடுபாடு ஏற்பட்டது.

பண்டிதர் அயோத்திதாசரும், அடையாறு திசாபிகல் சொசைட்டியைச் சார்ந்த கர்னல் ஆல்காட் (Colonel Olcot) அவர்களும் இணைந்து, சென்னைக்கு வருகை தந்துள்ள புத்த நெறியாளர், அனாகரிகா தர்மபாலாவிற்கு வரவேற்பளிக்க விரும்பினர். 1898 ஆகஸ்டு 8 அன்று சிங்காரவேலரின் இராயப்பேட்டை இல்லத்தில், இலங்கை புத்த நெறியாளர்



தர்மபாலாவிற்கு வரவேற்பளிக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியின் போது மஹாபோதி சங்கம் சென்னையில் நிறுவப்பட்டது.

சென்னை ஐஸ்அவுஸுக்கு (Ice House)ப் பக்கத்தில் மஹாபோதி சங்கம் ஒரு கட்டடத்தில் இயங்கி வந்துள்ளது. அங்கே நடைபெறும் கூட்டங்களில், திரு.வி.க. தன் மாணவப் பருவத்தில் நண்பர்களுடன் சென்று கலந்துகொள்வார். சொற்பொழிவுகளுக்கிடையே கேள்விகள் கேட்டு விடைபெற முயற்சிப்பார்; சில நேரங்களில் கலவரமும் விளைவிப்பார். ஒருநாள், சிங்காரவேலர் டார்வின் கொள்கையைத் தமிழில் விளக்கினார். திரு.வி.க. அச்சொற்பொழிவினைக் கேட்டுத் தன்னை இழந்தார். சிங்காரவேலரின் அன்பரானார்.

சிங்காரவேலர், 1902இல் வர்த்தகத் தொடர்புகளை அமைக்க இங்கிலாந்து சென்றார். 1902ஆம் ஆண்டில் இங்கிலாந்திற்குச் சிங்காரவேலர் மேற்கொண்ட பயணம் மகத்தான அனுபவமாக அமைந்தது என்றே கூறலாம்,

அந்த நேரத்தில் தான் மகத்தான சோசலிஸ்ட் பேச்சாளரும் அமைப்பாளருமான கெர் ஹார்டியின் தலைமையின் கீழ்ப் புதிதாக உருவாக்கப்பட்டிருந்த தொழிலாளர் கட்சி பிரிட்டிஷ் அரசியலின் வடிவத்தை மாற்றியமைத்துக் கொண்டிருந்தது. உயிரோட்டமான சோசலிஸ்ட் தத்துவம் நடைமுறை என்ற பாரம்பரியத்தை உருவாக்கி விட்டுச்சென்ற பிரடெரிக் எங்கெல்ஸ்

மறைந்து அப்போது ஏழு ஆண்டுகளே ஆகியிருந்தது. இவை, சிங்காரவேலரின் உள்ளத்தில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின.

இலண்டனில் அவர் இருந்தபோது அங்கு நடந்த உலக பௌத்த மாநாட்டிலும் கலந்துகொண்டார்.

வழக்கறிஞராக, சிங்காரவேலர் புகழ்பெற்றுத் திகழ்ந்தார்; பல துறைகளில் தீவிரத்துடன் பணியாற்றினார். ஆதலினால் கவி பாரதி, வ.உ.சி., சக்கரைச் செட்டியார், சுப்பிரமணிய சிவா போன்ற காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்புகளேற்பட்டன.

அக்காலத்தில் அவர் சமூக நலப்பணிகளிலும் ஈடுபட்டார். மீனவக் குப்பங்களில் பிளேக் நோய் ஏற்பட்ட காலத்தில் பிளேக் ஒழிப்பு இயக்கத்தில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார். அவர் குடியிருப்பிலேயே பொதுச் சமையல் வைத்து மக்களுக்கு உதவி செய்தார். 1917இல் இன்ப்ளுயன்சா காய்ச்சல் பரவியது. அந்நோய் பரவாது தடுத்திடவும், நோயிலிருந்து விடுபடவும் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்குத் துணையாக இருந்தார். இதுபோன்ற பொதுப் பணிகளில் ஈடுபட்ட சில நாள்களிலேயே காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றத் தொடங்கினார். இயல்பாகவே போராட்டக் குணம் கொண்ட சிங்காரவேலர் விடுதலை இயக்கப் போராட்டங்களில் ஈடுபாடு கொண்டதில் வியப்பேதுமில்லை.

ரௌலட் சட்டம் (Rowlatt Act) என்பது பிரித்தானிய இந்தியாவில் இயற்றப்பட்ட ஒரு குற்றவியல் சட்டமாகும். மார்ச் 1919இல், அச்சட்டம் இயற்றப்பட்டது. விடுதலை வேண்டுகின்ற இந்தியர்களை அடக்கவும், பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான சதிகளை நசுக்கவும் அச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

அந்த சட்ட அமலாக்கத்தை எதிர்த்து, காந்தியார், 1919 ஏப்ரல் 6ஆம் தேதி நாடு தழுவிய வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தார். காந்தியின் அழைப்பை ஏற்றுச் சிங்காரவேலர், சென்னை நகரின் பல பகுதிகளில், இளைஞர்களோடும், மாணவர்களோடும் தேசியப் பாடல்களைப் பாடிக்கொண்டும், ஏகாதிபத்திய எதிர்ப்பு முழக்கங்களை முழங்கிக் கொண்டும் ஊர்வலமாகச் சென்றுள்ளார் காங்கிரசின் முக்கியத் தலைவர்களில் ஒருவராய் விளங்கினார்.

**ஜாலியன் வாலாபாக் படுகொலை**

**1919, ஏப்ரல் 13ஆம் நாள் பஞ்சாபில் ஜாலியன் வாலாபாக்கில் அந்தக் கோர நாடகம் அரங்கேறியது. இந்திய சரித்திரத்தின் முகத்தில் கருப்பு மை பூசிய கொடிய ஞாயிற்றுக் கிழமை அது. இவ்வன்கொடுமையை எதிர்த்து சிங்காரவேலர் பல கண்டனக் கூட்டங்கள் நாடு முழுதும் நடத்தினார். காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரப் பங்கேற்றார். தம் வழக்கறிஞர் தொழிலைத் துறந்தார். 24.5.1921 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தன் வழக்கறிஞர் அங்கியை நெருப்பிலிட்டுச் சாம்பலாக்கினார். மக்களிடையே பிரிட்டிஷார் மீது எதிர்ப்புணர்வினைத் தூண்டிவிட்டார். மக்கள் தங்களுக்கிடையே ஏற்படும் வழக்குகளுக்குத் தீர்வுகாண பிரிட்டிஷ் நீதிமன்றங்களுக்குச் செல்லாது, அவர் நிறுவிய 'ஹிந்துஸ்தான் பஞ்சாயத்து' என்ற அமைப்பில் முறையிட்டு நீதி பெறும்படிக் கூறினார். 'ஹிந்துஸ்தான் பஞ்சாயத்து' ஞாயிற்றுக்கிழமைகளில் 'பாரத் ஆசிரமம்' என்ற இடத்தில் கூடி வழக்குகளை விசாரித்து நீதி வழங்கி வந்துள்ளது.**

ரௌலட் சட்டம், ஜாலியன் வாலாபாக் போன்ற கொடிய நிகழ்வுகளுக்குப் பின்னர், பிரிட்டிஷ் அரசின் மீதும், பிரிட்டிஷார் மீதும் மக்கள் கடும் சீற்றமும், வெறுப்பும், அவநம்பிக்கையும் கொண்டிருந்தனர்.

மக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெறுவதற்காக 13.1.1922 அன்று பிரிட்டிஷ் வேல்ஸ் இளவரசர் தன் மனைவியுடன் நல்லெண்ணத் தூதுவராக சென்னைக்கு வந்தார்கள். அவரது வருகையை எதிர்த்து சிங்காரவேலர் மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினார். அலைகடலென மக்கள் கூடி ஆர்ப்பரித்தனர். சென்னை மாநகரமே குலுங்கியது. பிரிட்டிஷ் அரசு கலங்கியது.

அன்று, காங்கிரசுக்கு ஆதரவாகத் தொழிலாளர்களைத் திரட்டினார். தொழிலாளர் பிரச்சனைகளை எடுத்துக்கொண்டு பணியாற்றும் இயக்கமாக காங்கிரசை உருவாக்கப் போராடினார். தீவிர இடதுசாரி கருத்துக்களை காங்கிரசு மேடைகளிலும், தன் கட்டுரைகளிலும் முன்வைத்தார்.

**1918 ஏப்ரலில், 'சென்னை மாகாணச் சங்கத்தின் மாநாடு' தஞ்சையில் நடைபெற்றது. அம்மாநாட்டில்தான், ஈ.வெ.ரா. சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் சந்திப்பு நிகழ்ந்தது.**

ருஷ்யாவில் 1917 அக்டோபரில் புரட்சி ஏற்பட்டு, ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. கொடுங்கோல் ஆட்சி புரிந்த ஜார்மன்னரை வீழ்த்தி சோசலிச மக்கள் குடியாட்சி மலர்ந்தது.

சிங்காரவேலரின் நட்பைப் பெற்றிருந்த மகாகவி சுப்பிரமணிய பாரதி இந்த ருஷ்ய புரட்சியைக் குறித்து,

“ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்
குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்தது பார்; குடியரசென்று
உலகறியக் கூறி விட்டார்
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது
அடிமையில்லை அறிக என்றார்”

என்று உணர்ச்சியோடு பாடுகின்றார்.

இந்த யுகக் கவி பாரதி 1921 செப்டம்பர் 11இல் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மடியில் தான் உயிர் நீத்தார்.

அகிலத்திலுள்ள மக்கள் அனைவரும் ருஷ்யப் புரட்சியின் வெற்றிகண்டு எழுச்சி பெற்றனர். அடிமைப்பட்ட மக்கள் உள்ளத்தில் விடுதலைத் தீ பரவலாயிற்று. இந்தச் சூழலில்

தான் இங்கு தமிழ்நாட்டில் சிங்காரவேலர் தீவிர உறுதி கொண்ட அரசியல் தலைவராக எழுந்தார். கம்யூனிஸ்டு தத்துவத்தின்பால் ஈர்க்கப்பட்டார். காங்கிரசு மேடைகளில் கம்யூனிஸ்டு கொள்கைகளைப் பரப்பினார். அக்காலத்தில் அவரைப்போல் செயல்திறன் மிக்க காங்கிரசு தலைவர் வேறெவரும் கிடையாது என்று கூறலாம். ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரப் பங்கேற்ற காலத்திலிருந்தே பாட்டாளி வர்க்கம், காங்கிரசில் சோசலிசம் ஆகியவற்றைப் பற்றிச் சிந்திப்பவராக இருந்துள்ளார். 1922இல் அவரது இல்லம் காவல்துறையினரால் சோதனையிடப்பட்டது. சட்டவிரோத மான ஆவணங்கள் ஏதும் அவர்களுக்குக் கிட்டவில்லை. 13 டிசம்பர் 1922 சுதேசமித்திரன் இதழில், "தொழிலாளர் சுயராஜ்ஜியத்திற்காக காங்கிரசு பாடுபட வேண்டும்" என்று அவர் எழுதியிருந்தார். இக்கட்டுரையின் சில பகுதிகளை, 'கான்பூர் போல்ஷ்விக் சதி (6.3.1924) வழக்கில்' பயன்படுத்தினர்.

### கயா காங்கிரசில்

1922இல் கயாவில் நடைபெற்ற காங்கிரசில் சிங்கார வேலர் கலந்துகொண்டார். இந்த மாநாட்டில் தான் எஸ்.ஏ. டாங்கேயைச் சந்தித்தார்.

"தொழிலாளர் ஸ்தாபன அமைப்பு" என்ற தலைப்பில் சிங்காரவேலர் பேசினார்.

"தலைவர் அவர்களே, தோழர்களே, நான் உலகக் கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதியாக உங்கள்முன் நிற்கின்றேன். உலகக் கம்யூனிஸ்டுகளின் வாழ்த்துகளை உரித்தாக்கு கின்றேன். நமது காங்கிரசு இயக்கம் சுதந்தரம் பெறப் போராடிக் கொண்டிருக்கிறது. இவ்வுரிமைகளை எல்லோரும் பெறவேண்டும், சிலர் கைகளில் அதிகாரம் குவிதலை நாம் விரும்பவில்லை, சுயராஜ்ஜியம் என்பது தொழிலாளரும் உழைக்கும் மக்களும் உண்மையான விடுதலையைப் பெறுவதென்பதாக இருக்க வேண்டும். ஆகையால், தோழர் களே, நாம் தொழிலாளர்கள் நலத்தில் மிகுதியான கவனம் செலுத்த வேண்டும் என்று நான் வேண்டுகின்றேன். தொழிலாளரை நேரடியாக அணுகி நாட்டிலுள்ள தொழிற் சங்கங்களை காங்கிரசு அமைப்பின் ஒரு பகுதியாக ஒன்று திரட்ட வேண்டும்.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டவர்கள். அத்தகைய மனித இன ஒற்றுமையை உண்டாக்க இந்தியத் தொழிலாளரும் உதவி செய்வர்."

இவை கயா காங்கிரசில் சிங்காரவேலர் ஆற்றிய உரையின் சில பகுதிகள்.

**எம்.என். ராய் மார்ச் 1, 1923ல் "வேன்கார்டு" (VAN-GUARD) இதழில், சிங்காரவேலர் கயா காங்கிரசில் தன்னை உலகக் கம்யூனிஸ்டுகளில் ஒருவன் என்று கூறியதைப் போற்றிப் புகழ்ந்து எழுதியுள்ளார்.**

சிறந்த சிந்தனையாளர்களும், மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்த தலைவர்களும் நிறைந்திருந்த 'கயா காங்கிரஸ் மாநாட்டில்' சிங்காரவேலர் கலந்துகொண்டு உரையாற்றியது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். அரசு வழக்குத் தொடுத்துவிடும், மேன்மையான தேசியத்திலிருந்து ஒதுக்கப் பட்டு விடுவோம் என்று இளையவர் அஞ்சி நின்றபோது, 60 வயதிற்கும் மேற்பட்ட முதியவர் தம்மை ஒரு கம்யூனிஸ்டு என்று அறிவித்தபோது அவரைப் பார்த்துச் சிரித்தவர்கள் அவரது அஞ்சாமையைக் கண்டு வியந்திருக்க வேண்டும்.

### மே நாள்

உலகமுற்றும் தொழிலாளர்களால் கொண்டாடப்படும் மே நாள், இந்தியாவில் முதன்முதலாக 1923ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தின் எதிரில் இருந்த கடற்கரையில் சிங்காரவேலரால் கொண்டாடப்பட்டது. அன்றைய தினமே, தொழிலாளர் விவசாயிகள் கட்சியைத் தொடங்கினார். அக்கட்சி புரட்சிகர ஜனநாயக சமத்துவத் திட்டத்திற்காகக் காங்கிரசுக்குள் ளேயே செயலாற்றிட வேண்டுமென்று அதனைத் தொடங்கி னார். அக்டோபர் 1923இல் "லேபர் கிசான் கெசட்" (Labour Kisan Gazette) என்ற மாதமிருமுறை வெளிவரும் ஆங்கில இதழையும், "தொழிலாளன்" என்ற தமிழ் வார இதழையும் கட்சியின் சார்பாக வெளியிடுவது குறித்து அறிவித்தார்.

21.1.1924இல் லெனின் மறைந்தார். தொழிலாளர் விவசாயக் கட்சி தன் அலுவலகத்தில் செங்கொடியை அரைக் கம்பத்தில் பறக்கச் செய்து அஞ்சலி செலுத்திற்று. லேபர் கிசான் கெஜட்டில் வெளியான கட்டுரை லெனினுடைய ஆற்றலையும் சேவையையும் பாராட்டியது.

**1924 மார்ச் 6ஆம் நாள், "கான்பூர் போல்ஷ்விக் சதி வழக்குத்" தொடர்பாகக் காவலர் அவரைக் கைது செய்ய வந்த போது, அவர் பெரிதும் நோயுற்றுப் படுக்கையில் இருந் தார். ஆறு திங்களுக்குமேல் பிணியால் இடர்ப்பட்டார். பிரிட்டிஷ் அரசு அவரை வீட்டுக் காவலில் வைத்திருந்தது. குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று கூறி, பின்னர் அவரை, அரசு விடுதலை செய்தது.**

### இந்துமத அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்

பிப்ரவரி, 1925இல் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியினர் இந்துமத அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தனர். கோயில்களின் சொத்துக்கள், மத அறக்கட்டளைகள் ஆகிய வற்றைச் சரியான கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வருவதே அதன் நோக்கமாகும். இச்சட்டத்தால் இந்து மதத்திற்கு ஆபத்து என்று சனாதனிகளும் காங்கிரசாரும் எதிர்த்தனர். இச்சட்டத்தை ஆதரித்து, 13.2.1925 அன்று "நவசக்தி" இதழில் சிங்காரவேலர் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

"நமது தேசிய சொத்துக்கள் சரியான நிர்வாகமின்றிச் சீரழிந்து போவதைத் தடுத்து சரியான நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வருவதை எதிர்ப்பது ஏன்? இந்து மதத்திற்கு

ஆபத்து என்று கூறுவது சரியன்று. உடன்கட்டை ஏறுதல் என்ற வழக்கம் ஒழிக்கப்பட்ட காலத்திலும், விதவா விவாகச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போதும் இத்தகைய கூச்சல்களே எழுந்தன. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக் களை சரியான நிர்வாகத்திற்குட்படுத்தக் கூடிய இந்தச் சட்டத்திற்கு விரோதமாக ஏன் கிளர்ச்சி செய்ய வேண்டும்? ஆதலினால் இந்த தர்ம பரிபாலன சட்டம் பல வழிகளில் நன்மை தரக்கூடியதென்று ஜனங்களிடையே சென்று பிரச்சாரம் செய்வது தமிழ்நாட்டுத் தலைவர்களுடைய கடமையாகும்.''

தமிழ்நாடு காங்கிரசு மாநில மாநாடு 1925, நவம்பர் 21, 22 தேதிகளில் திரு.வி.க. தலைமையில் காஞ்சியில் நடை பெற்றது. அம்மாநாட்டில் சிங்காரவேலர் கொடி ஏற்றினார். அம்மாநாட்டில் ஈ.வெ.ரா, எஸ். இராமநாதன், சுரேந்திரநாத் ஆரியா, வி. சக்கரைச் செட்டியார் ஆகியோர் பிராமணர்-பிராமணரல்லாதார், தீண்டாதார் ஆகியோருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்தனர். மாநாட்டுத் தலைவர் திரு.வி.க. தீர்மானத்தை அனுமதிக்க வில்லை. ஆதலால், ஈ.வெ.ரா. காங்கிரசிலிருந்து விலகி சுய மரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். அவ்வியக்கத்தின் கொள்கைகளில் சில, பொருள் முதல்வாதக் கோட்பாடுகளை யும் கம்யூனிசக் கொள்கைகளையும் பரப்புவதற்கு வழிகோலின. ஈ.வெ.ரா.வுடன் ஏற்பட்ட தொடர்பால், சிங்காரவேலர், ''குடிஅரசு'', ''புரட்சி'' ஆகிய தமிழ் வார இதழ்களில், சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகள், பகுத்தறிவுக் கருத்துகள், சமத்துவக் கொள்கை கள், அறிவியல் விளக்கங்கள் எனப் பல்வேறு துறைகளைச் சார்ந்த விஷயங்கள் பற்றிக் கட்டுரைகளை எழுதி வந்தார்.

**சென்னை மாநகராட்சியில்**

1925இல் சென்னை மாநகராட்சித் தேர்தலில் காங்கிரசு சுயராஜ்யக் கட்சி சார்பில் வேட்பாளராக நின்று, யானைக்கவுனி தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 3.11.1925 இல் நிரந்தரக் கல்விக் குழுவிற்குத் (Standing Committee) தேர்ந்தெடுக்கப்பட்டார். நகரத்தின் சுகாதாரம் மேன்மையுற நடவடிக்கை எடுத்தார். ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கவும், குடியிருப்பு வசதிகளைப் பெருக்கவும், மருத்துவ வசதிகள் பெருகவும், குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்திட வும், சிறார்களின் கல்வி சிறந்திடவும் நடவடிக்கைகள் எடுத் தார். இவர் சென்னை மாநகராட்சி உறுப்பினராக இருந்த போது, பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். பிரிட்டனிலிருந்து சென்னைக் வந்த கம்யூனிஸ்டுத் தோழர் சக்லத்வாலாவிற்கு சென்னை மாநகராட்சி வரவேற்பளிக்க ஏற்பாடு செய்தார். சக்லத்வாலா பேசிய கூட்டங்களில் அவரது உரையை சிங்காரவேலர் தமிழில் மொழிபெயர்த்தார். சக்லத்வாலாவின் வருகை சோவியத் யூனியனின் சாதனைகளைப் பரப்பவும் கம்யூனிசத் திட்டத்தைப் பற்றிய சீரிய புரிதல் உருவாகவும் உதவி செய்தது.

**கான்பூரில் 1925 டிசம்பர் 26ஆம் நாள் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. அன்றைய தினமே கான்பூரில் கட்சியின் முதல் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில், பொதுவுடைமைக் கட்சியினர் ''இந்தியா பிரிட்டிஷ் பிடியிலிருந்து விடுபட்டு முழுச் சுதந்தரம் அடைதல் வேண்டும்'' என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள்.**

இதே ஆண்டில் ஆர்.எஸ்.எஸ். இயக்கமும் தோன்றியது. அதன் தொடக்க மாநாட்டில் இந்திய விடுதலை குறித்துத் தீர்க்கமான தீர்மானம் எதனையும் கொண்டுவரவில்லை. ஆனால் காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தைக் கண்டித்தும், முஸ்லிம்களை விஷப்பாம்பென்றும், முஸ்லிம் ஆதிக்கத்திலிருந்து விடுதல பெறுவதுமே உண்மையான சுதந்தரம் என்றும் அந்த ஆர்.எஸ்.எஸ். மாநாட்டில் பேசப் பட்டது. 1925 முதல் மாநாட்டிலேயே அவர்களது நிறம் என்ன வென்று தெரியவந்தது.

முதல் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி மாநாட்டில், கான்பூரில், தலைமையேற்றவர் தென்னகத்தின் முதல் பொது வுடைமைவாதி 'சிந்தனைச் சிற்பி ம.வெ. சிங்காரவேலர்' ஆவார்.

அவர் நிகழ்த்திய நீண்ட தலைமையுரையின் சில முக்கியப் பகுதிகள் :

''தோழர்களே, இந்திய விடுதலை வேள்வியில் பங்கேற் றுள்ள போராளிகளுக்கு நமது நெஞ்சார்ந்த ஆதரவையும், அவர்கள் இந்த இந்திய விடுதலைப் போரில் வெற்றி அடைந்திட வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.''

'திலகர், தேசபந்து தாஸ், சுப்பிரமணிய சிவா, மேலும் லெனின், ரோசா லக்ஸம்பர்க், கார்ல் லீப்நேக்ட், எம்முவாரே' ஆகியோரின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தினார்.

'நமது நாட்டின் விடுதலைக்காக நடைபெறும் போராட்டத் தில் நம் பொதுவுடைமைத் தோழர்கள் பெரும் அளவிற்குப் பங்கேற்க வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தார்.

''இந்திய சுதந்தர அரசு, வருங்காலத்தில் முதலாளிகளின் ஆட்சியாக அமைந்திடாமல், அடிப்படையில் பாட்டாளி மக்களின் நலத்திற்கான ஆட்சியாக மலர்வதற்கு விழிப்புடன் செயல்படுவது பொதுவுடைமைத் தோழர்களின் கடமை'' என்று வலியுறுத்தி னார்.

''உழைக்கும் பாட்டாளி மக்கள் பங்குபெறாமல், பூர்ஷ் வாக்களும் அறிவுஜீவிகளும் சுயராஜ்ஜியத்தைப் பெற்றுவிட முடியாது. தொழிலாளர்களிடம் காங்கிரசு முதலாளித்துவத் தலைமை உண்மையுடன் நடந்துகொள்வதில்லை'' என்றும் சுட்டிக்காட்டினார்.

**''நமக்கு ஏற்படக்கூடிய அபாயத்தைக் குறித்து எச்சரிக் காவிட்டால் எனது கடமையிலிருந்து தவறியவன் ஆவேன். ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் பெற்ற அனைத்துக் கட்சிகளின் நல்லிணக்கம், வகுப்புவாத, மதவேறுபாடுகளால் அழிக்கப்பட்டுவிடலாம் என்று தோன்றுகிறது. ஏனெனில்**

**இந்தியர்களாகிய நாம் மிதமிஞ்சிய சாதி மதப் பற்றுள்ளவர்களாக இருக்கின்றோம். இதுவே நமது ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கும் சக்தியாகும்.''**

மதமும் சாதியும் நம்மிடையே நிலவி வரும் நீண்ட நெடிய அரசியல் ஒருமைப்பாட்டை விழுங்கி விடுகின்ற பேய்களாகும். இன்று மறுபடியும் நமது நாடு மதவாதத்தால் சிதறடிக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய அற்பக் காரியங்களில் ஈடுபடும் தலைவர்கள் நமது நாட்டிற்கும் இலட்சியத்திற்கும் துரோகிகளாவர்.

**சிங்காரவேலரின் இக்கூற்று 2017ஆம் ஆண்டிலும் பொருந்துகின்ற வகையில் அமைந்துள்ளது.**

அமெரிக்காவில் சாக்கோ, வான்சிட்டி என்ற இரண்டு கம்யூனிஸ்டுகளை எலக்டிரிக் ஷாக் கொடுத்துக் கொன்றுவிட்டார்கள். இச்செயலைக் கண்டிக்கச் சிங்காரவேலர் சென்னை நேப்பியர் பூங்காவில் ஆகஸ்டு 1927இல் மாபெருங்கண்டனக் கூட்டத்தைக் கூட்டினார். சிங்காரவேலர் உரையாற்றியதோடு, அமெரிக்காவின் அடாத செயலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். சுயமரியாதைக் கழகத் தலைவர்களில் ஒருவரான கே.வி. அழகிரிசாமி எழுச்சியுரை ஆற்றினார்.

உலகின் பல்வேறு நாடுகளில் செயல்பட்டுவந்த கம்யூனிஸ்டு அமைப்புகளோடு தொடர்பு வைத்திருந்தார். அவர்கள் வெளியிடும் புதிய நூல்கள், பத்திரிகைகள் பெற்றிட தன் நண்பர்களின் முகவரியைக் கொடுத்துவிடுவார். அவர்கள் இவரிடம் நூல்களைச் சேர்த்துவிடுவார்கள்.

### தொழிற்சங்கத் தொடக்கக் காலம்

1917ஆம் ஆண்டு அக்டோபரில் இரஷ்யப் புரட்சி நடந்தேறியது, 27.4.1918இல் இந்தியாவின் முதல் தொழிற்சங்கமான ''சென்னை தொழிலாளர் சங்கம்'' தொடங்கக் காரணமாக இருந்தவர் சிங்காரவேலர். அது முதற்கொண்டே தொழிலாளர் பிரச்சினைகளில் தோழர் சிங்காரவேலர் தீவிரக் கவனம் செலுத்தத் தொடங்கினார்.

தொழிலாளர் இயக்கத்தின் தொடக்கக் காலத்தில் எந்தவொரு சங்கத்தின் முக்கியப் பொறுப்புகளிலும் அவர் இல்லை எனினும், அந்தக் காலக்கட்டத்தில் இரயில்வே தொழிலாளர், டிராம்வே தொழிலாளர், மின்வாரியத் தொழிலாளர், மண்ணெண்ணெய்த் தொழிலாளர், ரொட்டித் தொழிலாளர், தெருக்கூட்டும் தொழிலாளர், பஞ்சாலைத் தொழிலாளர் ஆகியோரின் போராட்டங்களில் பங்கேற்பதைத் தனது பழக்கமாகவே கொண்டிருந்தார்.

**1920 டிசம்பர் 9 அன்று பி அண்டு சி மில் (B & C Mill) தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தின்போது பிரிட்டிஷ் போலீஸ் அதிகாரி உத்தரவின் போரில், தொழிலாளர்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதில், பாபுராவ், முருகன் என்ற 2 தொழிலாளர்கள் களத்திலேயே மாண்டனர். இந்தியத் தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் முதல் தியாகிகள் இவ்விருவரே. மறுநாள் நடந்த இறுதி ஊர்வலத்தில் பாடையைத் தூக்கிச் சென்றவர்களில் தோழர் சிங்காரவேலரும் ஒருவர்.**

**வேலை நிறுத்தம் சுமார் ஓராண்டு காலத்திற்கு நீடித்தது. ஆங்கிலேய கவர்னர் வில்லிங்டனுக்கு எதிரான தொழிலாளர் பேரணியில் திரு.வி.க., சக்கரைச் செட்டியார், இ.எஸ். ஐயரோடு தோழர் சிங்காரவேலரும் பங்கேற்றார். இப்போராட்டத்தில் சுமார் 13,000 தொழிலாளர்கள் பங்கேற்றனர். ஆலை நிர்வாகம் போராடும் தொழிலாளருக்குப் பதிலாக ஏழை ஆதித்திராவிட மக்களை வேலையில் அமர்த்தினர். அதனால் சாதி இந்துக்களுக்கும் ஆதித்திராவிடர்களுக்கும் இடையில் வகுப்புப் பகைமையை உண்டாக்கி, வேலை நிறுத்தத்தை உடைக்க நிர்வாகம் முயன்றது. அப்போதே சாதியைக் கொண்டு தொழிலாளர் ஒற்றுமையைக் குலைக்க பிரிட்டிஷார் முயற்சித்தனர்.**

**எல்லாக் காலங்களிலும் ஒற்றுமையை உடைக்கும் சக்தியாக சாதியும் மதமும் இருந்துள்ளன; இருந்து வருகின்றன.**

அப்போராட்டத்தை ஒடுக்க முடியாமல் போகவே, 1921 ஆகஸ்ட் 29 அன்று பிரிட்டிஷ் போலீஸ் மீண்டும் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் ஒரு பெண் உட்பட ஏழு தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். சிங்காரவேலர் ''துப்பாக்கிப் பிரயோக சம்பவம்'' பற்றி மிக உருக்கமான கட்டுரை எழுதினார். ''சரியோ, தவறோ அவர்கள் படும் துன்பங்கள், அவர்கள் தாங்கும் துயரங்கள், அவர்களுக்கு ஏற்படும் இழப்புகள் யாவும் அவர்கள் ஆன்மாக்களில் ஆழமாகப் பதிந்துவிட்டன. அவர்களுடைய ஆறு குற்றமற்ற தோழர்களின் மரணத்தின் நினைவு அவர்களை மேலும் அதிகத் துன்பங்களை-மேலும் அதிக இழப்புகளை-மேலும் அதிகத் துயரங்களைத் தாங்கும் வலிமையைத் தரும். இறந்தவர்களும் தொடர்ந்து பணியாற்றுகின்றனர் என்று ஆறுதல் கூறி, வால்ட்டர் விட்மனின் கவிதையுடன் முடித்தார்.'' சிங்காரவேலுவின் இக்கட்டுரை, வரலாற்றில் இடம்பெறத்தக்கது என்பார் திரு.வி.க.

**செப்டம்பர் 19 மற்றும் அக்டோபர் 15இல் மீண்டும், மீண்டும் தொழிலாளர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அப்போது நடந்த தொழிலாளர் ஊர்வலத்தை தோழர் சிங்காரவேலரே வழிநடத்தினார். எந்தத் தீர்வையும் எட்டாமல், சர்.பி. தியாகராயர் ஆலோசனைப்படி வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.**

1921 மே 17 அன்று சூலை பஞ்சாலைத் தொழிலாளரிடையே பேசிய போது, உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்களின் நிலையையும், ஒற்றுமையின் தேவையையும் வலியுறுத்தினார். ''எல்லாவற்றையும் தொழிலாளரே உற்பத்தி செய்கின்றனர். ஆனால், அவர்களிடம் ஏதும் இல்லை'' என்பதைச் சுட்டிக்காட்டினார். பல்வேறு நாடுகளில் நடந்துகொண்டிருந்த வர்க்கப் போராட்டங்களை ஆய்வு செய்து, சென்னைத் தொழி

லாளர்களுக்கு வழிகாட்டினார். அதில் அவரின் மார்க்சிய சிந்தனைப் போக்கின் வளர்ச்சி வெளிப்படலாயிற்று.

### இரயில்வே தொழிலாளர் போராட்டம்

வங்காளத்திலுள்ள கரக்பூரில் இரயில்வே தொழிலகத் தொழிலாளர் ஆள் குறைப்பை முன்னிட்டு, 19.2.1927இல் பெரும் வேலை நிறுத்தப் போராட்டம் நடந்தது. அப்போராட்டத்தை முகுந்தலால் சர்க்கார் தலைமையேற்று நடத்தினார். அப்போராட்டம் வங்காளத்தையே உலுக்கியது. அந்தப் போராட்டத்தில் சிங்காரவேலர் வங்காளத்துக்குச் சென்று முகுந்தலால் சர்க்காருடன் சேர்ந்து போராடியுள்ளார்.

19.7.1928 அன்று நாகை இரயில்வே வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்கியது. நாகப்பட்டினம், போத்தனூர் ஆகிய ஊர்களிலுள்ள இரயில்வே பணிமனைகளில் ஆட்குறைப்பும், பழிவாங்கல் நடவடிக்கையும் நடந்து கொண்டிருந்தன. மேலும், நாகை, போத்தனூரிலுள்ள பணிமனைகளைப் பொன்மலைக்கு மாற்றவும், பணித்தேர்வு என்ற முறையில் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் நிருவாகம் செயல்பட்டுக் கொண்டிருந்தது. இவற்றை எதிர்த்தே அன்று வேலை நிறுத்தம் தொடங்கியது.

நாகப்பட்டினம் இரயில்வே போராட்டத்தில் ஈ.வெ.ரா.வும் பங்கேற்றார்.

வங்க இரயில்வே போராட்டத்தில் ஏற்பட்ட விழிப்பு, நாகைத் தொழிலாளர்களிடையே நல்ல ஒற்றுமையை ஏற்படுத்தியது. இப்போராட்டத்தினால் தமிழக இரயில்வே துறையே நிலைகுலைந்தது. இதனால், அன்றைய அந்நிய அரசு சிங்காரவேலர், முகுந்தலால் சர்க்கார், பெருமாள் ஆகியோருடன் தொழிலாளர் பலரையும் கைது செய்தது.

இந்தப் போராட்டத்தில் சிங்காரவேலரும், முகுந்தலால் சர்க்காரும் சதிசெய்தனரென்று 10 ஆண்டுக் கடுங்காவல் தண்டனையை அவர்களுக்கு விதித்தது, அன்றைய பிரிட்டிஷ் அரசு. சிங்காரவேலர் சென்னை சிறையில் அடைக்கப்பட்டார். சிங்காரவேலருக்கு விதிக்கப்பட்ட தண்டனை உயர் நீதி மன்றத்தால் குறைக்கப்பட்டு ஆகஸ்டு 1930இல் விடுதலையானார். அப்பொழுது அவருக்கு வயது 70. 1930க்குப் பின்னர் நடைபெற்ற தொழிலாளர் போராட்டங்களில் தீவிரப் பங்கேற்க இயலவில்லை என்ற போதிலும், பல தொழிற்சங்க நடவடிக்கைகளில் தொடர்ந்து அக்கறை காட்டினார்.

**சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், 1931 முதல் 1935 வரை சிங்காரவேலர், பெரியார் நிறுவிய சுயமரியாதை இயக்கத்தில் முக்கியமான பங்கினையாற்றினார். 1931 டிசம்பர் 26ஆம் நாள் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டினைத் திறந்து வைத்து ஆற்றிய உரையில், தொன்றுதொட்டு இருந்து வரும் மூடப்பழக்கவழக்கங்களை, சாதி, மத வேற்றுமைகளை எதிர்த்து சுயமரியாதை இயக்கம் பணியாற்றுவதை அவர் பாராட்டினார். "சோசலிசம் மட்டுமே சாதி, மத, பொருளாதார வேற்றுமைகளற்ற சமுதாயத்தைப் படைக்க முடியும்" என்றார்.**

"குடிஅரசு" ஏட்டில் 'சமதர்ம விளக்கம்' என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதி முடித்தார். அதன் பின்னர் தொடர்ந்து, "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற கட்டுரைத் தொடரையும், அதனைத் தொடர்ந்து, 'விஞ்ஞானமும் மூடநம்பிக்கைகளும்' என்ற தொடரையும் எழுதினார்.

1932 மே மாதம் சேலம் மாவட்ட சுயமரியாதை மாநாடு நடந்தது. அம்மாநாட்டிற்கு சிங்காரவேலர் தலைமை தாங்கி ஆற்றிய உரையின் முக்கியப் பகுதி வருமாறு :

"உங்கள் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள் மதங்களையும், மதக் கோட்பாடுகளையும், மூடநம்பிக்கைகளையும் சமூக வாழ்க்கையினின்று அகற்றுவது, சாதி ஏற்றத்தாழ்வுகளை நீக்குவது, ஆணுடன் பெண்ணும் சரிநிகர் சமத்துவம் பெற வேண்டும் என்ற கோரிக்கையும் ஆகும். நமது நாட்டிலுள்ள 34 கோடி சாமான்ய மக்கள் உண்மையான சுதந்தரம் பெற்றுப் பசி இல்லாமலும், மதக் கற்பனையில்லாமலும், சாதி சமயமில்லாமலும் உண்ண, உடுக்க, இருக்க வசதிகள் யாவருக்கும் சரிநிகர் சமானமாக வாழ்க்கை பெற சமதர்ம இராஜ்யத்தை ஸ்தாபியுங்கள்" என்றார்.

இந்திய விடுதலை இயக்கம், பொதுவுடைமை இயக்கம், சுயமரியாதை இயக்கம் மூன்றிலும் பங்கேற்றுப் பணிபுரிந்தார். இம்மூன்று இயக்கங்களின் சிந்தனைச் சக்தியாக விளங்கினார்.

சாதி, மத பேதமற்ற (சோஷலிச) சமதர்ம சமுதாயம் மலர்ந்திட அல்லும் பகலும் சிந்தித்துச் செயலாற்றிய சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் 11.4.1946 அன்று எண்ணுவதையும் எழுதுவதையும் செயலாற்றுவதையும் நிறுத்தி, நீங்காத் துயிலில் ஆழ்ந்தார். வாழ்க அவரது கொள்கைகள்! வளர்க சோசலிசம்! எனக் கூறி, புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் கவிதையோடு நிறைவு செய்கின்றேன்.

"சிங்காரவேலனைப்போல் எங்கேனும் கண்டதுண்டோ?
பொங்கிய சீர்திருத்தம் பொலிந்ததும் அவனால்
பொய் புரட்டறியாமை பொசிந்ததும் அவனால்
சங்கம் தொழிலாளர்க் கமைந்ததும் அவனால்
தமிழர்க்குப் புத்தெண்மை புகுந்ததும் அவனால்
மூலதனத்தின் பொருள் புரிந்ததும் அவனால்
புதுவுலகக்கனா முளைத்ததும் அவனால்
கோலப்பொதுவுடைமை கிளைத்ததும் அவனால்
கூடின அறிவியல், அரசியல் அவனால்!
தோழமை உணர்வு தோன்றிய தவனால்
தூய தன்மானம் தொடர்ந்ததும் அவனால்
ஏழ்மைஇலாக் கொள்கை எழுந்ததும் அவனால்
எல்லோர்க்கும் எல்லாம் என்றுணர்ந்ததும் அவனால்
போர்க்குணம் மிகுந்தநல் செயல் முன்னோடி,
பொதுவுடைமைக் கேகுக அவன் பின்னாடி!"

# அகில இந்திய அளவில் தமிழ்நாட்டில் மட்டும்தான் ஒரே ஒரு பெரியார் இருந்திருக்கிறார்

**ந. முத்துமோகன்**

நேர்காணல் கண்டவர் : **க. காமராசன்**

*தேர்தல் அரசியலில் இந்துத்துவா வெற்றிகளைக் குவித்துவரும் வேளையில், இந்தியாவின் - ஜக்கி வாசுதேவ் போன்ற - நவீன சாமியார்கள் பொதுத்தளத்தில் இந்திய மரபுகள் முழுவதும் மறைஞான யோக மரபே எனவும், அவை முழுக்க ஐரோப்பியத் தத்துவ மரபுகளுக்கு - அதாவது பகுத்தறிவு, அறிவியல் மரபுகளுக்கு எதிரானது எனவும், வாதிட்டு வருகின்றனர். இவ்வேளையில், இந்தியத் தத்துவ மரபுகளின் தளங்களிலிருந்து விலக்கப்பட்ட நவீன சாதி எதிர்ப்பு, பகுத்தறிவுச் சிந்தனையாளர்களுக்கு - குறிப்பாகப் பெரியாருக்கு இந்தியத் தத்துவ மரபுகளில் வேர்கள் உள்ளனவா என்ற கேள்வியோடு மார்க்சிய அறிஞர் ந. முத்துமோகன் அவர்களுடன் தொலைப்பேசி வழியாக உரையாடலைத் தொடங்கினோம்.*


* **இந்தியத் தத்துவ மரபுகளுக்குள் வைத்து பெரியார், அம் பேத்கர் ஆகியோரைத் புரிந்துகொள்ள முடியுமா? எப்படிப் புரிந்துகொள்வது? இந்தியத் தத்துவ மரபு களில் பொருள் முதல்வாத மரபுகளின் தொடர்ச்சி யாக இன்றைய இந்திய மார்க்சியர்கள் உள்ளனர் என்று சட்டோபாத்தியாய இந்திய நாத்திகம் நூலின் முன்னுரையில் கூறுவார். அப்படி ஒரு தொடர்ச் சியை, வேர்களை வலியுறுத்த முடியுமா?**

இந்தியத் தத்துவ மரபுகளுக்குள் வைத்து பெரியார், அம்பேத்கர் ஆகியோரைப் புரிந்துகொள்ள முடியுமா என் பதற்கு இரண்டுவிதமாகப் பதில் சொல்லலாம்.

அம்பேத்கர் ரொம்ப வலுவாக பௌத்தத்தைக் கையிலெடுத்தார். தேவைப்பட்ட இடங்களில், அதில் சில முக்கியமான திருத்தங்களைக்கூட செய்தார். பௌத் தத்தைக் கொஞ்சம் புரட்சித்தன்மை கொண்டதாக மாற்றினார். சமூகவியல்படுத்தினார். அதனால் அம்பேத் கருக்கு இந்திய மரபுகளுக்குள் வேர்கள் கிடையாது என்று சொல்லமுடியாது. ஏனென்றால், தனது வேர் களை வேகமாகவும், அழுத்தமாகவும், தொடர்ச்சி யாகவும் பௌத்தத்திற்குள் அம்பேத்கர் தேடியுள்ளார். அவர் பௌத்தத்தை முன்வைத்து மார்க்சியத்தை எதிர்கொள்ளவும் முயற்சி செய்தார் என்று சொல்ல முடியும். ஆகவே அம்பேத்கருக்கு இந்திய மரபுகளுக் குள் வேர் வலுவாகத்தான் இருக்கின்றது.

இதற்கு இணையாக இங்கு அயோத்திதாச பண்டிதர் வேலை செய்தார் என்பதையும் பார்க்க முடியும். அம்பேத்கருக்கு முந்தியவர் அயோத்திதாசர். அவரும் பௌத்தத்திற்குச் சென்றுசேரும் ஒரு நிலை இருந்தது. ஆகவே, தலித் இயக்கம் இந்த மரபு சார்ந்த வேரை நன்கு தேடியுள்ளது என்று தோன்றுகிறது.

வேகமாக, மேலோட்டமாகப் பார்க்கும்போது, பெரியாரைப் பொறுத்தமட்டில், அவருக்கு மூன்றுவிதமான வேர்கள் காணப்படுகின்றன. ஒன்று சாருவாகம் - உலகாயதம். இதைப் பற்றி, பிரகிருதிவாதம் அல்லது மெட்டிரியலிசம் என்று தலைப்பிட்டு அவரே பேசியுள்ளார். மற்றொன்று நியாய-வைசேடிகத்தை ஓரளவு சொல்லலாம். இத னுடன் பௌத்தக் கூறு களையும் இணைத்து ஏற்றுக்கொண்டுள்ளார். இதைப் பற்றி இப்போது வெளி யாகியுள்ள, 'இந்தியத் தத்து வங்களும் தமிழின் தடங் களும்' என்ற எனது நூலில், 'பெரியாரும் பௌத்தமும்' என்ற கட்டுரையில், அவரது அனாத்மாவாதம், துக்கம், துக்கநிவாரணம் போன்ற கருத்தாக்கங்கள் குறித்து எழுதியுள்ளேன். பெரியாரிட மும் சாருவாகம் - உலகாயதம், நியாய வைசேடி கம், பௌத்தம் ஆகிய வேர்கள் இருக்கின்றன. ஆனால் இந்த வேர்களை எல்லாம் அவர் ரொம்ப சிலாகிக்க வில்லை. அம்பேத்கர் கூட தன் வேர்கள் குறித்து அவ்வப் போது சிலாகித்துப் பேசியுள்ளார். ஆனால் பெரியார் அந்த மாதிரி சிலாகித்துப் பேசுவதற்காக அந்தத் தத்துவ நூல்களை மெனக்கெட்டுப் படிப்பது போன்ற செயல்களில் ஈடுபடவில்லை. அவரது கேள்வி ஞானம், சில அறிஞர்களுடனான உரையாடல், தேர்ந்தெடுத்த நூல்களைப் படிப்பது ஆகியவையே அவருக்குப் போது மானதாக இருந்தது. திருக்குறளில் பெரியார் நுழைந்து பார்த்துள்ளார். திருக்குறளின் கருத்துகளை ஏற்றுக் கொண்டு உள்ளார். விமர்சனங்களையும் வைத்துள் ளார்.



ந.முத்துமோகன்

சமூக வரலாற்று வெளிகளில் தீவிரமான உரை யாடல்களுக்கு ஒருவர் முயலும்போதே, மரபு சார்ந்த வேர்கள் அவருக்குக் கிடைத்துவிடும். மரபார்ந்த வேர்கள் என்பது, கண்ணை மூடிக்கொண்டு ஒன்றை ஏற்றுக்கொள்வது என்பதல்ல. வேர் என்பது விமர்சன

ரீதியானதாகவும் இருக்க முடியும். நிராகரிப்பாக இருக்கக் கூடாது. நிராகரிப்பு வேறு, விமர்சனம் என்பது வேறு. நிராகரிப்பதை வேர் என்று சொல்ல முடியாது. அப்படிப் பார்க்கும்போது பெரியார், அம்பேத்கருக்கு வலுவான வேர்கள் உண்டு என்பதை மறுக்க முடியாது.

இன்னொரு கோணத்திலிருந்து, இந்திய மரபுகளில் பெரியார், அம்பேத்கருக்கு வலுவான வேர்கள் உண்டு என்று சொல்ல முடியும். அது என்னவென்றால், அவர்கள் பேசிய பிரச்சனைகளின் சமூகவியல் பரிமாணம். சாதி, வருணம், பார்ப்பனியம். இவர்கள் காலத்தில் முன்வைக்கப்பட்ட இந்து மதம் என்னும் அடையாளம். அந்த இந்து மதத்தை வைத்து ஒரு தேசியத்தை உருவாக்கும் அரசியல் ஆகிய பிரச்சினைகளின் மூலமாகவும் அந்த வேர் கிடைக்கின்றது. அதாவது, எந்தப் பிரச்சினையை எடுத்துப் பேசுகிறார்கள். எந்தப் பிரச்சினையை முன்னிலைப்படுத்துகின்றார்கள் என்பது மூலமாகவே, அந்த மரபின் உரையாடல்களில் ஓர் இடம் கிடைத்துவிடுகின்றது.

இந்த அளவுக்கு மார்க்சியர்களுக்கு அந்த வேர்களில் வலு இல்லை. நமக்கு உலகாயத-சாருவாக வேர் உண்டு என்று தேவிபிரசாத் சொல்கிறார். ஆனால் அந்தத் தத்துவச் சொல்லாடல்களில் நமக்கு ஒரு தொடர்ச்சி இல்லை. நாம் சாதி, வருணம், பார்ப்பனியம், இந்து மதம் பற்றியெல்லாம் அதிகமாகப் பேசவில்லை. மார்க்சியர்களைப் பொறுத்தமட்டில், இதில்தான் பிரச்சினை ஏற்படுகின்றது. செவ்வியல் மார்க்சிய மொழியில் சொல்ல வேண்டுமென்றால், மார்க்சியர் சமூக ரீதியாக சாதியைவிட, வர்க்கத்தை முன்னிலைப் படுத்தி விட்டார்கள். நடைமுறைத் தளத்தில் சாதியை எல்லாம் தொட்டு இருக்கின்றார்கள். இல்லையென்று சொல்ல முடியாது. விவசாய இயக்கத்தை நடத்திய போது, சாதிப் பிரச்சினையைத் தொட்டுச் சென்றுள்ளார்கள். நிலச்சுவான்தாரின் சாதி என்ன? கூலி விவசாயிகளின் சாதி என்ன? என்று தெரியாமல் அங்கு படுகொலைகள் நடக்காது. ஆனால், அம்பேத்கர் போல ஏராளமாகக் கருத்தாக்கத் தளங்களில் நுழைந்து நாம் விவாதிக்கவில்லை.

ஆகவே அம்பேத்கருக்கும், பெரியாருக்கும் மரபில் இடம் இல்லை என்று சொல்ல முடியாது. மரபில் இடம் வேண்டுமானால், வேதாந்தத்தைப் பேசினால்தான் உண்டு; சமஸ் கிருதத்தை ஏற்றுக்கொண்டால்தான் உண்டு என்ற வாதம் மிகமிக மொன்னையானது. இது இவர்களிடத்து கிடையாது. ஏன், புத்தரிடமும் அந்த ஏற்பு இல்லைதானே. கபீரிடம் கடுமையான பார்ப்னிய, சனதான, மூடநம்பிக்கை எதிர்ப்பு உண்டு. ஆகவே, பெரியார், அம்பேத்கர் தொட்ட பிரச்சினைகளுக்குச் சமூகரீதியான ஒரு வரலாறு இருக்கின்றது. இந்தப் பிரச்சனைகள் நேற்று, இன்று ஆரம்பித்தவை அல்ல; அவை இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் ஆரம்பித்தவை. அந்தப் பிரச்சினைகளைப் பேசிய அம்பேத்கர், பெரியார் ஆகியோரும் அந்த மரபுகளுள் நின்றும், தாண்டியும் அந்தப் பிரச்சினைகளை எதிர்த்து, வெவ்வேறு தளங்களில் நின்று பேசுகிறார்கள்.

*** பெரியாரையும் அம்பேத்கரையும் சமகால இந்துத்துவ அரசியலுக்கு எதிராக நிறுத்துகிறோம். அவர்கள் நாத்திகர்கள், அவைதீகர்கள் என்பதாலா? அவ்வாறு நிறுத்துவது நம் சமகாலத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்ய முடியுமா?**

பெரியாரையும் அம்பேத்கரையும் இந்துத்துவ அரசியலுக்கு எதிராக நாம் நிறுத்தவில்லை. இந்துத்துவ அரசியலே அவர்களை அவ்வாறு நிறுத்துகிறது. ஹைதராபாத்தில் ரோஹித் வெமுலாவை, ஜே.என்.யூ. மாணவர்களை நாமா இந்துத்துவத்திற்கு எதிராக நிறுத்தினோம். இல்லை, மகாராஷ்டிரம், குசராத், அரியானாவில் தலித்துகள் தாக்கப்பட்டது, தாக்கப்படுவது, அதனால் தலித்துகள் இந்துத்துவத்திற்கு எதிராகப் போராடி வருவது ஆகியவற்றைப் பார்த்தால் நாமாக தலித்துகளை இந்துத்துவத்திற்கு எதிராக நிறுத்தவில்லை. இந்துத்துவமே அவர்களை எதிரிகளாகக் கருதுகின்றது; எதிரிகளாக ஆக்கி வைத்துள்ளது. இதை இந்துத்துவ வாதிகள் சில சமயங்களில் வெளிப்படையாகப் பேசுகின்றார்கள்; சில சமயங்களில் மறைமுகமாகப் பேசுகின்றார்கள். ஆனால் மிகுந்த வக்கிரத்தோடு செயல்படுகின்றார்கள். அதனால் பெரியாரையும், அம்பேத்கரையும் இந்துத்துவ அரசியலுக்கு எதிராக நாம் நிறுத்துகிறோம் என்பது கிடையாது.

சமூகப் படிநிலைகளுக்குச் சமயரீதியான புனிதம் கற்பித்ததை இந்துத்துவவாதிகள் சுயவிமர்சனம் செய்து கொண்டதே கிடையாது. இந்தப் புனிதம் கற்பித்தல் குறித்து, எந்தவொரு மடாதிபதியோ, எந்தவொரு சங்கராச்சாரியாரோ, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எந்தவொரு சைவ மடத் தலைவரோ அதிகாரப்பூர்வமாக சுயவிமர்சனம் செய்து கொண்டதே கிடையாது. மத அந்தஸ்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு மடாதிபதியோ, யோகியோ யாராவது ஒரு இந்துமதத் தலைவர், வருணாசிரமம், சாதி வேறுபாடுகள் இந்து மதத்தில் ஏதோ ஒரு காலத்தில் நுழைந்துவிட்டன. அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று வெளிப்படையாக, பிசிறுகள் இல்லாமல் சொன்னது கிடையாது. ஏதாவது அக்கன்னா, இக்கன்னா போட்டுத்தான் அவர்கள் சொல்கிறார்களே தவிர, வெளிப்படையாகப் பேசுவது கிடையாது.

ஆகவே அம்பேத்கர், பெரியார் ஆகியோரின் தேவை, கால இயைபு, முக்கியத்துவம் எதில் உள்ளதென்றால், தாங்கள் தேர்ந்துகொண்ட விமர்சனக் கருவி, அதை எந்தளவு கூர்மைப்படுத்தியுள்ளார்கள் என்பது போன்ற மற்ற விசயங்களெல்லாம் ஒருபுற

மிருக்க, அவர்கள் தேர்ந்துகொண்டு பேசிய பிரச்சி னையின் தளத்தில் உள்ளது, அதுவே, அவர்களை இந்துத்துவம் நிராகரிக்கும்படி ஆக்கிவிடுகின்றது. அதனால் அவர்களைப் பற்றி நாம் மீண்டும் மீண்டும் பேச வேண்டியதாகவும் உள்ளது.

* **பெரியாருக்குத் தத்துவப் பார்வை உண்டா? அல்லது நடைமுறை ரீதியாக பார்ப்பனியத்தை, சாதியத்தை, இந்து மதத்தை எதிர்த்த, பார்ப்பன ரல்லாத இடைநிலைச் சாதிகளின் நலன்கள் முன் னிறுத்திய சொல்லாடல்கள்தாம் பெரியார் சிந்த னையா?**

இந்தக் கேள்வியில், பெரியாருக்குத் தத்துவப் பார்வை உண்டா, இடைநிலைச் சாதிகளின் நலன்கள் முன்னிறுத்திய சொல்லாடல்கள்தாம் பெரியார் சிந்த னையா என்ற இந்த இரண்டு சொற்றொடர்களும் மிகக் கடுமையானவையாகப்படுகின்றன.

அந்தோனியா கிராம்சி எல்லோருக்கும் தத்துவப் பார்வை இருக்கின்றது என்று சொல்வார். தத்துவம் என்பது என்னமோ தலையில் கொண்டை முளைத்த வருக்கு மட்டும்தான், பல்கலைக்கழகப் படிப்பாளிகளுக்கு மட்டும்தான், பெரிய மேதாவிகளுக்கு மட்டும்தான் என்பதைக் கிராம்சி ஏற்றுக் கொள்ளமாட்டார். அவரைப் பொறுத்தவரையில், அவரது நாட்டுச் சூழலில் கிறிஸ்த வப் பங்குத் தந்தை, பள்ளிக்கூட ஆசிரியர், அந்த வட்டார மக்களை ஒருங்கிணைத்துப் போராடும் செயல்பாட்டா ளர்கள் ஆகிய எல்லோருக்குமே தத்துவப் பார்வை உண்டு. ஆகவே தத்துவப் பார்வை ஒரு அபூர்வமான சங்கதி அல்ல; அசாதாரணமான ஆற்றல் ஒன்றுமில்லை. ஒருவகையில் அது சாதாரணப் பார்வைதான். ஆகவே பெரியாருக்கு மிக வலுவான, வளமான தத்துவப் பார்வை உண்டு என்பதை மேலே உரையாடியவற்றால் அறியலாம்.

இடைநிலைச்சாதிகளின் நலன்களை முன்னி றுத்திய சொல்லாடல்கள்தாம் பெரியாரின் சிந்தனைகள் என்ற குற்றச்சாட்டு திரும்பத் திரும்ப முன்வைக்கப் படுகின்றது. ஒரு கட்டத்தில் இதைத் தோழர் ரவிக் குமார் ஆரம்பித்து வைத்தார். அதுதொடர்ந்து பேசப் பட்டது. இந்த இடத்திலும் நீண்ட நெடிய கால வரலாறு கொண்ட பார்ப்பன எதிர்ப்பை உற்றுப் பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.

பார்ப்பன எதிர்ப்பு புத்தர் காலத்தில் தொடங்கி, சாரு வாகம்-உலகாயதம், தாந்திரிகம், தாந்திரிக அடிப்படை கொண்ட சித்தர் மரபு, பக்தி மரபு, இந்தோ - இசுலாமிய மரபு, சந்தர் மரபு, கபீர் மரபு, குருநானக் கினுடைய சீக்கியம் ஆகிய பல இடங்களில் உள்ளது. பல காலங்களில், பல மரபுகளில் பார்ப்பன எதிர்ப்பில் சத்திரியர்கள், வைசியர்கள், கறாராகக் கலைச் சொற் களைக் கொண்டு குறிப்பிட்டால் கைவினைஞர்கள் போன்ற இடைநிலைச்சாதிகள்தாம் முன்னிலை எடுத்து நின்றிருக்கின்றார்கள். கைவினைஞர்களுக்குச் சித்தர் மரபோடு ஒரு நெருங்கிய தொடர்புண்டு. சித்தர் மரபில் தனிப்பட்ட திறன்களை மையப்படுத்துவதால், அதனைக் கை வினைஞர் சிந்தனை என்று சொல்வார்கள். ஆகவே பார்ப்பன எதிர்ப்பு என்பது பார்ப்பனரல்லாத எல்லாச் சாதிகளிடமும் குறைவாகவோ, அதிகமாகவோ இருந்து வந்திருக்கின்றது. அது நீண்டகால வரலாறு கொண்டது.

தமிழ்நாட்டின் சமகால வரலாற்றில் இடைநிலைச் சாதிகளின் நலன்களை முன்னெடுத்ததில் பெரியாரை யும் திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற தேர்தல் அரசியல் கட்சி களையும் பிரித்துப் பார்க்க வேண்டியுள்ளது. அப்படிப் பிரித்துப் பார்க்காததால், சில சமயங்களில் எல்லாப் பழிகளையும் பெரியார் மீதே சுமத்திவிடுகின்றோம். பெரியாரின் தனிப்பட்ட பண்பு நலன்களே சற்று வித்தியாச மானது. அவை அராஜகப் பண்பு கொண்டவை. இந்த விசயம் பற்றி, எஸ்.வி.ஆரைவிட, பின்னை நவீனத்து வங்கள் வந்த காலத்தில் தெரிதா, பூக்கோ ஆகியோரை எல்லாம் முன்வைத்து அ.மார்க்ஸ் அதிகம் சிந்தித்துள் ளார். பாரதியிடம் எப்படி ரொமாண்டிக்கான கருத்துகள் இருந்தனவோ, அப்படி பெரியாரிடம் ஒரு அராஜக வெடிப்புகள், தீப்பொறிகள் போல கருத்துகள் வந்து விழும். அவர் தன்னை ஒரு மேட்டுக்குடியாக, அறிவாளியாகக் காட்டிக்கொள்ளவில்லை. பட்டறிவுத்தளத்திலிருந்து பேசிய தெறிப்புகள் அவரிடம் உண்டு. ஆகவே அவர் திட்டமிட்டு இடைநிலைச் சாதிகளின் நலன்களைப் பற்றிய உணர்வோடு செயல்பட்டார். அவற்றை முன்னிறுத்திப் பேசினார் என்று என்னால் சொல்ல முடியவில்லை. அவர் முன்வைத்த விவாதத் தளங்கள் நம்மை எங்கெங்கோ அழைத்துச் செல்லும் பண்பு கொண்டவை. அந்த விவாதத் தளங்களின் அடிப்படை விரிவுநிலைப் பண்புகள் மிகப் பரந்தவை. அவற்றால் தாம் நம்மிடையே அவர் தொடர்ந்து நிற்கின்றார்.

பெரியாரிடம் தேர்தல் அரசியல் இல்லை. தேர்தல் அரசியல் நலன்களுக்காக, அந்த ஊரில் உள்ள பெரும் பான்மை சாதி எது, அதிலிருந்து ஓர் ஆளை எடுப்பது, அந்தச் சாதி பற்றி பெருமைப்படுத்திப் பேசுவது எல்லாம் பெரியாரிடம் இல்லை. ஆனால் இவையெல்லாம், இடைநிலைச் சாதிகளின் நலன்களை முன்வைத்துத் தேர்தல் அரசியலைக் கையிலெடுத்த திராவிட இயக்க அரசியல் கட்சிகளிடம் உண்டு. இந்தக் கட்சிகள் இடை நிலைச் சாதிகளை முன்னிறுத்தி, ஆட்களைத் தேர்ந் தெடுத்துள்ளார்கள். ஓட்டு வங்கிகளாக அவர்களைப் பயன்படுத்தியுள்ளார்கள். சில சமயங்களில், சில மோதல்களில் இடைநிலைச் சாதிகளை ஆயுதப் பாணிகள் ஆக்கியுள்ளனர். ஆகவே, பெரியாரையும் தேர்தல் அரசியல் திராவிடக் கட்சிகளையும் பிரித்துப்

பார்க்க வேண்டும். அவ்வாறு பிரித்துப் பார்த்தால்தான் பெரியாரைப் புரிந்து கொள்ள முடியும்; இடைநிலைச் சாதிகளின் நலன்களை முன்னிறுத்திய சொல்லாடல் கள் என்ற குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியாது என்று நினைக்கிறேன்.

சாதி, வருணம், பார்ப்பனியம், இந்துமதம் ஆகிய வற்றுக்கு எதிராக, வலுவாகப் பெரியார் நின்றிருக் கின்றார், அகில இந்திய அளவில், தமிழ்நாட்டில் மட்டும்தான் ஒரே ஒரு பெரியார் இருந்திருக்கிறார் என்று இன்று உணரமுடிகிறது. மதம் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும், கிறித்தவர்கள், இசுலாமியர்கள், சீக்கியர்கள் ஆகியோருக்கு பெரியாரை நோக்கி ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. ஏனென்றால் பெரியார் தான் இந்துப் பெரும்பான்மைவாதத் தேசியத்திற்கு எதிராக வலுவான தளத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளார். அவரைச் சின்னச் சின்ன குற்றச்சாட்டுகளை முன் வைத்துப் புறக்கணிப்பதில் பயனில்லை என்றுதான் நான் எண்ணுகிறேன். இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள் இழப்புகளையும் தோல்விகளையும் சந்திக்க வேண்டிவரும் என்று நினைக் கிறேன்.

* **பெரியார், அம்பேத்கர் ஆகியோரை இந்திய இடது சாரிகள் / மாக்சியர்கள் பயன்பாட்டுவாத நோக்கில் கைகொள்கின்றார்கள். ஆனால், இந்திய மார்க்சி யர்கள் தங்கள் சிந்தனையுடன் இவர்களை இணை வாக்கம் செய்துகொள்ளவில்லை என்ற குற்றச் சாட்டு உள்ளது. இது சரியா? சில தமிழ் மார்க் சியர்கள், மார்க்ஸ் காலத்து முந்தைய ஐரோப்பிய பொருள் முதல்வாத மரபுடன் ஒப்புவைத்து, பெரியாரைக் கொச்சைப் பொருள்முதல்வாதி என்று வரையறை செய்கின்றனர்; வாதிடுகின்றனர். இது சரி தானா? இந்த இந்திய மரபில் தங்கள் வேர் களில் ஊன்றி நின்று, இவர்களையும் தமது ஊற்று களாக இந்திய, தமிழக மார்க்சியர்கள் கொள்ள முடியுமா?**

நமது கட்சியின் பெருந்தலைவர்களில் ஒருவரான ராஜேஷ்வர் ராவ் அறக்கட்டளை, இந்தியப் பொருள் முதல்வாதங்கள் பற்றி ஒரு கருத்தரங்கம் நடத்த இருக்கின்றது. அக்கருத்தரங்கில் கலந்துகொள்ள எனக்கு ஒரு அழைப்பு வந்தது. அந்த அழைப்பை விடுத்த தோழருக்கும் எனக்கும் நடந்த உரையாடலில் நவீன காலத்துக்கு முந்தைய இந்தியப் பொருள் முதல்வாத வகைகளின் முக்கியத்துவம் குறித்து பேசிக் கொண்டோம். இந்தியாவின் அந்தந்த வட்டாரத் தாய்மொழி களில் உள்ள பொருள்முதல்வாதங்கள் பற்றி அறிந்துகொள்ளுதல் மிகமிக அவசியம். பொதுவாகச் சொல்வதென்றால் நவீன காலத்துக்கு முந்திய சிந்தனை முறைகளை அறிந்துகொள்ள வேண்டும்.

கறாராக நோக்கின், நவீன காலப் பொருள் முதல் வாதத்தை முன்னுக்குக் கொண்டு சென்றவர்கள் ஐரோப்பாவின் முதலாளிகள். பாயர்பாக்கின் செர்மானியப் பொருள்முதல் வாதம் மானிடவியல், மனிதப் பண்பியல் சார்ந்த பொருள் முதல்வாதம் என்பார்கள். பிரான்சிஸ் பேக்கன், ஜான் லாக் போன்றோருடைய பொருள்முதல் வாதம் முரட்டுப் பொருள் முதல்வாதம், முதலாளியத்தின் பொருள்முதல்வாதம், வணிகத் தொழிற்சமூகத்தின் பொருள்முதல்வாதம். இதில் கொச்சைத் தன்மை உண்டு. இது அதிகாரத்தின் கோட்பாடாகவும் இருந்தது. பொருள்முதல்வாதம் என்று சொன்னால், நாம் என்னமோ புனிதமான மார்க்சியக் கோட்பாடு போல நினைத்துக் கொள்ள வேண்டியதில்லை.

அறிவியல்-தொழில்நுட்பங்களை அதீதமாக உன் னதபடுத்திப் பார்க்கும்போதுதான், நவீன காலத்துப் பொருள்முதல் வாதங்கள் அதிக அற்புதமானதுபோல தெரியும். ஆனால் நாம் இன்று வாழ்ந்து கொண் டிருக்கிற காலத்தில் அறிவியல்-தொழில்நுட்பங்களை அதிகமாக உன்னதப்படுத்த இயலாது. முதலாளிய காலகட்டத்தில் உருவான கோட்பாடுகள், தொழில்நுட்ப வாதம், பொருளாதாரவாதம் ஆகியவற்றைக் கொஞ்சம் சந்தேகப்பட வேண்டியுள்ளது.

ஆகவே, நான் சொல்ல வருவது என்னவென்றால், நவீன காலத்து ஐரோப்பிய பொருள்முதல்வாதங்கள் என்று பேசப் படுவதைப் போல, மூன்றாம் உலகப் பொருள்முதல்வாதங்கள் பற்றிப் பேச வேண்டும். பழங்குடிகளின் பொருள்முதல்வாதங்கள் பற்றிப் பேசிப் பார்க்க வேண்டும். சாருவாகம் ஒரு பொருள் முதல் வாதம். சாங்கியத்தில் பொருள் முதல்வாதம் உண்டு. தாந்திரிகத்தில் பொருள்முதல்வாதம் உண்டு. வைசேடி கத்தில் பொருள்முதல்வாதம் உண்டு. தமிழில் திணைக் கோட்பாட்டில் பொருள் முதல்வாதம் உண்டு. சாக்த சிந்தனையில் பொருள்முதல்வாதம் உண்டு. இந்திய பொருள்முதல்வாதங்களின் பல்வேறு வடிவங்கள் பற்றி ஆழமாகப் பேச வேண்டும்.

தமிழில் உள்ள திணைக்கோட்பாட்டில் அட்டகாசமான பொருள்முதல்வாதம் இருக்கின்றது. நிலமும் பொழுதும் முதல் எனப் பேசும்போது, அது வித்தியாசமான பொருள் முதல்வாதத்தைப் பேசுகிறது. மார்க்ஸ் காலத்துக்கு முந்தைய பொருள்முதல்வாதங்கள் சரியானவை அல்ல என்று கழித்துக் கட்டுகிற வரைசட்டகமே சரியான தில்லை.

பெரியார் ஒரு வித்தியாசமான பொருள்முதல்வாதி. அவர் கொச்சைப் பொருள்முதல்வாதி அல்ல. அப்படி வரையறுப்பது தவறு. இந்தியச் சூழல்களில் பார்ப் பனிய எதிர்ப்பு சார்ந்த, பெரியாரின் நாத்திகம் என்பது ஒரு நியாயமான வரலாற்றுத் தொடர்ச்சியின் - Histori-cal Argumentative - வரலாற்று நிலைப்பாட்டின்

உச்சம்; எல்லை. ஆகவே அதை அப்படியே நிராகரித்து விட, மறுதலித்துவிட முடியாது. அதனுடன் நின்று தான், நாம் அதைக் கொஞ்சம் நெகிழ்வார்ந்த நிலைக் குக் கொண்டுச் செல்லலாம். வித்தியாசமான இயங்கியல் நிலைக் குப் பயணிக்கலாம். ஆனால் பெரியார் பேசிய நியாயத்தன்மை கொண்ட வைதீக எதிர்ப்புப் பொருள் முதல்வாதம் என்பது ஒரு வரலாற்று அறிவிக்கை. பழைய தத்துவார்த்தக் கலைச் சொற்களில் சொன்னால் வரலாற்றின் மகாவாக்கியம். அதனால் பெரியார் சிந்தனை நெடுநாளைக்குத் தங்கி நிற்கும்.

மாறும் அரசியல் விவாதச் சூழ்நிலைக்கு ஏற்ப, இன்னும் சில புதிய நெகிழ்வார்ந்த நிலைக்குக் கொண்டுச் செல்ல வேண்டியதாக இருக்கலாம். இப்போது நாத்தி கம், செக்குலரிசம் - சார்பின்மைவாதம் பற்றி புதிய விவாதங்கள் எழுந்துள்ளன. அவற்றுக்குப் பண்பாட்டு வேர்கள் இல்லை என வாதிடப்படுகின்றது. மானிட வியல் ஆய்வுகளின், பண்பாட்டு ஆய்வுகளின் வழியாக அவற்றுக்குப் பண்பாட்டு வேர் கிடைக்கும்போது, பண்பாட்டு வேர் கொள்ளல் நடக்கும்போது அவை சற்று வேறுவிதமாக மாறக்கூடும். தமிழிலேயே பண்பாடு மற்றும் பெரியாரியம் பற்றிய விவாதம் நடந்திருக்கின்றது. இவற்றைத் திராவிட இயக்கச் சிசுக்களும் நாமும் செய்துள்ளோம். தொ. பரமசிவன் முழுக்க, வலுவான பெரியாரியவாதி. ஆனால், மானிட வியல், நாட்டார் வழக்காற்றியல் வழியிலான ஆய்வுகள் செய்திருக்கின்றார். பண்பாட்டுக் கூறுகளையெல் லாம் ஆழமாகத் தன்வயப்படுத்திக் கொள்வார். ஆனாலும்கூட பெரியார் சிந்தனை என்பது வரலாற்று வாக்கியம். அதை நிராகரிக்க முடியாது. கொஞ்சம் நெகிழ்வாக்கம் செய்யலாம். பெரியார் கொச்சைப் பொருள்முதல்வாதி என்பதெல்லாம் பொறுப்பில்லாத, அப்புறப்படுத்த வேண்டிய வார்த்தைகள்.

எஸ்.வி.ஆருடைய பணிகள், அ.மார்க்ஸ் உள்ளிட்ட பின்னை நவீனத்துவரின் வேலைகள், பெண்ணிய தளங் களிலிருந்து வ. கீதா அவர்கள் பெரியாரைத் தன தாக்கிக் கொள்ளும் இடங்கள் போன்ற நியாயப்பாடுகள் வலுவாகும்போது, மார்க்சியர்களாகிய நமது பார்வை களும் மாறிக்கொண்டே வருகின்றது. பயன்பாட்டுவாத நோக்கில் பெரியாரை எடுத்துக்கொண்டோம் என்று சொல்ல முடியாது. பெரியாரை ஏற்றுக்கொள்ளலாமா, வேண்டாமா என்ற விவாதம் நம்மிடையே நீண்ட நாள்களாக நடைபெற்று வருகின்றது. நாம் பெரியாரை ஏற்றுக்கொள்ள முடியாமல் போனமைக்குப் பலவித காரணங்கள் இருந்திருக்கின்றன. எரிச்சல்படுத்தக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியலும் சில சமயங்களில் காரணமாக இருந்திருக்கின்றது.


'பெரியார் சுயமரியாதை சமதர்மம்' எஸ்.வி.ஆர். - வ. கீதா ஆகியோரின் மிக நல்ல படைப்பு. அதில் அவர்கள் பெரியார், சுயமரியாதை சமதர்மக் கட்சி ஆரம்பிப்பதற்கு முயன்றதைப் பற்றியெல்லாம் விரிவாக ஆவணப்படுத்தியுள்ளனர். அது நமக்குப் புதுவெளிச்சங் களைத் தருகின்றன. பெரியாரின் சில பரிமாணங்கள் பற்றிய அ. மார்க்சின் பார்வைகளும் மிக முக்கிய மானவை. பெரியாரிடம் உள்ள கட்டவிழ்த்தல், அராஜகக் கூறுகள் இல்லாமல் இந்தியப் பழமையை எதிர் கொள்ள முடியாது என்று அ. மார்க்சின் பார்வை முக்கியமானது.

ஆனால் நாம் இன்னும் இயங்கியல் பொருள்முதல் வாதம் என்ற சொல்லை மட்டும்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்தியச் சூழல்களுக் குள் பொருள்முதல் வாதம் என்பது சாதி, அதைத் தாங்கிப் பிடிக்கிற சனாதனம், இந்துத்துவம் ஆகியவற்றை விமர்சிக்கின்ற ஒன்றாகத்தான் இருக்க முடியும். அப்படி உருவானால்தான் சமூகத்திற்கும் பயனுடையதாக இருக்க முடியும் . இதில்லாமல் வெறும் வர்க்கவாதம் பேசினால் பயனில்லை.

(நன்றி : நியூசெஞ்சுரியின் ''உங்கள் நூலகம்'' 2017 ஏப்பிரல் இதழ் - தோழர் ந.முத்துமோகன் அவர்களின் நேர்காணல் சற்று சுருக்கித்தரப்பட்டுள்ளது)

---

## அரியலூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் தோழர் த.ஆறுமுகம் மறைந்தார்



அரியலூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினராக 10 ஆண்டு கள் விளங்கியவரும், 50 ஆண்டு களுக்கு மேலாகத் திராவிட முன் னேற்ற கழகச் செயல் வீரராகத் திகழ்ந்தவருமான மதிப்புக்குரிய தோழர் த.ஆறுமுகம் அவர்கள் 29.4.2017 சனி அதிகாலை 1 மணிக்குத் தம் 84ஆம் வயதில் மறைவுற்றார் என்பதை வருத் தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த த.ஆறுமுகம் அவர்கள் எடுத்துக்காட் டான சுயமரியாதைக் கொள்கையாளர்; எண்ணற்ற சுயமரியாதைத் திருமணங்களைத் தலைமை தாங்கி நடத்தியவர்; தந்தை பெரியாரின் தோழர்களிடம் தோழமைக் கொண்டிருந்தவர். அன்னாரின் மறைவு அரியலூர் பகுதி திராவிட இயக்கத்துக்கு மிகப்பெரிய பேரிழப்பாகும். அண்ணாதுரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தாருக்கு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த வருத் தத்தைத் தெரிவித்து கொள்கிறேன்.

**29-4-2017** **- வே. ஆனைமுத்து**

# மாமேதை டாக்டர் அம்பேத்கர் – புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 127ஆவது பிறந்த நாள் விழா கூட்டங்கள்

**சென்னை :**

மாமேதை டாக்டர் அம்பேத்கர்-புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 127ஆவது பிறந்த நாள் விழா 18.4.2017 செவ்வாய் மாலை 5 மணிக்கு சென்னை, திருவல்லிக்கேணி அரசு அலுவலர் ஒன்றியக் கட்டடத்தில், மா.பெ.பொ.க. சென்னை மாவட்டச் செயலாளர் வாலாசா வல்லவன் தலைமையில் நடைபெற்றது. இனாமுல் ஹசன், குட்டம் சிவாஜி முத்துகுமார், இரா. தொல் காப்பியன், சோ. அண்ணாதுரை, பா.வை. அருண்மொழி, சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞரும் மா.பெ.பொ.க. மகளிரணிச் செயலாளருமான கோவிராமலிங்கம், தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் புலவர் கி.த. பச்சையப்பன், மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் சி.பெரியசாமி, ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து சிறப்புரை ஆற்றினார். ப.வடிவேலு நன்றியுரையுடன் இரவு 9 மணிக்கு கூட்டம் நிறை வடைந்தது.

**காஞ்சி :**

காஞ்சியில் மாமேதை பீமராவ் அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 127ஆம் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் 19.4.2017 புதன்கிழமை மாலை 6.30 மணியளவில், காந்தி சாலை, பெரியார் நினைவு தூண் அருகில், காஞ்சி மாவட்டச் செயலாளர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்றது தோழர் தீ. கோபாலகிருட்டிணன் வரவேற்புரையாற்றினார். தோழர்கள், துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி, பாலாறு பாதுகாப்புக் கூட்டியக்க ஒருங்கிணைப்பாளர் காஞ்சி அமுதன், வேளாண் அணிச் செயலாளர் அரங்க. சானகி ராமன், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்ற மாவட்டச் செயலாளர் குறள் அமிழ்தன் ஆகியோர் உரையாற்றினர். பொதுச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து நிறைவுரை ஆற்றினார். மா. கோதண்டபாணி நன்றியுரையுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது. கூட்டத்தில் தோழர்கள், நகரச் செயலாளர் மு. செயப்பிரகாசு, வ. வேதகிரி, ச. சிவகுமார், இரா. நாராயணமூர்த்தி, பூ.கா. பொன்னப்பன், கீழம்பி முத்து, நாத்திகம் நாகராசன், க. கோதண்டம், இரா. ஆதிகேசவன், இரா. இராசசேகர் ஆகியோர் பங்கேற்றனர்.

**வேலூர்**

20.4.2017 அன்று வேலூர் நகர அரங்கத்தில் புரட்சியாளர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் வேலூர் மாவட்டத் துணைச் செயலாளர் மா. தசரதன் தலைமையில் மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து, துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி, பேராசிரியர் இர. நடராசன், சா. குப்பன், மோ.சி. சங்கர், ந. மதனகவி ஆகியோர் கருத்து ரைத்தனர். உ.வே. இரத்தினகுமார் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது.

**கீழ்ப்பென்னாத்தூர்**

புரட்சியாளர் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர், பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் 127ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் திருவண்ணாமலை மாவட்ட மார்க்சியப் பெரி யாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் கீழ்ப்பென்னாத் தூரில் 21-04-2017 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் பொன்.சுப்பிர மணியன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைச் செயலாளர் கோ.கோதண்டராமன் வரவேற்புரையாற்றினார். மாநில துணைப் பொதுச் செயலாளர், சி.பெரியசாமி, க.ஆதிமூலம், மா.முருகேசன், தி.மு.க. இலக்கிய அணிச் செய லாளர் கோ.அண்ணாமலை, பா.ம.க. மாவட்டச் செயலாளர் பெ.பலரமான், மக்கள் ஜனநாயக் குடியரசுக் கட்சியின் இணைப் பொதுச் செயலாளர் முகிலன் ஆகியோர் அம்பேத்கர், பாரதிதாசன் கொள்கைகளின் இன்றையத் தேவைப்பாடு குறித்து உரையாற்றினர். இறுதியாக மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து நிறைவுரை ஆற்றினார். தோழர் கி.இராமநாதனின் நன்றி கூறலுடன் நிகழ்ச்சி இரவு 9.30 மணிக்கு நிறைவடைந்தது. பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்களும், பொதுமக்களும் இந்நிகழ்ச்சியில் திரளாகப் பங்கேற்றனர். தோழர் க.ஆதிமூலம் தன் இல்லத்தில் இரவு உணவளித்தார்.

**திருச்சி**

மாமேதை புரட்சியாளர் அம்பேத்கர்-புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் 127ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா-பெரியார் பெருந்தொண்டர் வே.ஆனைமுத்து அவர்களின் 92ஆம் ஆண்டு பிறந்தநாள்விழா திருச்சி உறையூர் கைத்தறி நெசவாளர் திருமண மண்டபத்தில் ம.பெ.பொ.க.திருச்சி மாவட்டச் செயலாளர் இரா.கலிய பெருமாள் தலைமை வகித்தார். ந.கருணாகரன் வரவேற்புரையாற்றினார், துணைப் பொதுச் செயலாளர் சி.பெரியசாமி, எஸ்.எஸ்.முத்து, வீ.ந.சோமசுந் தரம், கோ.பார்த்தசாரதி, சு.முருகானந்தம், குறளன்பன், சி.இராதாகிருட்டிணன், சீனி.விடுதலை அரசு, துரை.சித்தார்த் தன், இரா.பொன்னுச்சாமி, ஈகவரசன், வி.கே.மணிமாறன் ஆகியோர் உரையாற்றினர். மா.பெ.பொ.க.பொதுச் செய லாளர் வே.ஆனைமுத்து நிறைவுரையாற்றினார். மு.நரசிம்மன் நன்றியுரைடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

# தமிழ் இனமும் ஐக்கிய நாடுகள் சபையும்

**- பாஸ்கரன் கிருஷ்ணமூர்த்தி**

**ஐ.நா.** சபையின் மனித உரிமை அமைப்பில் சில நாள்களுக்கு முன்பு ஒரு தீர்மானம் (எண்.34/1) நிறைவேற் றப்பட்டு இருக்கிறது. இதன்படி, இலங் கையில் நடைபெறும் புனரமைப்பு/மறுவாழ்வு நடவடிக் கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய இரண்டு ஆண்டுகள் கால நீட்டிப்பு வழங்கப்பட்டு உள்ளது.

ஏற்கெனவே 2015 அக்டோபர் 1-ஆம் தேதி ஐ.நா. சபை நிறைவேற்றிய தீர்மானம் (எண்.30/4), கூறிய படி, செயல்படுத்துவதைத்தான் இப்போது நீட்டித்து இருக்கிறது. இது, அநீதி என்று (நியாயமாக) குரல்கள் எழுந்து உள்ளன.

கால நீட்டிப்பு இருக்கட்டும். அதைவிட அநியாயம், வேறு ஒன்று இருக்கிறதே!

2015இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண்.30/4, என்ன சொல்கிறது...? இதற்கும் முன்னதாக, எண்.19/2 - 22 மார்ச் 2012, எண்.22/1 - 21 மார்ச் 2013, எண்.25/1 - 27 மார்ச் 2014 என்று பல தீர்மானங்கள் நிறைவேறி உள்ளன.

**இவற்றில் எல்லாம், தமிழர்களுக்கு நீதி வழங்கப் பட்டுள்ளதா...? மிக நிச்சயமாக இல்லை. ஐ.நா. சபை நிறைவேற்றி உள்ள அத்தனை தீர்மானங் களிலும், சமீபத்திய ஒன்றையும் சேர்த்து, ஒரு மிகப் பெரிய அநீதி, ஒளிந்து கிடக்கிறது; உண்மை; வெறும் புகார் அல்ல. இவற்றில் எந்தத் தீர்மானத் திலும் எங்கும், 'தமிழ்', 'தமிழர்கள்', 'தமிழ் இனம்' என்கிற சொல்லே இல்லை. ஒரே ஒருமுறை கூட, இச்சொல் வராத படிக்குப், பார்த்துப் பார்த்து மிகுந்த கவனத்துடன் இந்தத் தீர்மானங்கள் வரையப்பட்டு உள்ளன.**

அடிக்கடி எல்லோராலும் குறிப்பிடப்படுவது - 2015 அக்டோபர் 1ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானம். (எண்.30/1), இலங்கை நாட்டு மக்கள் அனைவரை யும் பொதுவாக வைத்து, மனித உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது - 20 அம்சங்கள், ஐந்து பக்கங்களுக்கு நீளும் இந்தத் தீர்மானம்.

**தமிழ் இன மக்களின் இழப்பு, பாதிப்பு என்றெல் லாம் தப்பித் தவறிக்கூடச் சொல்லவில்லை. எல்லா மக்களின் உரிமைகள் என்றுதான் ஒவ்வோர் இடத்தி லும் கூறப்படுகிறது.**

தீர்மானம் (எண்.30/1), இலங்கையில் சமரசம், பொறுப் புணர்வு மற்றும் மனித உரிமைகளை மேம் படுத்துதல் (Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka) என்றுதான் தலைப்பிடுகிறது.

இலங்கையின் இறையாண்மை, சுதந்தரம், ஒற்றுமை, எல்லைகளின் ஒருமைப்பாட்டை மறு உறுதி செய்வதாகத்தான் இத்தீர்மானம் தொடங்கவே செய்கிறது. மனித உரிமைகளை, அடிப்படை சுதந் தரத்தை, மொத்த மக்கள் தொகையும் முழுமையாக அனுபவிப்பதை உறுதி செய்தல், அந்த நாட்டு அரசின் முழுப் பொறுப்பு என்கிறது. இது ஒட்டுமொத்தமாக இலங்கை அரசின் கட்டுப்பாட்டுக்குள் வருகிற விவகாரம்; ஐ.நா.வுக்கோ 'மற்றவர்களுக்கோ' இதில் செய்வதற்கு ஒன்றும் இல்லை என்பதை உரக்கச் சொல்வது போலத்தான் தீர்மானம் தொனிக்கிறது.

அதாவது, 'உரிமைப் பந்து', இப்போதும், எப்போதும் இலங்கை அரசின் கோட்டுக்குள்தான் இருக்கும் என்று நிறுவுகிறது. இத்துடன் நின்றுவிடவில்லை. ஒரு நீண்ட பட்டியல் இட்டு இவற்றையெல்லாம் வரவேற்பதாகவும் சொல்கிறது.

அவை என்னென்ன...?

சனவரி, ஆகசுட்டு 2015இல் நடைபெற்ற 'வரலாற்றுச் சிறப்பு மிக்க' சுதந்தரமான நேர்மையான தேர்தல்கள் மூலம் இலங்கையில் நடைபெற்ற சனநாயக முறை யிலான அரசியல் மாற்றத்தை; முன்னர், மோதல் (conflict) காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளில், சிவில் நிர்வாகத்தை வலுப்படுத்த எடுத்து வரும் முயற்சிகளை உள்கட்டமைப்பு வசதிகளை மறுநிர்மாணம் செய்வதில் இலங்கை அரசு கண்டுள்ள முன்னேற்றத்தை; உள்நாட்டில் இருப்பிடம் இழந்த (displaced) ஆள்கள், (கவனிக்கவும் - தமிழர்கள் அல்ல) மற்றும் உள்நாட்டில் இவ்வாறு உள்ள 'எல்லா' மக்களுக்கும் உதவ வேண்டி உலக நாடுகளுக்கு இலங்கை அரசு விடுத்த அழைப்பை...

மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் சரியானதாகத் தோன்றும் இந்த 'வரவேற்பு' மொழிகள், உண்மையில் இலங்கை அரசின் எல்லா நடவடிக்கைகளுக்கும் ஒட்டுமொத்த ஆதரவைத் தெரிவிப்பதாகத்தான் உள்ளதே தவிர, மிக மோசமாக பாதிக்கப்பட்ட ஓர் இன மக்களுக்கு ஆறுதல் தருவ தாக இல்லை. இதிலே இன்னொரு வேடிக்கை. இலஞ்சம், ஊழல், மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச் சாட்டுகளைப் புலனாய்வு செய்யும் இலங்கை அரசின் நடவடிக்கைகளைப் பாராட்டுகிறது தீர்மானத்தின் ஓர் அம்சம்.

**2015 பிப்பிரவரி 4ஆம் தேதி ஒரு பிரகடனத் தில், இனம், மத வன்முறையால் இறந்தோர், பாதிக்கப்பட்டோருக்கான அறிவிப்பை இலங்கை**

**அரசு வெளியிட்டது. இதனையும் ஐ.நா. வரவேற்கிறது. சூட்சுமம் புரிகிறதா? இது முழுக்கவும் இன வன்முறை அல்ல; மத அடிப் படையிலும் வன்முறை என்று கூறுகிறது இலங்கை அரசு. இதனைத் தான் வரவேற்கிறது ஐ.நா. சபை.**

இந்தத் தீர்மானம்தான் என்று இல்லை. 2014 ஏப்ரல் 9ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண்.25/1 இதையேதான் கூறுகிறது. இந்து, முசுலீம், கிறிஸ்தவ சமுதாய மக்களுக்கு எதிரான தாக்குதல்களில், ஐ.நா. சபை (alarmed) துணுக்குறுகிறதாம். கோயில், மசூதி, சர்ச் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைப் புலனாய்வு செய்ய வலியுறுத்துகிறது.

**தீர்மானத்தின் நான்காவது அம்சம், 'இரு தரப்பும்' செய்த மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்களைப் புலனாய்வு செய்யக் கேட்கிறது. அம்சம் 10 (b). நன்றாகத் திட்டமிட்டு தீர்மானத்தில் எங்கும் ஒரு முறையும் 'தமிழ்' என்கிற சொல் வராமல் மிகுந்த கவனத்துடன் இலங்கை அரசு சொற்படி, ஐ.நா. இதனை வரைந்தாற்போல் தெரிகிறது.**

இல்லை, இல்லை. ஒரே ஒரு இடத்தில் 'தமிழ்' வருகிறது. தீர்மானத்தின் அம்சம் 5 பக்கம் 3-இல், ஒரு போராளி அமைப்பின் 'மீறல்கள்' காரணமாக எழுந்த இழப்புகளை ஈடு செய்வது குறித்து சொல்லப்படுகிறது. அவ்வமைப்பின் பெயரிலேயே தமிழ் இருப்பதால் (The Liberation Tigers of Tamil Eelam) 'வேறு வழி இன்றி'த் தீர்மானத்திலும், 'தமிழ்' இடம்பெற்றுவிடுகிறது!

இனப் போர், இனப்படுகொலை என்கிற கோணம் வராதபடியேதான் ஐ.நா. சபையின் அணுகுமுறை ஆரம்பத்தில் முதலே இருந்து வந்துள்ளது. மத அடிப்படையிலும் மோதல்கள் நிகழ்ந்ததாகவும், இலங்கையின் எல்லா மக்களும் பாதிக்கப்பட்டதாகவும், ஒட்டுமொத்த நாடுமே மறு நிர்மாணம் செய்யப்பட வேண்டும் என்பதாகவும் இலங்கை அரசு, போலியான ஒரு காட்சியை உருவகப்படுத்துகிறது; இதற்கு, ஐ.நா. சபை முற்றிலுமாகத் துணை போய் இருக்கிறது என்கிற தோற்றம் ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை.

**அடித்தவரை சகட்டு மேனிக்குப் பாராட்டுகிறது; அடிபட்டவர்களின் அடையாளத்தைக்கூட அங்கீகரிக்க மறுக்கிறது; இன அழிவு குறித்து எல்லாம் கவலையே இல்லை என்று, அனைவருக்கும் பொதுவான, ஓர் உலக அமைப்பு செயல்பட முடியுமா...? இலங்கை அரசு உண்மையான அக்கறையுடன் செயல்படுவதாக வாழ்த்துப் பத்திரம் வாசிக்கும் ஐ.நா. சபை. 'இனம்', 'மொழி' ஆகிய மனித இனத்தின் ஆதி அடையாளங்களை, அகராதியில் இருந்தே அகற்றிவிட்டதோ...?**

**- 'தி இந்து', 27.3.2017**

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்



### கூ. சரவணன் - ஜெ. மாலதி

பெரம்பலூர் வட்டம், கூடலூர் மு. கூத்தன் - நீலாவதி ஆகியோரின் மகனும், திருமானூர் ஒன்றிய ம.தி.மு.க. மாணவரணி அமைப்பாளருமான சரவணன், அரியலூர் மாவட்டம், தட்டான்சாவடி க. செகநாதன் - பானுமதி ஆகியோரின் மகள் மாலதி ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த விழா, 12.4.2017 புதன் காலை 10 மணிக்கு, திருமானூர் சாமி திருமண மண்டபத்தில் மிகச் சிறப்புற நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ம.தி.மு.க. செயலாளரும், வழக்குரைஞருமான கு. சின்னப்பன் விழாவுக்குத் தலைமை ஏற்றார்.

ம.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் க. மாணிக்கவாசு வரவேற்புரை ஆற்றினார்.

மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து மணவிழா ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைத்தார்.

மணமக்களை வாழ்த்தி தஞ்சை மண்டல தி.க. தலைவர் வி. செயராமன், ம.தி.மு.க. பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் செ. துரைராஜ், துணைச் செயலாளர்ா கி. இராசேந்திரன் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினர். மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் இரா. கலியமூர்த்தி, வழக்குரைஞர் பொன். சிவகுருநாதன் பங்கேற்றனர்.

**மணமக்கள், "சிந்தனையாளன்" புரவலர் கட்டணமாக ரூபா 5,000 (அய்யாயிரம்) வழங்கினர்.**

மாவட்ட ம.தி.மு.க. மாணவரணி துணை அமைப்பாளர் பால. கபிலன் நன்றியுரையுடன் மன்றல் விழா இனிதே முடிவுற்றது.

## சிறுநாத்தூர் ப.சுப்பிரமணியன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள்



திருவண்ணாமலை மாவட்டம் சிறுநாத்தூர் கிராமத்தில் தான் வாழ்ந்த பகுதிக்கு பெரியார் நகர் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தவர் ப.சுப்பிரமணியன். ப.சு.காளியப்பனின் தந்தையும் சிந்தனையாளன் மேலாளர் ப.வடிவேலுவின் மூத்த அண்ணனுமான ப.சுப்பிரமணி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் 19-4-2017 அன்று குடும்பத்தினரால் கடைப்பிடிக்கப்பட்டது. அன்னாரின் முதலாண்டு நினைவாக சிந்தனையாளன் வளர்ச்சிக்கு ரூ.500/- அளிக்கப்பட்டது.

## தேனாம்பேட்டை தேநீர் கடையில் கேட்ட செய்தி

7.4.2017 அன்று தேனாம்பேட்டை அப்பல்லோ மருத்துவமனையின் பின்புறம் உள்ள சாலையோரத் தேநீர் கடையில் தேநீர் அருந்தி கொண்டிருந்தேன். அப்பொழுது இரு காவல்துறையினர் பேசிக் கொண்டிருந்தனர்.

முதல் காவலர் பேசியது : "நேற்று அந்த மீஞ்சூர் பார்ட்டியின் உடலை 20 இலட்சம் பாக்கி பணம் கட்டிவிட்டுதான் வாங்கவேண்டும் என்று அவருடைய உறவினர்களிடம் அப்பல்லோ மருத்துவமனையில் கூறி விட்டனர். அதற்கு மீஞ்சூர்காரர்கள், "காப்பாற்றுவதாகக் கூறிவிட்டு இப்போது சாகடித்துவிட்டுப் பணம் கேட்கிறீர்கள். நாங்கள் சும்மாவிடமாட்டோம். மருத்துவ மனை மீது வழக்குப் போடுவோம் என்றனர்" என்று முதல் காவலர் கூறினார்.

அதற்கு இரண்டாம் காவலர், "நமக்கு ஏன் வம்பு. நம்ம டிபார்ட்மெண்ட் பேர் கெட்டுவிடக்கூடாது. நாம் எல்லாம் பொது மக்களுக்கும் காவலர்கள்; நமக்குக் கொடுக்கும் சம்பளத்திற்கு நாம் ஒழுங்காக வேலை செய்ய வேண்டும்" என்றார்.

முதல் காவலர் : "யோவ் நீ ஏன் இப்படிப் பேசுகிறாய்? மறைந்த முதல்வர் செயலலிதா அவர்கள் இறப்பைப் பற்றி வெளிப்படையாக அப்பல்லோ மருத்துவமனை வெளியிடவில்லை. பணத்திற்காக மூடிமறைத்துள்ளது. கிடைத்த வரைக்கும் இலாபம். பொது மக்களாவது மண்ணாவது" என்றார்.

இரண்டாம் காவலர் : "நீ திருந்தமாட்ட. தென்மாவட்டத்தினர் இப்படித்தான் இருப்பீர்களா? நாமும் நல்லவர்களுக்குப் போராடுவோம். பொதுப் பிரச்சனைக்காகப் போராடுவோரை மிகவும் மரியாதையுடன் நடத்த வேண்டும். பிரச்சனைகளைக் கவனித்து தீர்வுகாண வேண்டும்.

முதல் காவலர் : கட்சிக்காரர்கள் அடிக்கும் கொள்ளையைவிட நாம் பெரிதாகச் செய்யவில்லை. ஆட்சியாளர்கள் யோக்கியனாக இருந்தா, நாமும் யோக்கியனாக இருக்கலாம். இன்னொரு செய்தி, மீஞ்சூர் பார்ட்டியின் உறவினர் உடலை ராஜீவ் காந்தி மருத்துவமனைக்கு மாற்றிவிட்டார்களாம். அப்பல்லோ நிர்வாகம் எப்படி தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றது பார்த்தியா? பெரிய, பெரிய மருத்துவமனைகள் உயிரைக் காப்பதை விட பணத்தை வாங்குவதில் குறியாக உள்ளன. வா போகலாம். ஏ.சி. தேடுவார் என்றார்.

நானும் குடித்த தேநீருக்குக் காசு கொடுத்துவிட்டு புறப்பட்டேன். அவர்கள் குடித்த தேநீருக்கு காசு கொடுக்காமல் புறப்பட்டனர்.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி மே-2017

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பென்னத்தூர் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **கோ. தாமோதரன்** | புதுச்சேரி | 120/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.பத்மநாபன்** | மாதவரம் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - மே-2017

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119